இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண்கள் *1174-1175/2019*

(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண்கள் 7581-7582/2014-லிருந்து எழுகிறது)

மனோகரன் ... மேல்முறையீட்டாளர்

-எதிர்-

மாநில அரசு,
காவல் ஆய்வாளர் மூலமாக
வெரைட்டி உறால் காவல் நிலையம்,
கோயம்புத்தூர். ... எதிர்மேல்முறையீட்டாளர்

<u>தீர்ப்புரை</u>

<u>மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர்.எ.ப். நாரிமன்:</u>

1. அனுமதி வழங்கப்பட்டது.

2. தற்போதைய மேல்முறையீடுகள் மிகக் கொடூரமான வன்புணர்ச்சி மற்றும் கொலை புரிந்தமைக்காக எழுந்தவையாகும். இம்மேல்முறையீடுகளின் மதிப்பீட்டிற்கான சுருக்கமான பொருண்மைகள் பின்வருமாறு.

3. மோகனகிருஷ்ணன் என்பவர் ஒரு வண்டியை அதன் உரிமையாளரான அ.சா.7-யிடமிருந்து பெற்றுக்கொண்டு பள்ளி செல்ல தயாராகிக் கொண்டிருந்த இரு குழந்தைகளான 10 வயதான ஒரு சிறுமியையும், 7 வயதான அவளது சகோதரனையும் (29.10.2010 அன்று காலை 7.50 மணிக்கு) ஓர் இந்து கோயிலின் வெளியிலிருந்து அதில் ஏற்றிக்கொண்டு சென்றார். அந்தக் குறிப்பிட்ட விநாயகர் கோயிலின் பூசாரியான அ.சா.3-ம், அவ்விரு குழந்தைகளின் பாட்டியும் இந்த மோகனகிருஷ்ணன் மேற்சொன்ன வண்டியில் குழந்தைகளைக் அழைத்துச்செல்வதைப் பார்த்தனர். மோகனகிருஷ்ணன் அதே நாளன்று காலை

சுமார் 8.15 மணியளவில் குழந்தைகளுடன் பெட்ரோல் நிலையத்திற்கு வண்டியை ஓட்டிச்சென்று, காலை 9.30 மணியளவில் அங்காளகுறிச்சியிலுள்ள மேல்முறையீட்டாளரை அவரது வீட்டிலிருந்து அழைத்துச்சென்றார். பின்னர் சுமார் காலை 10.45 மணியளவில் ஒதுக்குப்புறமாய் அமைந்துள்ள பகுதியான கோபால்சாமி கோயில் மலைக்குன்று பகுதிக்கு குழந்தைகளை அழைத்துச்சென்று, அங்கு மோகனகிருஷ்ணனும், மேல்முறையீட்டாளரும் அச்சிறுமியின் கைகளை கட்டிவிட்டு, வன்புணர்ச்சி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. அதன்பிறகு, அச்சிறுமியை மிருகத்தனமாக வன்புணர்ச்சி செய்துவிட்டு, (அவளது குதம் சிறைவுற்றிருந்தது) இரு எதிரிகளும், சாணத்தில் பூச்சிவராமல் தடுக்கும் ஒரு விஷப்பொருளான சாணப்பொடியை வாங்கி வந்தனர். இதிலுள்ள மேல்முறையீட்டாளர் வாங்கி வந்த பாலுடன் இவ்விஷப்பொருளைச் சேர்த்து, அவ்விரு குழந்தைகளையும் தீர்த்துக்கட்டிவிடும் முயற்சியில் அவர்களுக்கு அதனைக் குடிக்கக் கொடுத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டது. பாலுடன் கலக்கப்பட்ட மாட்டுச் சாணப்பொடியினை இரு குழந்தைகளும் சிறிதளவே உட்கொண்டதால், அவர்கள் இறக்கவில்லை. அதன்பிறகு, அவ்விரு குழந்தைகளையும் தீர்த்துக்கட்டுவதற்கு, அவர்களை பரம்பிக்குளம் ஆழியாறு திட்டக் கால்வாயில் (**"ப.ஆ.கா. திட்டம்"**) தூக்கி எறிந்தனர், இதிலுள்ள மேல்முறையீட்டாளர் அச்சிறுமியை கட்டி கால்வாய்க்குள் தள்ளிவிட்டதாகவும், அதேவேளையில் அந்த ஆண்குழந்தையை மோகனகிருஷ்ணன் கால்வாய்க்குள் தள்ளிவிட்டதாகவும் அரசுத்தரப்பு குற்றஞ்சாட்டியது. மாலை 5.00 மணிக்கு, அவ்விரு குழந்தைகளின் பள்ளிப் பைகள் கால்வாயில் மிதந்துக்கொண்டிருப்பதை அ.சா.24 பார்த்தார். பின்னர் அவை அ.சா.22-யிடம் கொடுக்கப்பட்டன. பின்னர் அதே நாளன்று மாலையில் அ.சா.22 பள்ளியின் முதல்வரான அ.சா.10-க்கு தகவல் தெரிவித்ததும்,

பின்னர் அவர் அதே நாளன்று மாலை 6.15 மற்றும் 6.30 மணிக்கிடையே காவல்துறையிடம் தகவலளித்தார். அதே நாளன்று இரவு 9.00 மணியளவில் மோகனகிருஷ்ணன் அ.சா.7-ஆன அன்பு என்கிற காந்திராஜின் வீட்டிற்குச் சென்றார், அவர் காவல்துறைக்கு தகவலளித்ததன் விளைவாக மோகனகிருஷ்ணன் அன்றிரவு 9.45 மணிக்கு அ.சா.7-இன் வீட்டில் கைது செய்யப்பட்டார். மறுநாள் காலை 9.30 மணியளவில் அப்பெண் குழந்தையின் சடலம் கால்வாயிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. 31.10.2010 அன்று இந்த மேல்முறையீட்டாளர் காலை 7.15 மணியளவில் கைது செய்யப்பட்டார். அதே நாளன்று, அந்த ஆண் குழந்தையின் சடலமும் கால்வாயிலிருந்து கண்டெடுக்கப்பட்டது. இச்சம்பவக் கூற்றை நிறைவு செய்யும்விதமாக ஓர் எதிர்பாராத போராட்டத்தில் 9.11.2010 அன்று மோகனகிருஷ்ணன், காவல்துறையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஆதலால், மேல்முறையீட்டாளர் மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டவராக விசாரிக்கப்படவேண்டியவரானார். நீதித்துறை நடுவர் முன்பாக மேல்முறையீட்டாளரால் 20.11.2010 அன்று குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், பிரிவு 164-இன் கீழ் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது, மேல்முறையீட்டாளர், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம் பிரிவு 313-இன் கீழ் அதனை ஒரு வாக்குமூலமாகக் கருதும்படி 25.7.2012-ஆம் தேதியிடப்பட்ட ஒரு கடிதம் மூலம்தான் விசாரணை நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார், அதில் பகுதி மறுக்கப்பட்டது.

4. அரசுத்தரப்பு அதிக எண்ணிக்கையிலான மொத்தம் 49 சாட்சிகளை விசாரித்தது. விசாரணை நீதிமன்றம் இறுதியாக அளித்த விரிவான தீர்ப்புரையில் மேல்முறையீட்டாளரை, இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 120-ஆ, பிரிவு 364-அ,

பிரிவு 376, பிரிவு 302, பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 மற்றும் பிரிவு 201 ஆகியவற்றின் கீழ் குற்றவாளியெனத் தீர்மானித்தது. இ.த.ச., பிரிவு 376-இன் கீழ், மேல்முறையீட்டாளருக்கு ஆயுள் தண்டனை தீர்வளிக்கப்பட்டது மற்றும் அவர் புரிந்த குற்றத்திற்காக இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் அவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

5. மெட்ராஸ் உயர் நீதிமன்றம் 24.3.2014-ஆம் தேதியிடப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில், தண்டனைச் சட்டம் பிரிவு 120-ஆ மற்றும் 364-அ-இன் கீழ் மேல்முறையீட்டாளரின் தண்டனைத் தீர்ப்பை நீக்கறவு செய்தாலும், பிரிவுகள் 376, 302, பிரிவு 302 உடனிணைந்த பிரிவு 34 மற்றும் பிரிவு 201 ஆகியவற்றின் கீழ் தண்டனைகளை உறுதிசெய்தது. குற்றத்தினை கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளைப் பரிசீலித்தபிறகு, உயர் நீதிமன்றம், இறுதியாக விசாரணை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதிசெய்தது.

6. இரு குழந்தைகளையும் பணையத் தொகைக்காக கடத்திய குற்றத்தினை மெய்ப்பிக்கும்பொருட்டு, நிறைய சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். இக்குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர் விடுவிக்கப்பட்டபோதிலும், பின்வரும் சாட்சிகளின் சாட்சியத்தை ஆழ்ந்தாராய்ந்த பிறகு, இவ்வழக்கின் பொருண்மைகளிலிருந்து கடைசியாகப் பார்த்தல் கோட்பாடு மெய்ப்பிக்கப்பட்டது.

1. கோயில் பூசாரியான அ.சா.3-சுந்தரராஜன் 29.10.2010 அன்று காலை சுமார் 8.00 மணியளவில் மோகனகிருஷ்ணன் இரு குழந்தைகளையும் ஏற்றிக்கொண்டு செல்வதைப் பார்த்தவர்.

2. தையற்காரரான அ.சா.20-செந்தில்குமார், அதே நாளன்று இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் குழந்தைகளுடன் காலை 10.00 மணியளவில் பார்த்தவர்.

3. கோபால்சாமி மலைக்குன்றுகளின் அடிவாரத்திலுள்ள செங்கல் சூளையின் உரிமையாளரான அ.சா.25-என்.மணி, இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும், குழந்தைகளும் கோபால்சாமி மலைக்குன்றிலிருந்து கீழிறங்கி வந்துகொண்டிருக்கும்போது காலை சுமார் 10.45 மணிக்கு அவர்களை பார்த்தவர்.

4. அடுமனையின் உரிமையாளரான அ.சா.23-சரவணக்குமார், அதே நாளன்று மேல்முறையீட்டாளருக்கு மதியம் 1.00 மணிக்கு பால் விற்றவர், இரு குழந்தைகளையும் மோகனகிருஷ்ணன் மற்றும் மேல்முறையீட்டாளருடன் பார்த்தவர் மற்றும்

5. அ.சா.24-ஆர். சௌந்தரராஜன், அதே நாளன்று மதியம் சுமார் 3.00 மணியளவில் இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களை குழந்தைகளுடன் மாருதி வேனில் பார்த்தவர்.

இச்சாட்சியங்களின் அடிப்படையில், நீதிமன்றம் தீர்மானித்ததாவது:-

> "38. (அ) கோயில் பூசாரியான சுந்தரராஜன் [அ.சா.3] 29.10.2010 அன்று காலை சுமார் 8.00 மணியளவில் மோகனகிருஷ்ணன் இரு குழந்தைகளையும் ஏற்றிக்கொண்டு செல்வதைப் பார்த்தவர்; (ஆ) செந்தில்குமார் [தையற்காரர், அ.சா.20] அதே நாளன்று இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும் குழந்தைகளுடன் காலை 10.00 மணியளவில் பார்த்தவர்; (இ) கோபால்சாமி மலைக்குன்றுகளின் அடிவாரத்திலுள்ள செங்கல் சூளையின் உரிமையாளரான என்.மணி, [அ.சா.25] இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும், குழந்தைகளும் கோபால்சாமி மலைக்குன்றிலிருந்து கீழிறங்கி வந்து கொண்டிருக்கும்போது

காலை சுமார் 10.45 மணிக்கு அவர்களை பார்த்தவர்; (ஈ) "வின்னர் அடுமனை"-இன் உரிமையாளரான சரவணக்குமார், [அ.சா.23] அதே நாளன்று மேல்முறையீட்டாளருக்கு மதியம் 1.00 மணிக்கு பால் விற்றவர், இரு குழந்தைகளையும் மோகனகிருஷ்ணன் மற்றும் மேல்முறையீட்டாளருடன் பார்த்தவர் மற்றும் (உ) ஆர். சௌந்தரராஜன், [அ.சா.24] அதே நாளன்று மதியம் சுமார் 3.00 மணியளவில் இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களை குழந்தைகளுடன் மாருதி வேனில் பார்த்தவர், ஆகியோரின் சாட்சியங்களை ஆழ்ந்தாராய்ந்த பிறகு, மோகனகிருஷ்ணன் இரு குழந்தைகளையும் ஏற்றிக்கொண்டு சென்றதையும் பின்னர் அவருடன் மனோகரன் சேர்ந்துக்கொண்டதையும் இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் இரு குழந்தைகளும் கடைசியாகக் காணப்பட்டதையும் அரசுத்தரப்பு நியாயமான சந்தேகத்திற்கப்பால் மெய்ப்பித்துள்ளது. ஆதலால் அரசுத்தரப்பு கடத்தல் மற்றும் கடைசியாகப் பார்த்தல் கோட்பாடு ஆகியவற்றை எள்ளளவு சந்தேகமுமின்றி நிரூபித்துள்ளது என்று கூறுவதில் எங்கள் மனதில் எந்தத் தயக்கமுமில்லை."

அச்சிறுமி, மேல்முறையீட்டாளரால் வன்புணர்ச்சி செய்யப்பட்டாள் என்பது தொடர்பாக, உயர் நீதிமன்றம் பின்வருமாறு முடிவு செய்துள்ளது:-

"44. சுருங்கக்கூறின், தடய அறிவியல் ஆய்வக வல்லுநரான அ.சா.43-சரவணனின் உதவியுடன், மாருதி வேனிலிருந்து 29.10.2010 அன்று முடிகளுடன் கூடிய ஜட்டி சா.பொ.1 கைப்பற்றப்பட்டு, அது, தாமதமின்றி நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது, அதன்பிறகு, நீதிமன்றம் அதனை தடய அறிவியல் துறைக்கு அனுப்பியது, அங்கு டி.என்.ஏ. ஒப்பீடு செய்தபிறகு, மனோகரனின் இரத்தத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட டி.என்.ஏ. பண்புக்கூறுகளுடன் அந்தரங்க முடிகளிலுள்ள டி.என்.ஏ. பண்புக்கூறுகள் ஒத்துப்போவதாக வல்லுநர்கள் கருத்துரைத்துள்ளனர்.

45. நாங்கள் மேற்படி 9-ஆவது பத்தியில் "x-இன் வன்புணர்ச்சி தொடர்பான சாட்சியம்" குறித்த விவாதத்தை நிறைவுசெய்யாமல் விட்டதால், ஜட்டி (சா.பொ.1)-ஐ கைப்பற்றியது தொடர்பாக திரு. எ. இரகுநாதன் அவர்களால் எழுப்பப்பட்ட வாதக்கூறுகளுக்கு பதிலளித்து, தற்போது அதை நாங்கள் முடித்துவைக்கிறோம்.

46. (அ) 'x' பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டார் என்று மருத்துவர் ஜெயசிங்கின் இறுதிக்கருத்துரை; (ஆ) மனோகரனின் ஆண்குறியின் மீதான காயம்; (இ) 'x'-இன் சடலத்தில் ஜட்டி இல்லாமை; (ஈ) மாருதிவேனில் ஜட்டி (சா.பொ.1) இருத்தல்; (உ) 'x'-இன் தந்தையால் ஜட்டி (சா.பொ.1) அடையாளம்

காட்டப்பட்டிருத்தல்; (ஊ) அதை கைப்பற்றிய சமயத்தில் அதில் முடிகள் இருத்தல் மற்றும் (எ) முடியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட டி.என்.ஏ. பண்புக்கூறுகள் மனோகரனுடன் ஒத்துப்போதல் ஆகியவற்றிலிருந்து மனோகரன் 'x'-ஐ பாலியல் வன்முறைக்குட்படுத்தினார் என்று நாங்கள் தீர்மானிக்கிறோம்."

நீதித்துறை நடுவரிடம் மேல்முறையீட்டாளரால் கொடுக்கப்பட்ட ஒப்புதலுரைக்கு உயர் நீதிமன்றம் சில பக்கங்களை ஒதுக்கியது. உயர் நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

"47. மனோகரின் ஒப்புதலுரை:

கோயம்புத்தூர் நீதித்துறை நடுவர் எண் 1, எல். சத்தியமூர்த்தி-அ.சா.28, 19.11.2010 அன்று மனோகரனிடம் விரிவான விசாரணை நடத்தி, அவர் தன்விருப்பமாகத்தான் ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருந்தாரா? எனக் கண்டறியும்பொருட்டு பலதரப்பட்ட விசாரணை மேற்கொண்டு விசாரித்தார். கேள்விகள் தமிழில் கேட்கப்பட்டு கற்றறிந்த நீதித்துறை நடுவர் அவர்களால் பதில்களும் தமிழிலேயே பதிவுசெய்யப்பட்டது. அவரிடம் 19.11.2010 அன்று 17 கேள்விகள் கேட்கப்பட்டன. அதன்பிறகு, அவர் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பதற்காக சிறைக்கு அனுப்பப்பட்டு, மீண்டும் அடுத்த நாள் அதாவது 20.11.2010 அன்று ஆஜர்ப்படுத்தும்படி உத்தரவிடப்பட்டது. 20.11.2010 அன்று கற்றறிந்த நீதித்துறை நடுவர், அவரிடம் ஒன்பது கேள்விகளைக் கேட்டிருக்கிறார். மேலும், மனோகரன் ஒப்புதலுரை ஏதும் கொடுக்கத் தேவையில்லை என்றும் அவர் கூறியுள்ளார். மேலும், 19.11.2010 மற்றும் 20.11.2010 ஆகிய நாட்களில் நீதித்துறை நடுவரால் மேற்கொள்ளப்பட்ட முதல்நிலை விசாரணையை நாங்கள் ஆராய்ந்து, ஒப்புதலுரை அளிப்பதற்கான அவரது உரிமைகளையும், மேலும் அதற்கான பின்விளைவுகளையும் குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிந்துகொள்வதற்கு நீதித்துறை நடுவர் உண்மையான முயற்சி மேற்கொண்டுள்ளாரேயன்றி அவர் இயந்திரகதியாக செயல்படவில்லை என நாங்கள் அறிகிறோம். சிந்தனை செய்து முடிவெடுப்பதற்கு போதுமான கால அவகாசம் கற்றறிந்த நீதித்துறை நடுவரால் கொடுக்கப்பட்டபின், அவரது ஒப்புதலுரையைப் பதிவு செய்ய முற்பட்டார்."

பின்னர், மேல்முறையீட்டாளரிடம் மேற்படி நடுவரால் கேட்கப்பட்ட சில தொடர்புடைய கேள்விகள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளன:-

"49. கற்றறிந்த மூத்த வழக்குரைஞரால் முன்வைக்கப்பட்ட வாதங்களை நாங்கள் கூர்ந்தாராய்ந்தோம், ஆதலால் 19.11.2010 மற்றும் 20.11.2010 ஆகிய தேதிகளில் நீதித்துறை நடுவரால் கேட்கப்பட்ட கேள்விகளை நாங்கள் கவனமுடன் நுண்ணாய்வு செய்தோம்.

கற்றறிந்த நீதித்துறை நடுவர் 19.11.2010 அன்று 17 கேள்விகளைக் கேட்டார். சில தொடர்புடைய கேள்விகள் வருமாறு: (ஆங்கில மொழியாக்கம்)

கேள்வி எண் 5: நான் கோயம்புத்தூர் நீதித்துறை நடுவர் எண் 1 என்பது உங்களுக்கு தெரியுமா?

பதில்: ஆமாம். இது நீதித்துறை நடுவர் நீதிமன்றம் என்று எனக்கு தெரியும், ஆனால் இதன் எண்ணை உங்களிடமிருந்துதான் தெரிந்துகொண்டேன்.

கேள்வி எண் 9: நீங்கள் இங்கு எதற்காக வந்துள்ளீர்கள் என்று உங்களுக்கு தெரியுமா?

பதில்: நான் நீதித்துறை நடுவரிடம் உண்மையான வாக்குமூலமளிக்க விரும்புகிறேன். அதனால்தான் இங்கு வந்திருக்கிறேன்.

கேள்வி எண் 10: காவல்துறையினர் நீங்கள் வாக்குமூலமளிக்க எந்த விதத்திலாவது உங்களை துன்புறுத்தினார்களா?

பதில்: இல்லை. அந்த மாதிரி எதுவும் நடக்கவில்லை.

கேள்வி எண் 11: ஒப்புதல் வாக்குமூலம் அளித்தால் உங்களுக்கு நன்மை விளையும் என்றோ, மேலும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்காவிட்டால் அவர்கள் உங்களை ஏதும் செய்துவிடுவார்கள் என்றோ காவல்துறையினரோ அல்லது வேறெவருமோ உங்களிடம் கூறினார்களா?

பதில்: அப்படி எவரும் என்னிடம் எதுவும் சொல்லவில்லை.

கேள்வி எண் 12: நீங்கள் ஒப்புதலுரை அளிப்பது உங்கள் உடமையல்ல என்பதை நீங்கள் அறிவீர்களா?

பதில்: நீங்கள் இப்போது என்ன கூறினீர்களோ அதிலிருந்து நான் அதை புரிந்துகொண்டேன்.

கேள்வி எண் 15: நான் மீண்டும் ஒருமுறை இக்கேள்வியை உங்களிடம் கேட்கிறேன். ஒப்புதலுரை அளிக்க எவரேனும் உங்களை துன்புறுத்தினார்களா? அல்லது உங்களை தூண்டினார்களா?

பதில்: இல்லை. எவரும் என்னை துன்புறுத்தவில்லை.

50. மீண்டும் 20.11.2012 அன்று மனோகரன் ஒப்புதலுரை அளிக்க தன்னிச்சையாக விருப்பம் தெரிவித்தாரா? என்பதைக் கண்டறியும்பொருட்டு, அவரிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டன. அதன்பிறகுதான் கற்றறிந்த நீதித்துறை நடுவர் ஒப்புதலுரையைப் பதிவு செய்துள்ளார்.

ஒப்புதலுரையானது பின்னர் பகுதி மறுக்கப்பட்டதால், உயர் நீதிமன்றம் வழக்கின் இந்த அம்சத்தைப் பின்வருமாறு விவாதித்தது:-

"61. இவ்வழக்கில் 20.11.2010 அன்று ஒப்புதலுரை பதிவு செய்யப்பட்டு அது 13.8.2012 அன்று திரு. எல்.எஸ். சத்யமூர்த்தி (அ.சா.28) அவர்களை குறுக்குவிசாரணை செய்யும்போதுதான் மறுக்கப்பட்டது. மனோகரனிடம் கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழ் பின்வரும் கேள்வியைக் கேட்டபோது, அதாவது நீதித்துறை நடுவர் கோயம்புத்தூரில் நீதித்துறை நடுவராய் இருந்ததாகவும், மனோகரனின் ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுசெய்யும்பொருட்டு நீதிமன்றத்தில் 19.11.2010 அன்று மனோகரனை அவர் விசாரித்ததாகவும், அதற்காக அவர் உரிய நடவடிக்கைகள் எடுத்து, மீள் சிந்தனை செய்வதற்கு 24 மணிநேர கால அவகாசமும் அளித்ததாகவும், அவர் உரியமுறையில் பதிவுசெய்த ஒப்புதல் வாக்குமூலம் 17 பக்கங்கள் வரை சென்றதாகவும் தனது சாட்சியத்தில் கூறியுள்ளார். ஒப்புதல் வாக்குமூலம் என்பது அ.சா.ஆ.18 ஆகும். இதற்கு நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? எனக் கேட்டதற்கு மனோகரன் அளித்த பதில் "சரி" என்பதாகும். மனோகரனின் இந்த ஒற்றைப் பதில், ஒப்புதலுரை தன் விருப்பமானதா? என்பதை உறுதிப்படுத்துவதற்கான உரிய நடைமுறையை நடுவர் பின்பற்றவில்லை என்ற எதிர்வாதத்தை தகர்த்தெறிகிறது.

62. xxx xxx xxx

63. திரு. எல்.எஸ். சத்யமூர்த்தி-அ.சா.28 அவர்களின் சாட்சியம் தொடர்பாக, கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழான மனோகரனின் வாக்குமூலத்தை நாங்கள் ஏற்கெனவே எடுகுறிப்பிட்டிருக்கிறோம். திரு. எல்.எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் 13.8.2012 அன்று குறுக்கு

விசாரணை செய்யப்பட்டு, அச்சாட்சியத்திற்குப் பிறகு, கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழ் இந்த வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதாவது 13.8.2012 அன்று, வழக்குரைஞரால் அ.சா.28 குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது, ஒப்புதலுரை மறுக்கப்பட்டது. ஆனால் பின்னிட்டு 4.9.2012 அன்று 313-இன் படியான விசாரணையில் ஒப்புதலுரையானது முறையாகப் பதிவு செய்யப்பட்டதாக மனோகரன் ஒப்புக்கொண்டார். மனோகரனின் ஒப்புதல் வாக்குமூலங்களிலுள்ள குற்றப்பழி சுமத்திய பகுதி தொடர்பாக 27.2.2014 அன்று கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழ் அவரை நாங்கள் விசாரித்தோம். அச்சமயத்தில், அவர் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க, காவல்துறையினர் அவரை கட்டாயப்படுத்தியதாகக் கூறினார்.

64. 1973-ஆம் ஆண்டு கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழான வாக்குமூலமாக அது கருதப்படவேண்டுமென தான் விரும்புவதாக மனோகரனால் சிறையிலிருந்து, அமர்வு நீதிபதிக்கு முகவரியிட்டு எழுதப்பட்ட 25.7.2012-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தைக் குறித்து நாங்கள் தற்போது குறிப்பிடுகிறோம். அக்கடிதத்தில், காவல்துறையினர் தன்னை குற்றம் செய்ததை ஒப்புக்கொள்ளச் செய்ததாகவும், அது காவல்நிலையத்தில் படம்பிடிக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார். அதன்பிறகு, நடுவருக்கு அந்தப் படக்காட்சியைப் போட்டுக் காண்பித்தனர்; நடுவர் அப்படக்காட்சியைப் பார்த்தே ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதிக்கொண்டார். அதாவது நடுவர், அவரிடமிருந்து நேரடியாக வாக்குமூலம் ஏதும் பதிவுசெய்யாமல், படக்காட்சியிலிருந்து வாக்குமூலத்தைப் பார்த்து எழுதிக்கொண்டார். இதுதான் வாக்குமூலம் மறுக்கப்பட்டதற்கான காரணமாகச் சொல்லப்பட்டுள்ளது. அத்தகையதோர் கூற்றை, திரு. சத்தியமூர்த்தி, நடுவர் அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோதுங்கூட கேட்கவில்லை. மேற்குறிப்பிடப்பட்ட சுப்ரமணிய கவுண்டன் வழக்கில் அந்த ஆய்வைப் பொருத்திப்பார்த்து, நாங்கள் இந்த வாக்குமூலம் மறுக்கப்பட்டதை சாதாரணமாக எடுத்துக்கொண்டு, அதனை நிராகரித்துவிடமுடியாது."

பின்னர், மேல்முறையீட்டாளரால் தன்விருப்பமாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கப்பட்டது என்றும், அது மறுக்கப்பட்டது என்பது பிற்சிந்தனையானது என்பது தெளிவாகத் தெரிகிறது என்றும் உயர் நீதிமன்றம் தீர்மானித்தது.

மேல்முறையீட்டாளரால் அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமானது, உயர் நீதிமன்றத்தால் பின்வருமாறு சொற்பிறழாது கொடுக்கப்பட்டுள்ளது:-

"66. தமிழில் மனோகரனால் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமானது ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பட்டது, அது கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

"நான் வெள்ளிக்கிழமைகளில் எனது தாயாரான அமாவாசை செல்வியுடன் பூ வியாபாரம் செய்வதற்கு செல்வது வழக்கம். எனக்கு தேதி சரியாக நினைவிலில்லை. இரண்டு வாரங்களுக்கு முன்பு ஒரு வெள்ளிக்கிழமையில் நான் எனது பூ வியாபாரத்தை முடித்துவிட்டு, காலை 9.15 மணியளவில் காலை உணவு சாப்பிட்டேன். அதன்பிறகு, நான் எனது உரிமையாளரான தம்பு அவர்களின் டிராக்டரில் வேலையைக் கவனிக்கச் செல்லும்போது, என்னுடன் அங்காளக்குறிச்சியில் உள்ள பள்ளியில் 7-ஆம் வகுப்புவரை ஒன்றாகப் படித்த எனது நண்பன் மோகனகிருஷ்ணன் எனது வீட்டிற்கு காலை 9.30 மணியளவில் மாருதி ஆம்னி வேனில் வந்தான். அவனுக்கு எனது வீடு தெரியும். என்னை அவன் ஆழியாறு அணைக்கு வர அழைத்தான். அவன், எனது வீட்டின் அருகில் கிடந்த சில கயிறுகளைக் கேட்டான், அவற்றை எடுத்துச்சென்று, ஆம்னி வேனில் வைத்தான். அவன் என்னை வேனில் ஏறுமாறு கேட்டுக்கொண்டான். நான் ஆம்னி வேனில் ஓட்டுநர் இருக்கைக்கு அடுத்து அமர்ந்துக்கொண்டேன். பள்ளிச் சீருடையில் ஒரு பையனும், ஒரு பெண்ணும் பின்னிருக்கையில் அமர்ந்திருந்தனர். நான் அவர்களைப் பற்றிக் கேட்டபோது, அவர்கள் ஆழியாறு பார்க்க வந்திருப்பதாகவும், பள்ளிப் பேருந்து ஏற்கெனவே முன்னே சென்றுவிட்டதாகவும் அவன் என்னிடம் கூறினான். நாங்கள் ஆழியாறு சாலையில் இருந்த குளத்துமேட்டுக்கு அருகே அமைந்திருந்த மோகனகிருஷ்ணனின் வீட்டிற்கு சென்றபோது, அங்கு ஒரு தையற்காரர் இருந்தார். அவன் அந்த தையற்காராரிடம் இரண்டு உறைகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டான். ஆம்னி வேனில் அமர்ந்திருந்த நபர்களை தையற்காரர் பார்க்கும் வாய்ப்பில்லை. வண்டி, சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டது. இதற்கிடையே ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. நான் அதுகுறித்து கேட்டபோது, தொலைபேசியில் பேசியது அவனது தாயார் என்று மோகனகிருஷ்ணன் கூறினான். மீண்டும் நாங்கள் அந்த வண்டியில் என்னுடைய வீட்டிற்கு போனோம். அவன் என்னிடம் ஐம்பது ரூபாய் எடுத்துவருமாறு கூறினான். நான் அதை என்னுடைய தாயாரிடமிருந்து பெற்றுவந்தேன். அவன் தனது வீட்டை சுத்தம் செய்வதற்காக இரண்டு மாட்டுச் சாணப்பொடி பாக்கெட்டுகளை வாங்கிக்கொள்ள என்னிடம் சொன்னான். நான் எனது வீட்டிற்கு அடுத்திருந்த நாயகம் கடையிலிருந்து ரூ.12/-க்கும், ரூ.6/-க்குமாக தலா இரண்டு பாக்கெட்டுகளை வாங்கினேன். நான் அவற்றை ஆம்னி வேனில் வைத்தேன், நாங்கள் நேராக கோபால்சாமி கோயில் மலைக்குன்றுக்கு சென்றோம். நாங்கள் குன்றின் அடிவாரத்தில்

வண்டியை நிறுத்திவிட்டு, குன்றின்மேல் செல்வதற்கு நடந்தோம். மோகனகிருஷ்ணன், குழந்தைகளிடம் புலி, சிங்கம் மற்றும் மான் ஆகியவற்றைப் பார்ப்பதற்காக குன்றின்மேல் ஏறுமாறு கூறினான். இருவரும் அதாவது, அந்தப் பெண் குழந்தையும், ஆண் குழந்தையும் கொஞ்சதூரம் ஏறிவிட்டு நின்றுவிட்டனர். அவர்கள் மேலே வரமாட்டோம் என பிடிவாதம் பிடித்தனர். அவர்கள் பள்ளிக்குச் செல்ல விரும்புவதாகக் கூறி அழத் தொடங்கினர். உடனடியாக, மோகனகிருஷ்ணன் வண்டி செயலிழந்து நின்றுவிட்டது என்றும், தாங்கள் உடனே புறப்பட்டு பள்ளிக்கு வந்துவிடுவோம் என்றும் முதல்வர் ஐயாவிடம் பேசுவதைப்போன்று தனது கைப்பேசியை எடுத்து பொய்யாக அழைத்துப் பேசினான். அவன், பள்ளிக்கு வர தாமதமானதற்கு முதல்வரிடம் மன்னிப்பு கேட்டு, அவனது வார்த்தைகளை குழந்தைகள் நம்பும்படி செய்தான். ஆனால், அந்த சிறுவன், தனது சகோதரியிடம் தங்களது மொழியில் போகவேண்டாம் என்று கூறினான். பிறகு அவர்கள் இருவரும் அழத் தொடங்கினர். எனவே, நாங்கள் அனைவரும் குன்றின்மேல் செல்லாமல் திரும்பிவிட்டோம். உடனே, நாங்கள் கோபால்சாமி மலைக்குன்றின் அடிவாரத்திலிருந்து புறப்பட்டு, மஞ்சநாயக்கனூர், கம்பளம்பட்டியை கடந்து, பாலத்தைக் கடந்து கால்வாய்க்கு பக்கத்திலுள்ள இடத்திற்குச் சென்றோம். அந்த இடம் சுற்றிலும் மரம், செடி, கொடிகளுடன் ஒரு பெரிய காடுபோல தோற்றமளித்தது. எனக்கு அந்த இடத்தின் பெயர் சரியாக தெரியாது. நாங்கள் ஒரு மரத்தினடியில் வண்டியை நிறுத்தினோம்; நான் அவசரமாக இயற்கையின் அழைப்பை நிறைவேற்றச் செல்வதாகக் கூறினேன். அவ்வாறு சொல்லிவிட்டு, நான் கால்வாய் பக்கம் சென்றேன். வண்டியில் இருந்த பையன் வெளியில் வராமல் இருப்பதற்காக ஓட்டுநர் இருக்கைக்கு பக்கவாட்டில் கயிற்றால் கட்டப்பட்டான். அவன், பெண் குழந்தையை மட்டும் பின்னிருக்கையில் போட்டு, அவளது கைகளை பின்னால் கட்டினான். நான் அவனிடம் கேட்டதற்கு, அவனுக்கும், அவளது தந்தைக்கும் ஒரு பேரம் இருப்பது பற்றி உனக்குத் தெரியாது என்று கூறினான். பிறகு மோகன் தனது உடைகள் அனைத்தையும் களைந்துவிட்டு மேற்படி பெண்ணின் ஜட்டியைக் கழற்றிவிட்டு, அவள்மீது அவன் படுத்துக்கொண்டான். நான் கேட்டதற்கு, அச்சிறுமியை அவன் பாலியல் தொழிலாளியாக ஆக்கப்போவதாக என்னிடம் கூறினான். அவன் அச்சிறுமியிடம் உடலுறவு கொண்டு, அவளை வன்புணர்ச்சி செய்தான். அச்சமயத்தில் அச்சிறுவன் அங்கிருந்தால் அது தர்மசங்கடமாக இருக்கும் என்று நான் நினைத்து, நான் மெதுவாக அவனை வெளியில் அழைத்துச்சென்றேன். பின்னர் சிறிதுநேரம் கழித்து, நான் அச்சிறுவனுடன் திரும்பிவந்தேன். பிறகு நான் மோகனிடம், அவன் எப்படி உணர்வதாகக் கேட்டேன். அதற்கு அவன், அவனுடைய ஆணுறுப்பைச் சரியாக உட்செலுத்த முடியவில்லை என்று

கூறினான். நான் அவனிடம் எனக்கு ஒரு வாய்ப்புத் தருமாறு கேட்டேன். உடனே அவன் என்னை அச்சிறுமியிடம் உடலுறவு கொள்ளச் சொன்னான். மோகன் முன்னிருக்கையில் அமர்ந்துகொண்டு கவனித்துக்கொண்டிருந்தான். நான் சென்று பின்னிருக்கையில் இருந்த ஜட்டி அணிந்திருக்காத அச்சிறுமியைப் பார்த்தேன். நான் என்னுடைய ஆண்குறியை முன்பக்கம் வைத்தபோது, அச்சிறுமி வலிப்பதாக கூறி அழுதாள். மேலும், அவள் முரண்டு பிடித்தாள். பிறகு நான் அவளது பின்பக்கத்தில் குதவாய் வழியாக அவளுடன் உடலுறவு கொண்டேன். அதுவும் எனக்கு சரியாக அமையவில்லை. உடனே நான் எனது பாலுணர்வை வெளிக்காட்டி விந்து திரவத்தை வெளிப்படுத்திவிட்டேன். இந்த விசயம் வெளியில் தெரிந்துவிட்டால் பெரிய பிரச்சனையாகிவிடும் என்று நினைத்து நாங்கள் 4 பேரும் வண்டியில் எங்கள் வீட்டின் அருகே சென்றோம். அங்கு, நான் பத்து ரூபாய்க்கு ஒரு பிளாஸ்டிக் உறையில் பால் வாங்கினேன். பால் குழந்தைகளுக்கு தேவைப்படும் என மோகன் என்னிடம் பால் வாங்கச் சொன்னான். அதை குழந்தைகள் நம்புவதற்காக, நாங்கள் தண்ணீர் பாட்டிலில் பாலை உற்றி, அதில் மாட்டுச் சாணப்பொடியைக் கலந்தோம். நாங்கள் அதை குழந்தைகளை குடிக்கச் செய்தபோது, அச்சிறுமியும், சிறுவனும் பாதி விழுங்கிவிட்டு, மீதி பாதியை இருக்கையின்மீது துப்பிவிட்டார்கள். நான் மேற்படி பாலை வாங்கியபோது, பயன்படுத்திவிட்டு எறிந்துவிடும் இரண்டு பிளாஸ்டிக் டம்ளர்களை வாங்கினேன். அதனை, அது வழியாக குடிக்கும்படி அவர்களிடம் சொன்னேன். அவள் அதில் பாதியை விழுங்கிவிட்டு, மீதிப் பாலை துப்பிவிட்டாள். மாட்டுச் சாணப்பொடியை கொடுத்தபிறகு, நாங்கள் மீண்டும் மஞ்சநாயக்கனூருக்கு ஆம்னி வண்டியை ஓட்டிச்சென்றோம். நாங்கள் தீபாளிபட்டிக்கு செல்லும்போது மதியவேளை இருக்கும். எங்களுக்கு சரியான நேரம் தெரியவில்லை. அந்த நிலைமையில், மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்திற்குத்தான் ஒருவர் எப்போதும் போகவேண்டும் என்று அவன் என்னிடம் சொன்னான். அவன் கால்வாய் அருகே சென்று அச்சிறுமியை தள்ளிவிட்டு திரும்பிவிட்டான். அதன் பின்னர், அவனுக்கு அதிகமாக வியர்த்திருந்தது. அதன்பிறகு, நான் அச்சிறுவனை தள்ளிவிட்டேன். அவன் தண்ணீர் ததும்ப ஓடிக்கொண்டிருக்கும் கால்வாயில் தண்ணீர் ஓடும் வழியாக அடித்துச் செல்லப்பட்டான். பிறகு, சிறிது தூரம் பயணித்தபிறகு, மோகன் வண்டியை நிறுத்திவிட்டு, என்னைப் பார்த்தபோது, என்னையும் தள்ளி விட்டுவிடுவதைப்போன்று பார்த்தான். ஆனால் நாங்கள் பள்ளிப் பையை எடுத்து அதை கால்வாயில் தூக்கி எறிந்தோம். பின்னர், அவனுக்கு இருபது இலட்சம் ரூபாய் கிடைக்கும் என்று அவன் நினைப்பதாக என்னிடம் சென்னான், மேலும், இந்நிகழ்வு இந்த முறையில் முடிந்தது. அதன்பிறகு அவன் தலைமறைவாகிவிடுவான் என்றும் என்னிடம்

சொன்னான். அவன் குறும்பாக "ஆம்பிளை-சிங்கம்" என்று என்னிடம் சொல்லி, எவரிடமும் இதை சொல்லக்கூடாது என்று கூறி, அவனுடன் வருமாறு என்னிடம் சொன்னான். மோகன், எனக்கு ஓர் ஆட்டோ ரிக்ஷா வாங்கித்தருவதாக என்னிடம் கூறியதால், நான் மோகனுடன் சென்றேன் மற்றும் இது இவ்வாறாகவே நடந்தது. பிறகு, மோகன் அதே நாளன்று இரவு 7.30 மணிக்கு என்னுடைய கைபேசி எண் 9790299953-க்கு அவனுடைய கைபேசி எண்ணிலிருந்து அழைத்து, என்னிடம் பேசினான். எனக்கு அந்த எண் தெரியாது. அவன் எவரிடமும் விசயத்தைச் சொல்லக்கூடாது என்று என்னை மிரட்டினான். இதுதான் நடந்தது, நான் வேறெதுவும் சொல்ல விரும்பவில்லை."

நடுவரின் குறிப்பு (ஆங்கில உரை)

"மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவரான மனோகரனால் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தை, நான் என்னுடைய கையெழுத்தில் அவரால் உரைக்கப்பட்டவாறு பதிவு செய்தேன். அதனை முழுவதும் பதிவு செய்தபிறகு, அவரிடம் தெளிவாகப் படித்துக்காட்டப்பட்டது. நான் அவரை அதனை படிக்குமாறு கூறினேன். அவர் அதை சரியென ஒப்புக்கொண்டதும், என்னுடைய முன்னிலையில் அவரது கையொப்பம் பெறப்பட்டது. வாக்குமூலம் பதிவு செய்து முடிக்கும்வரையில், நீதிமன்றத்தின் கதவுகள் மூடப்பட்டு தாழிடப்பட்டு மொத்த நடவடிக்கைகளும் நீதிமன்ற தனியறையில் நடத்தப்பட்டன. பிறகு, நான், எனது நீதிமன்ற உதவியாளர் திரு. டி. ராஜா மற்றும் அலுவலக உதவியாளரான எம்.எம். விஜயகுமார் தவிர வேறெவரும் அங்கிருக்கவில்லை."

இது நடந்தபிறகு, உயர் நீதிமன்றம் அட்டவணை படிவத்தில் 70-ஆவது பத்தியில், ஒப்புதல் வாக்குமூலத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மைகளில் எது தொடர்ந்து அனுமதிக்கப்படவேண்டியது மற்றும் எது 25.7.2012-ஆம் தேதியிடப்பட்ட கடிதம் மூலம் மறுக்கப்பட்டுள்ளது மற்றும் பிற பதிவுரு சான்றுகள் அதாவது ஒப்புதல் வாக்குமூலத்தை உறுதிப்படுத்துபவை போன்றவற்றை அட்டவணையில் குறிப்பிட்டுள்ளது. வழக்கின் இந்த அம்சம் முக்கியமானது, அது இதன்கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

"70. தற்போது நாங்கள் ஒப்புதல் வாக்குமூலத்தை உறுதிப்படுத்துவதற்கு அட்டவணையை கொடுத்துள்ளோம்:

வரிசை எண்	ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.18	25.7.2012-ஆம் தேதியிடப்பட்ட எதிர் வழக்குரை	பதிவுரு சான்று
1.	அவர் மோகனகிருஷ்ணனை அறிவார்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	--
2.	மோகனகிருஷ்ணன் காலை சுமார் 9.00 மணியளவில் மாருதி ஆம்னி வேனில் அவரை ஏற்றிக்கொண்டு, தாங்கள் ஆழியாறு அணைக்கட்டுச் செல்வதாகக் கூறினார்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	--
3.	மோகனகிருஷ்ணன் மாருதி ஆம்னி வேனில் பள்ளிச் சீருடையிலிருந்த இரு குழந்தைகளை அழைத்துக்கொண்டார்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	--
4.	மோகனகிருஷ்ணன் தையற்காரரை சந்திக்கச்சென்றார்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	காலை 10.00 மணியளவில் குழந்தைகளுடன் அவ்விருவரையும் பார்த்த அ.சா.20 செந்தில்குமார் தையற்காரனின் சாட்சியம்
5.	மோகனகிருஷ்ணனும், மனோகரனும் நாயகத்தின் (அ.சா.35) கடையிலிருந்து மாட்டு சாணப்பொடியை வாங்கச்சென்றனர்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	அ.சா.35 இப்பொருண்மையை உறுதி செய்தார்

6.	அவர்களிருவரும் குழந்தைகளுடன் கோபால்சாமி மலைக்குன்றுக்கு நடந்து ஏறிச்சென்றனர்.	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	அவர்கள் இருவரையும் கோபால்சாமி மலைக்குன்றில் இரு குழந்தைகளுடன் அ.சா.25 என். மணி பார்த்தார்.
7.	அவர்களிருவரும் கால்வாய் ஓரமாக இருந்த ஒதுக்குப்புறமான இடத்திற்குச் சென்றனர்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	--
8.	அவர்களிருவரும் வண்டியை நிறுத்தினர் மற்றும் மனோகரன் இயற்கையின் அழைப்பை நிறைவேற்றச்சென்றார்.	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	--
9.	மனோகரன் திரும்பி வந்தபோது, மோகனகிருஷ்ணன் 'x'-ஐ கயிற்றால் கட்டிப்போட்டு அவளை வன்புணர்ச்சி செய்வதைக் கண்டார்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	--
10.	மோகனகிருஷ்ணனை அடுத்து மனோகரன் 'x'-ஐ வன்புணர்ச்சி செய்தார்.	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்ளவில்லை	--
11.	மனோகரன், பெண்ணுறுப்பு புணர்ச்சி செய்ய முயன்றார், குழந்தை அழுதது, அவர் குதப்புணர்ச்சி செய்தார்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்ளவில்லை	'x'-க்கு பெண்ணுறுப்பு மற்றும் குதத்தில் காயங்கள் இருந்ததை சடலக் கூறாய்வு காண்பிக்கிறது. மனோகரனுக்கு ஆண்குறியில் காயமிருந்தது.

12.	அதன்பிறகு அவர்கள் வின்னர் அடுமனைக்குச் சென்று ரூ.*10*-க்கு பால் வாங்கினார்கள்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்கிறார்	வின்னர் அடுமனையின் உரிமையாளரான அ.சா.*23* சரவணகுமார் உறுதி செய்துள்ளார்
13.	மாட்டுச் சாணப்பொடி பாலுடன் கலந்து குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டது.	பால் மட்டுமே கொடுத்ததாக ஒப்புக்கொள்ளப்பட்டது.	இரு குழந்தைகளின் வயிற்றிலும், சிறுகுடலிலும் ஆரமைன் விஷம் இருந்ததை உட்குடலுறுப்புகள் காண்பிக்கிறது.
14.	குழந்தைகள் ஆரமைன் கலந்த பாலை சிறிது குடித்துவிட்டு, மீதியை வேனில் உமிழ்ந்துவிட்டனர்.	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்ளவில்லை	வேனின் தரைப்பாயில் கறைகள் காணப்பட்டன.
15.	இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் தீபாளிப்பட்டி கால்வாய்ப் பகுதிக்கு குழந்தைகளை கூட்டிச்சென்றனர்	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்ளவில்லை	அவர்களிருவரையும் அ.சா.*24* சுந்தரராஜன் பார்த்துள்ளார்.
16.	மோகனகிருஷ்ணன் 'x'-ஐ கால்வாயில் தள்ளிவிட்டார் மற்றும் மனோகரன் கால்வாயில் 'y'-ஐ தள்ளிவிட்டார்.	அவர் இப்பொருண்மையை ஒப்புக்கொள்ளவில்லை	'x' மற்றும் 'y' -இன் சடலங்கள் கால்வாயிலிருந்து கைப்பற்றப்பட்டது மற்றும் அவர்கள் மூழ்கியதாலும், அவர்கள் வயிற்றில் ஆரமைன் விஷமிருந்ததாலும் இறந்ததாக சடலக்கூறாய்வு தெரிவிக்கிறது.

"

ஆகவே, இதனடிப்படையில் உயர் நீதிமன்றம் முடிவு செய்துள்ளதாவது:-

"71. ஆகவே, ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.18 அனைத்துக் கோணங்களிலும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது, மேலும், அது உண்மையானதே எனத் தீர்மானிப்பதில் எங்களுக்கு தயக்கமேதுமில்லை. கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழ் மனோகரன் எதிர் வழக்குரையாக கருத விரும்பிய 25.7.2012-ஆம் தேதியிடப்பட்ட கடிதத்தைப் படித்தோமானால் குற்றச்சாட்டிலிருந்து விடுவிப்பதற்கான பகுதிகள் முற்றிலும் நம்பமுடியாதவை. மோகனகிருஷ்ணன்தான் 'x'-ஐ வன்புணர்ச்சி செய்ததாகவும், தான் சும்மா உட்கார்ந்துகொண்டு, அதை பார்த்துக்கொண்டிருந்ததாகவும் அவர் கூறுகிறார். பிறகு, அவர் கொஞ்சம் தூரத்தில் வேனிலிருந்து இறங்கிவிட்டதாகவும், மீண்டும் மோகனகிருஷ்ணன் தன்னை ஏற்றிக்கொண்ட சமயத்தில், இரு குழந்தைகளையும் காணவில்லை என்றும் கூறுகிறார். எங்களை திகைக்கச் செய்வது என்னவென்றால், ஒரு குழந்தையை வன்புணர்ச்சி செய்து, இரு குழந்தைகளை ஓடும் கால்வாய்க்குள் தள்ளிவிடும் பயங்கரமான குற்றத்தைப் புரிவதிலிருந்து மோகனகிருஷ்ணனை தடுக்க, அச்சமயத்தில் சுமார் 23 வயதுடைய மனோகரன் எதுவும் செய்யாததேயாகும். மனோகரனின் எதிர் வழக்குரையில் அவரால் கொடுக்கப்பட்ட விளக்கம் அப்பட்டமான பொய் என நாங்கள் அறிகிறோம் மற்றும் ஒரு பொய்யான விளக்கம், சூழ்நிலைச் சான்றின் அடிப்படையிலான ஒரு வழக்கில் அற்றுப்போன தொடர்பை ஏற்படுத்தும் என மாண்புமிகு உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது."

"78. சுருங்கக்கூறின், ஷரத் பிர்திசந்த் சர்தா -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு [1984 (4) எஸ்.சி.சி. 116]-இல் உச்ச நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட பின்பற்றத்தக்க மிகச்சிறந்த விதியை நாம் பொருத்திப்பார்ப்போமானால், நாங்கள் எடுத்த தவிர்க்கவியலா முடிவு யாதெனில், இரு குழந்தைகளை ஏற்கெனவே கடத்திவந்த மோகனகிருஷ்ணனுடன் மனோகரன் சேர்ந்துகொண்டார் என்றும், மனோகரன் 'x'-ஐ வன்புணர்ச்சி செய்ததோடு, இயற்கைக்கு மாறான வன்புணர்ச்சியும் (குதப்பணர்ச்சி) செய்தார்; என்றும் மனோகரன் 'x'-ஐ கால்வாயில் தள்ளிவிட்டு கொலைபுரிந்ததில் மோகனகிருஷ்ணனுடன் சேர்ந்து பொது உட்கருத்தில் பங்கெடுத்திருந்தார் என்றும், மனோகரன் 'y'-ஐ கால்வாயில் தள்ளி கொலை புரிந்தார் என்றும், கடத்தல் மற்றும் வன்புணர்ச்சி குற்றத்தை மறைக்கும் பொருட்டு கொலை புரியப்பட்டது என்றும் அரசுத்தரப்பு அனைத்து சூழ்நிலைகளையும் நியாயமான சந்தேகத்திற்கப்பால் மெய்ப்பித்துள்ளது என்றும், நாங்கள் தீர்மானிக்கிறோம்."

உயர் நீதிமன்றம் மரண தண்டனையை உறுதி செய்தபோது, தீர்மானித்ததாவது:-

> "82. இவ்வழக்கில், குற்றத்தின் தண்டனையை அதிகரிக்கும் சூழ்நிலைகளாவன:
>
> (i) குற்றச்செயல் என்பது இளவரை வன்புணர்ச்சி செய்து, இரு குழந்தைகளை கொலைபுரிந்தது;
>
> (ii) x-இன் கைகளை பின்னால் கட்டுவிட்டு, ஒருவர் பின் ஒருவராக அவளை அவர்கள் வன்புணர்ச்சி செய்துள்ளனர்;
>
> (iii) வன்புணர்ச்சி செய்தபிறகு, சாதாரணமாக தற்கொலை புரிவதற்கு பயன்படுத்தப்படும் ஆரமைன் அடங்கிய மாட்டுச் சாணப்பொடியை ஒரு கடையிலிருந்தும், பாலை மற்றொரு கடையிலிருந்தும் வாங்கியது.
>
> (iv) அதன்பிறகு, அவர்கள் மாட்டுச் சாணப்பொடியையும், பாலையும் கலந்து, தண்ணீர் பாட்டிலில் நிரப்பி, அதை குழந்தைகளுக்கு கொடுத்தனர். இரு குழந்தைகளும் அதை சிறிது குடித்துவிட்டு, மீதியை காரில் உமிழ்ந்துவிட்டனர். குழந்தைகள் பாலுடன் கலந்த விஷத்தை உமிழ்ந்துவிட்டதால் அவர்கள் இறக்கமாட்டார்கள் என்பதை குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உணர்ந்துகொண்டனர். அவர்கள் குழந்தைகள் இறப்பதை உறுதிசெய்ய விரும்பியதால், அவர்கள் குழந்தைகளை, கோயம்புத்தூர் மாவட்டத்தின் புறநகர் எல்லைப்பகுதியிலுள்ள ஒரு மறைவிடத்திற்கு அழைத்துச்சென்றனர், அங்கு ப.ஆ.தி. கால்வாயில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்தது.
>
> (v) அவர்கள் குழந்தைகளை ஒன்றன்பின் ஒன்றாக தள்ளிவிட்டனர் மற்றும் குழந்தைகளின் சடலம் காய்வாயில் பல கிலோமீட்டர் தொலைவில் கைப்பற்றப்பட்டன. மனோகரன் 'y'-ஐ தள்ளிவிட்டார். அந்த சடலம் இரண்டு நாட்கள் கழித்து, தீபாளபட்டியிலிருந்து 12 கி.மீ. தொலைவில் கைப்பற்றப்பட்டது. இங்கு பலியான இருவரும் ஏதுமறியா, உதவியற்ற எதிர்க்கும் ஆற்றலற்ற குழந்தைகள் ஆவர்.
>
> 83. **குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகள்**: இக்குற்றத்தைப் புரிகையில், மனோகரன் உணர்வுரீதியான அல்லது மனரீதியான பதற்றமோ அல்லது கலக்கமோ அடைந்தார் என்றோ, ஏதேனும் புறக்காரணத்தால் தூண்டப்பட்டதாகவோ கருத்துரைக்க ஏதுமில்லை. அத்தகையதொரு குற்றச் செயலில் அவர் மீண்டும் ஈடுபடாமலிக்கும் வாய்ப்புகளைப் பொறுத்தவகையில், கற்றறிந்த அமர்வு நீதிபதிக்கு அனுப்பப்பட்ட அவரது கடிதத்திலுங்கூட அவர்,

அக்குற்றத்திலிருந்து தன்னை முழுவதுமாக விடுவித்துக்கொள்ள முயற்சி செய்து, மோகனகிருஷ்ணன் மீது அக்குற்றப்பொறுப்பை நிலைநிறுத்த முயற்சி செய்தார் என்று நாங்கள் அறிகிறோம். படக்காட்சியைப் பார்த்து ஒப்புதலுரையைப் பதிவு செய்ததில் நடுவர், காவல்துறையினருடன் கூட்டுச்சதி புரிந்தார் என்று குற்றச்சாட்டுமளவுக்கு அவர் சென்றுவிட்டார். மனோகரன் செய்த குற்றம் குறித்து வருத்தமடைந்ததாக எதுவும் தெரியவில்லை.

84. **குற்ற ஆய்வு**: இவ்வழக்கில் பலியானவர்கள் 10 மற்றும் 7 வயதுடையவர்கள் மற்றும் அவர்கள் எதிர்க்கும் ஆற்றலற்றவர்கள். பலியான 'x', முதலில் மோகனகிருஷ்ணனால் வன்புணர்ச்சி செய்யப்பட்டாள்; மனோகரனும் வன்புணர்ச்சி செய்தார்; அவள் அழுததால், அவர் குதப்புணர்ச்சி செய்தார். அதுவும் அவருக்கு திருப்தியளிக்காததால், அவர் குழந்தைகளின் முன்னிலையில் தனது பாலுணர்ச்சியை வெளிப்படுத்தும்விதமாக நடந்துகொண்டார். அவர்களுக்கு விஷம் கொடுக்கப்பட்டது, பின்னர் அவர்கள் இறப்பதை இரட்டிப்பாக உறுதிப்படுத்த அவர்களை ஓடும் தண்ணீரில் தள்ளிவிட்டனர்.

85. **குற்றவியல் ஆய்வு**: மனோகரன், திடமான உடலமைப்புக்கொண்ட சுமார் 23 வயது நபராவார். முன்னரே குறிப்பிட்டவாறு, அவர் திருந்துவதற்கான அறிகுறி ஏதும் தென்படவில்லை. ஆகவே, குற்றவியல் ஆய்வும் நிறைவளிக்கிறது என நாங்கள் தீர்மானிக்கிறோம்.

86. **அரிதினும் அரிதான வழக்கு ஆய்வு**: இது சமுதாயத்தை மையமாகக்கொண்ட ஆய்வேயன்றி நீதிபதியை மையமாகக் கொண்ட ஆய்வல்ல, அதாவது சமூகம், சில வகையான குற்றங்களுக்கு மரண தண்டனையை தீர்வளிப்பதை அங்கீகரிக்குமா? இல்லையா? என்பதேயாகும். சேவக பெருமாள் - எதிர்- தமிழ்நாடு மாநில அரசு, [1991 (3) எஸ்.சி.சி. 47]-இல் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளதாவது:
"ஒரு குற்றவாளி, சமூக நல்லிணக்கத்திற்கும், அமைதியாக கூடி வாழ்வதற்கும் ஆபத்தாகவும், அச்சுறுத்தலாகவும் இருக்கிறபோதுதான் அரிதினும் அரிதான வழக்கு வருகிறது. குற்றஞ்சாட்டப்பட்டவர், ஆத்திரத்தினால் முன்னேற்பாடின்றி அச்செயலைச் செய்யாமல், அவர் ஆழ்ந்து சிந்தித்து, திட்டமிட்டு, ஒரு குற்றத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அதைத் துல்லியமாக நிறைவேற்றுமிடத்து, அத்தகையதொரு கொடூரமான குற்றம் புரிந்ததற்கு மரண தண்டனைதான் மிகவும் பொருத்தமான தண்டனையாக இருக்கும்."

இவ்வழக்கிலும், குற்றஞ்சாட்டப்பட்டவர், 10 வயதுடைய சிறுமியை வன்புணர்ச்சி செய்து, 7 வயது சிறுவனை கால்வாயில் தள்ளிவிட்ட முறையிலிருந்து முடிவு செய்யப்படவேண்டியது யாதெனில், அவர் சமூதாயத்திற்கு ஆபத்தானவராகவே இருப்பார் என்பதேயாகும். எனவே அரிதினும் அரிதான வழக்கு ஆய்வுங்கூட பொருந்துவதாகும்."

7. மேல்முறையீட்டாளர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் திரு. பி. வினய் குமார், தான் திரு. எ. இரகுநாதன் அவர்களின் வாதங்களை ஏற்றுக்கொள்வதாகவும், திரு. எ. இரகுநாதன் அவர்கள், மேல்முறையீட்டாளர், 10 வயது சிறுமியை வன்புணர்ச்சி செய்தார் என்ற குற்றச்சாட்டை எதிர்ப்பதாகவும் கூறி, உயர் நீதிமன்றத் தீர்ப்புரையை எதிர்த்துரைத்தார். தீர்ப்புரையின் 41-ஆவது பத்தியில், உயர் நீதிமன்றம், வன்புணர்ச்சி தொடர்பான சான்று தொடர்பாக பின்வருமாறு தீர்மானித்திருந்தது:

"41. 'x'-இன் வன்புணர்ச்சி தொடர்பான சான்று:

இப்பொருண்மையை மெய்ப்பிக்க நேரடி சான்று ஏதுமில்லை. அரசுத்தரப்பு, வன்புணர்ச்சி என்று முடிவு செய்வதற்கு பினவரும் சான்றுப் பகுதிகளின்மீது சார்வுற்றது.

(அ) (4) கருப்பை வாயின் வெளிப்பகுதியிலும் பெண்ணுறுப்பின் பக்கவாட்டிலும், 2 x 1 செ.மீ. x 0.5. செ.மீ. ஆழமான காயம் காணப்பட்டது. கன்னிச்சவ்வு சேதமடையாமலிருந்தது. (5) குதத்தைப் பரிசோதித்ததன்பேரில்:- குதம் 3 செ.மீ. விட்ட அளவில் விரிந்தகன்றதாகக் காணப்பட்டது மற்றும் குதத்தின் இடது பக்கவாட்டில் மெய்த்தோல்-குதச்சவ்வு கூடுமிடத்தில் 1 x 0.5 செ.மீ. அளவில் சவ்வு கிழிந்து காணப்பட்டது. மார்புக்கூடு மற்றும் அடிவயிற்றின் கூறாய்வில் கருப்பையின் கீழ் அடியில் உள்பகுதியில் 4 x 2 செ.மீ. காயம் காணப்பட்டது என x-இன் உடலைச் சடலக்கூறாய்வு செய்த மருத்துவர் ஜெயசிங் (அ.சா.46) தெரிவித்துள்ளார். அவரது இறுதி கருத்துரையான அ.சா.ஆ.50-இல், இறந்தவர் நீரில் மூழ்கியதால் இறந்துள்ளதாகத் தெரிகிறது. வலுக்கட்டாயமான பாலியல் வன்முறைக்குள்ளாக்கியதன் காரணமாக பெண்ணுறுப்பு மற்றும் குதத்தின்மேல் காயங்கள் காணப்பட்டன என அவர் தெரிவித்துள்ளார். இறந்தவர், இறப்பதற்கு முன் ஆரமைன்

விஷத்தை உட்கொண்டுள்ளார். (வயிறு மற்றும் சிறுகுடலில் கண்டறியப்பட்டது).

(ஆ) 4.11.2010 அன்று நடுவரின் ஆணைகளின்பேரில் மருத்துவர் ஜெயசிங் மனோகரனை பரிசோதித்து, அவரது ஆண்குறியில் பின்வரும் காயமிருந்தது என அவரது அறிக்கை அ.சா.ஆ.56-இல் கருத்துரைத்தார்.

"சிறுநீர்க் குழாயின் துறையைச் சுற்றிய ஆண்குறியின் சுருப்பிகளின் இணைப்புப் பகுதியின் மையத்தில் கருமை நிறத்தில் காயம் காணப்பட்டது".

(இ) காவல்துறையினர், 29.10.2010-க்கு முன்னதாக மாருதி வேனிலிருந்து சில முடிக்கற்றையுடன் கூடிய x-இன் ஜட்டியை (சா.பொ.1)-ஐ கைப்பற்றி அதனை டி.என்.ஏ. பகுப்பாய்வு செய்வதற்காக நீதிமன்றம் மூலம் தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பினர். மோகனகிருஷ்ணன் மற்றும் மனோகரனிடமிருந்து மருத்துவர் புவனாவால் (அ.சா.44) சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரிகளும், உமிழ்நீருங்கூட தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டது. டி.என்.ஏ. பகுப்பாய்வு திருமதி இலஷ்மி பாலசுப்ரமணியம் (அ.சா.49) அவர்களால் செய்யப்பட்டது. அவர், எங்களால் இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார், அதற்கான காரணத்தை ஏற்கெனவே நாங்கள் தீர்ப்புரையின் முந்தைய பகுதியில் கொடுத்துள்ளோம். அவர், தனது சாட்சியத்தில், மோகனகிருஷ்ணன் மற்றும் மனோகரனின் இரத்த மாதிரிகளிலிருந்து டி.என்.ஏ.-ஐ பிரித்தெடுத்து அமிலோஜெனினுக்காகவும் 15 ஷார்ட் டேண்டம் ரிபீட் குறியீடுகளுக்காகவும் அவற்றை பி.சி.ஆர்.-ஐ பயன்படுத்தி, எஸ்.டி.ஆர். தொழில்நுட்பத்தில் உருபெரிதாக்கினார். நீதிமன்றத்திடமிருந்து தடய அறிவியல் துறையால் பெறப்பட்ட ஜட்டி (சா.பொ.1)-இன் உடனிருந்த முடிக்கற்றைகளும் அமிலோஜெனினுக்காக உருபெரிதாக்குவதற்கு உட்படுத்தப்பட்டது. மோகனகிருஷ்ணன் மற்றும் மனோகரனின் இரத்த மாதிரிகளின் டி.என்.ஏ. தன்மையின் முடிவுகள், ஜட்டியில் (சா.பொ.1) இருந்த முடியின் டி.என்.ஏ. பண்புக்கூறுகளுடன் ஒப்பிடப்பட்டன. ஒப்பீட்டின்போில், முடியின் டி.என்.ஏ. பண்புக்கூறு மோகனகிருஷ்ணனுடன் ஒத்துப்போகவில்லை, ஆனால் மனோகரனுடன் ஒத்துப்போவதை அ.சா.49 கண்டறிந்ததாகத் தெரிவித்துள்ளார். அவரது அறிக்கை அ.சா.ஆ.48(ஏ)-ஆக குறியீடு செய்யப்பட்டது. எதிர்த்தரப்பு வழக்குரைஞர், வல்லுநரின் இறுதி கருத்துரையை கடுமையாக எதிர்க்கவில்லையென்றாலும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. எ. இரகுநாதன் முடியைக் கைப்பற்றியதையே

மறுத்துரைத்தார், மனோகரனை 04.11.2010 அன்று, மருத்துவர் ஜெயசிங் (அ.சா.46) பரிசோதித்தபோது, அவரது அந்தரங்க முடியிலிருந்து 5 முடிக்கற்றையை பிடுங்கும்படி செய்தார் என்றும், இதனை தடய அறிவியல் துறைக்கு அனுப்பப்பட்ட உறையில் வைத்துவிட்டனர் என்றும் வாதிட்டார். எங்கள் முன்பாக, மருத்துவர் ஜெயசிங் (அ.சா.46), திருமதி ராதிகா பாலசந்திரன் (அ.சா.48) மற்றும் புலனாய்வு அலுவலர் (அ.சா.47) ஆகியோரை குறுக்கு விசாரணை செய்த கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. எ. இரகுநாதன் அவர்கள் இந்த எதிர்வாதத்தை வடிவமைத்து, 29.10.2010 அன்று மாருதி வேனிலிருந்து ஜட்டி (சா.பொ.1)-ஐயும், அந்தரங்க முடிகளையும் கைப்பற்றியதைக் குறித்து மறுத்துரைத்து, பின்வரும் வாதங்களை வைத்தார்."

8. இறந்த சிறுமியின் ஜட்டி மீது காணப்பட்ட மேல்முறையீட்டாளரின் அந்தரங்கமுடி குறித்து உயர் நீதிமன்றம் அப்போது அவ்விசயத்தை சுருங்கக்கூறியதை பின்வருமாறு பார்த்தபின்னர், அதுகுறித்து மறுத்துரைத்த திரு. இரகுநாதன் அவர்களின் வாதங்களை மிக விரிவாக பின்னர் விவாதிக்கலாம்:-

> "45. மேற்படி 9-ஆவது பத்தியில் "x-இன் வன்புணர்ச்சி தொடர்பான சாட்சியம்" பற்றிய விவாதத்தை நாம் நிறைவுசெய்யாமல்விட்டதால், ஜட்டி (சா.பொ.1)-ஐ கைப்பற்றியது தொடர்பாக திரு. எ. இரகுநாதன் அவர்களால் எழுப்பப்பட்ட வாதக்கூறுகளுக்கு பதிலளித்த பின்னர் அதை நாங்கள் தற்போது முடிவு செய்கிறோம்.
>
> 46. (அ) 'x' பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தப்பட்டார் என மருத்துவர் ஜெயசிங்கின் இறுதி கருத்துரை; (ஆ) மனோகரனின் ஆணுறுப்பின் மீது காயம்; (இ) 'x'-இன் சடலத்தில் ஜட்டி (சா.பொ.1) இல்லாதிருத்தல்; (ஈ) 'x'-இன் தந்தையால் ஜட்டி (சா.பொ.1)-இன் அடையாளங்காட்டப்படுதல் (உ) அதை கைப்பற்றிய சமயத்தில் அதில் முடிகள் இருத்தல் மற்றும் (ஊ) முடியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட டி.என்.எ. பண்புக்கூறு மனோகரனுடன் ஒத்துப்போதல் ஆகியவற்றிலிருந்து, மனோகரன், 'x'-ஐ பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தியுள்ளார் என நாங்கள் தீர்மானிக்கிறோம். இக்காண்முடிவுக்கு வருவதற்குங்கூட, மனோகரனால் அளிக்கப்பட்ட நீதிமுறை ஒப்புதலுரையை நாங்கள் இதுவரையிலும் பயன்படுத்திக்கொள்ளவில்லை."

9. இந்த அம்சத்தில் உயர் நீதிமன்றத்தின் விரிவான ஆய்வினை ஆராய்ந்து, அதனை எதிர்த்து, மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் நியாயமான காரணம் ஏதும் கூறி அதனை மெய்ப்பிக்கவில்லை என நாங்கள் உணர்வதால், மேல்முறையீட்டாளர் சிறுமியை பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தியிருந்தார் என்ற காண்முடிவுகளை உறுதி செய்கிறோம்.

10. பின்னர் மேல்முறையீட்டாளரை காவல்துறையினர் அடித்ததாக கொடுக்கப்பட்ட பொருண்மையின்படி, கற்றறிந்த நடுவர் 20.11.2010 அன்று அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்ய மறுப்பு தெரிவித்திருக்கவேண்டுமென்று மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார். வழக்கின் இந்த அம்சத்தையும் உயர் நீதிமன்றம் ஆராய்ந்து, மேல்முறையீட்டாளர் தன்விருப்பமாக வாக்குமூலம் அளிக்கின்றாரா? அல்லது துன்புறுத்தல் அல்லது அடித்ததன் காரணமாகவா? என்பது குறித்து கற்றறிந்த நடுவர் மீண்டும் மீண்டும் கேட்டுள்ளார் என்பதை தெரிவித்துள்ளது. வாக்குமூலம் தன்விருப்பமாகத்தான் கொடுக்கப்பட்டது என்பதை மேல்முறையீட்டாளர் மீண்டும் மீண்டும் தெரிவித்தார். மேலும், கைது செய்தபிறகு, 15 நாட்கள் காவல் அதாவது 14.11.2010 அன்று முடிந்தது என்ற பொருண்மையையும் உயர் நீதிமன்றம் அதன் தீர்ப்புரையின் 60-ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ளது. குற்றஞ்சாட்டப்பட்டவர் 19.11.2010 அன்றுதான் கற்றறிந்த நீதித்துறை நடுவர் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்டார், அதன்பிறகு வாக்குமூலம் 20.11.2010 அன்று பதிவு செய்யப்பட்டது. ஆகவே, இந்த நாளன்று மேல்முறையீட்டாளரை மீண்டும் காவலில் வைப்பதற்கு, அவரை அவர்களிடம் ஒப்படைப்பதற்கு சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது. மேலும் ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கப்பட்டு, ஓராண்டும் ஒன்பது மாதங்களும் கழிந்த

பிறகுதான் திரும்பப்பெறப்பட்டது என்பதை எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் 70-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து காணமுடிகிறது, மேல்முறையீட்டாளர், பத்து வயதான சிறுமியை வன்புணர்ச்சி செய்து, அச்சிறுமியையும், சிறுவனையும் கொலை செய்ததில் பங்கெடுத்திருந்ததைத் தவிர, மறுக்கப்பட்ட வாக்குமூலம், அசல் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள ஒவ்வொரு விவரத்தையும் உறுதிப்படுத்துகிறது. ஆகவே, இவ்வனைத்து காரணங்களுக்காகவும், இதன்பொருட்டு மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களை நாங்கள் நிராகரிக்கிறோம்.

11. பின்னர், கடைசியாகப் பார்த்தல் கோட்பாடு தொடர்புடைய மிகவும் முக்கியமான சாட்சியான அ.சா.24 கூடுமானவரையில் நம்பப்படமுடியாது என மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார், ஏனெனில், அச்சிறுமி வன்புணர்ச்சி செய்யப்பட்ட பிறகு, சாலையில் மோகனகிருஷ்ணன் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு அடுத்து அக்குழந்தைகள் நின்றுகொண்டிருந்ததாகவும், குழந்தைகளிடம் இடர்ப்பாட்டிலிருக்கும் நிலையேதும் காணப்படவில்லை, அவர்கள் சற்றுமுன்னர் மிகவும் பயங்கரமான சோதனைக்குள்ளாகியிருந்ததாக எவ்விதத்திலும் காட்டிக்கொள்ளவோ, அதுகுறித்த ஒரு வார்த்தையும் சொல்லவில்லை என அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். ஆகவே, அவருடைய கூற்றுப்படி, அ.சா.24-இன் கூற்று, இயல்பாகவே நம்பத்தக்கதன்று, மேலும், அதன்மீது சார்ந்திருக்கமுடியாது. இக்கோணத்தில் கற்றறிந்த வழக்குரைஞரின் வாதத்தை நாம் ஏற்றுக்கொண்டாலுங்கூட, கடைசியாகப் பார்த்தல் கோட்பாட்டுக்காக, வேறு பல நபர்களையும் உயர் நீதிமன்றம் சார்ந்திருந்தது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அ.சா.20, அ.சா.25 மற்றும் அ.சா.23 ஆகியோர் இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களையும்

குழந்தைகளுடன் 29.10.2010 அன்று வெவ்வேறு நேரங்களில் பார்த்துள்ளனர். உண்மையில், மேல்முறையீட்டாளரின் ஒப்புதல் வாக்குமூலத்துடன், அதனுடைய மறுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தையும் படித்துப்பார்த்தோமானால் அவர் அ.சா.23-யிடமிருந்து பிற்பகல் 1.00 மணியளவில் பால் வாங்கினார் என்ற பொருண்மையைத் தெளிவாக மெய்ப்பிக்கிறது, மேலும், மோகனகிருஷ்ணன் தையற்காரரை சந்திக்கச் சென்றார் என்ற பொருண்மையும், அசல் ஒப்புதல் வாக்குமூலத்திலும், மேலும் மறுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்திலும் அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகவே, அ.சா.20 மற்றும் 23-இன் சாட்சியம், மேல்முறையீட்டாளரால் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தாலும், மறுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தாலும் உறுதி செய்யப்படுகின்றன, ஆகவே, இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களுடன் வாகனத்தில் குழந்தைகளும் இருந்தனர் என்பது தெளிவாக மெய்ப்பிக்கப்படுகிறது. ஆதலால், கடைசியாகப் பார்த்தல் கோட்பாட்டைச் சார்ந்திருக்கலாம் என்ற உயர் நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்துரைக்கக்கூடிய சாத்தியமில்லை.

12. பின்னர், மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர், ஒரு சிறுமியை காலை நேரத்தில் வன்புணர்ச்சி செய்துவிட்டு, அந்த பாதிக்கப்பட்டவரை, பால் மற்றும் மாட்டுச் சாணப்பொடி விற்கும் கடை உட்பட பல இடங்களுக்கும் அழைத்துச் சென்று, பவனி வந்தார் என்பது மிகவும் நம்புவதற்கரியது என்றும், ஒட்டுமொத்த கதையும் மிக இயல்பாகவே நம்புவதற்கரியது என்றும், அது நிராகரிக்கப்படவேண்டும் என்றும் வாதிட்டார். இதுபோன்ற வாதங்கூட கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை, அதன் மறுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்துடன் சேர்த்து படிக்கிறபோது, அதை எதிர்த்து நிற்கக்கூடியதாகிவிடுமென நாங்கள் அஞ்சுகிறோம்.

மோகனகிருஷ்ணன் குழந்தைகளைக் கடத்தியது, சிறுமியை வன்புணர்ச்சி செய்தது,, குழந்தைகளை கொலை புரிந்தது ஆகிய அனைத்துப் பொருண்மைகளும், மேல்முறையீட்டாளரின் வாக்குமூலத்திலும், மறுக்கப்பட்ட வாக்குமூலத்திலும் அடங்கியிருக்கின்றன. மேல்முறையீட்டாளர், வன்புணர்ச்சி மற்றும் கொலை குற்றத்திலிருந்து தன்னை முழுமையாக விடுவித்துக்கொள்ள மறுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தில்தான் கோருகிறார், அது, உயர் நீதிமன்றத்தால் சரியாகத் தீர்மானிக்கப்பட்டதுபோன்று, அதன்மீது நம்பிக்கையேதும் வைக்கயியலாது. மேல்முறையீட்டாளரின் அந்தரங்க முடிகளிலிருந்து எடுக்கப்பட்ட டி.என்.ஏ. மாதிரி, இறந்த சிறுமியின் ஜட்டியில் காணப்பட்டன என்பதை ஏற்றுக்கொண்டாலே, வன்புணர்ச்சி நியாயமான சந்தேகத்திற்கப்பால் நிலைநாட்டப்பட்டுள்ளது என்பதுமொரு கூடுதல் காரணமாகிவிடும்.

13. இறந்த சிறுமியின் உடலின்மீது விந்துவோ, இரத்தமோ காணப்படவில்லை என்ற மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதம், டி.என்.ஏ. சான்றின்படி, முக்கியத்துவமற்றதாகிவிடுகிறது. எவ்வாறாயினும், இறந்த சிறுமியின் சடலம், குற்றம் புரிந்து ஒரு நாள் கழித்து, அதிவேகமாக நீர் ஓடிக்கொண்டிருக்கும் கால்வாயில், பல கிலோமீட்டார் தொலைவில் கண்டெடுக்கப்பட்டது. சடலத்தின்மீது விந்து, இரத்தம் போன்ற எதுவும் இருந்திருக்கலாம் என்றாலும், ஒரு நாள் முழுவதும் சடலம் அதிவேகமாக ஓடிக்கொண்டிருக்கும் கால்வாய் நீரில் கால்வாய்க்குள் சிறுமி தூக்கியெறியப்பட்டு மூழ்கியிருக்கும்போது அதனை கைப்பற்றியபிறகு காலங்கடந்துபோய்விட்டதால் அனைத்தும் அழிந்துபோய்விடும் என்பது தெளிவு.

14. பின்னர், கற்றறிந்த வழக்குரைஞர், குழந்தைகளை கட்டிப்போட்டது குறித்த குற்றச்சாட்டுக்கு ஆதரவாகச் சான்றேதுமில்லை என்று வாதிடமுயன்றார். மோகனகிருஷ்ணன் சிறுமியை கயிற்றால் கட்டிப்போட்ட பின்னர் அவளை வன்புணர்ச்சி செய்தார் என்பது ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மறுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் என்ற இரண்டிலிருந்தும் தெளிவாகத் தெரிந்தாலும் இதுவும் சரியற்றதாகவேயிருக்கும் என்று நாங்கள் அஞ்சுகிறோம்.

15. ஜட்டி, காரிலிருந்து பின்னர் கண்டெடுக்கப்பட்டதால் அது, காரிலிருந்து எடுக்கப்பட்டது சந்தேகமளிப்பதாகவும், ஜட்டி கிழிந்திருந்ததாகவும் சொல்லப்பட்டது, காவல்துறையினரிடம் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தில் அவ்வாறு ஒருபோதும் கூறவில்லை என்றும் மேல்முறையீட்டாளர் பின்னர் வாதிட்டார். அரசுத்தரப்பில் குறியீடு செய்யப்பட்ட அரசுத்தரப்பு சான்றாவணம் 5-ஐ படிப்பதிலிருந்து தெளிவாவதைப்போன்று, தடயவியல் ஆய்விலிருந்து எது தெளிவாகிறதென்றால், வன்புணர்ச்சியும், கொலையும் நடந்த பிறகு இரவு 2.00 மணியளவில் காரை சோதனையிட்டபிறகுதான் காரிலிருந்து ஜட்டி கண்டெடுக்கப்பட்டது என்பதாகும்.

16. பின்னர், கொலை செய்யப்பட்ட சிறுவனின் மதிய உணவு பையை குற்றஞ்சாட்டப்பட்ட மேல்முறையீட்டாளர் வீட்டிற்கு எடுத்துச்சென்றுவிட்டார் என்பதும், அதன்பிறகு இரண்டு நாட்கள் கழித்து அவரது வீட்டிலிருந்து அது காவலரால் கண்டெடுக்கப்பட்டது என்பதும் முற்றிலும் நம்புதற்கரியது, ஆகையால் மேற்சொன்ன பை, காவல்துறையினரால் அங்கு வைக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு என்று மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டார். இது இவ்வாறிருந்தாலுங்கூட, இது மேல்முறையீட்டாளருக்கு எந்த பலனுமளிக்காது. மேற்படி பொருண்மைகளின் விவரிப்பிலிருந்து என்ன தெளிவாகிறதென்றால் முதலில்

மோகனகிருஷ்ணனால் குழந்தைகள் கடத்தப்பட்டபிறகுதான் மேல்முறையீட்டாளர் அவர்களுடன் சேர்ந்துகொண்டார் என்பதாகும். மேல்முறையீட்டாளர் 10 வயது சிறுமியை கொடூரமாக வன்புணர்ச்சி செய்தார் என்ற பொருண்மை அவரது ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்து மட்டுமின்றி, மேல்முறையீட்டாளரின் அந்தரங்க முடி, சிறுமியின் ஜட்டி மீதிருந்தது என்று டி.என்.ஏ. சோதனையில் கண்டறியப்பட்டதிலிருந்தும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இக்கொடிய செயலை செய்ததும், கடத்தியதும் மற்றும் சிறுமியை வன்புணர்ச்சி செய்ததும் குறித்து குழந்தைகள் சாட்சியமளிக்காதிருக்கும்பொருட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அடுத்து செய்யவேண்டிய முக்கியமான செயலாக இருந்தது, குழந்தைகளை ஒழித்துக்கட்டுவதுதான் என்பது தெளிவாகிறது. இது முடிந்ததும், மேல்முறையீட்டாளர் விஷமான "மாட்டுச் சாணப்"பொடியையும், பாலையும் வாங்கினார் என்பதை ஒப்புக்கொண்டு பின்னர் அவையிரண்டையும் கலந்து, இரண்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்களாலும், இரு குழந்தைகளுக்கும் கொடுக்கப்பட்டது என்று அவரது ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார். விஷம் வேலை செய்யாவிட்டால், குழந்தைகளை வேறேதேனும் முறையில் ஒழித்துக்கட்டுவதற்கு வேறு வழி ஒன்றைத் தேடினர், இரு குற்றஞ்சாட்டப்பட்டவர்களும் வேறுமுறையைக் கண்டுபிடித்து, குழந்தைகளை கால்வாய்க்குள் வீசியெறிந்தால், அவர்கள் மூழ்கி இறந்துவிடுவார்கள் என்பதால், பிரச்சினைக்குரிய கால்வாய்க்கு குழந்தைகளை கூட்டி வந்தனர். ஒட்டு மொத்த நிகழ்வுகளும் சங்கிலித்தொடர் போன்று மெய்ப்பிக்கப்பட்டுள்ளன, மேலும், இது சூழ்நிலைச் சான்று என்ற வழக்காக இருந்தாலும், அரசுத்தரப்பு அதன் வழக்கை நியாயமான சந்தேகத்திற்கப்பால்

தெளிவாக நிரூபித்துள்ளது. மேல்முறையீட்டாளர் வன்புணர்ச்சி மற்றும் கொலை புரிந்தமைக்காக கீழமை நீதிமன்றங்கள் குற்றத் தீர்ப்புரைத்தது சரியே.

17. மரண தண்டனை இந்நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்படவேண்டுமா? என்பதே தற்போது எழுகின்ற வினாவாகும். இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் கிராமப்புறத்தைச் சேர்ந்தவர் என்பதும், அவருக்கு 23 வயதுதான் ஆகிறது என்பதும், முந்தைய குற்றத்தண்டனை ஏதும் பெற்றிருக்கவில்லை என்பதும், அவரை விடுவித்துவிட்டால் சமுதாயத்திற்கு தீங்கேதும் ஏற்படாது என்பதும் தற்போதைய வழக்கில் குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளாக மேல்முறையீட்டாளர் வேண்டியுள்ளார். அதற்குமாறாக, இது இரக்கமின்றியும், கொடூரமாகவும் புரியப்பட்ட மிகக்கொடிய குற்றமென்றும், குற்றத்தினை கடுமையாக்கும் சூழ்நிலைகள் உயர் நீதிமன்றத்தால் நிறுவப்பட்டு, அது, சொல்லப்பட்ட குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளை தெளிவுபட விஞ்சிநிற்கிறது என்றும், ஆகவே, இது மரணதண்டனை விதிக்கப்படவேண்டிய தெளிவான வழக்கு என்றும் எதிர்மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் வாதிட்டுள்ளார்.

18. **மச்சி சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு,** *(1983) 3* **எஸ்.சி.சி.** *470*-இல் இந்நீதிமன்றம், கொலைக் குற்றத்திற்காக எச்சூழ்நிலைகளில் மரண தண்டனை விதிக்கப்படலாம் என்பது குறித்து பின்வருமாறு வகுத்துரைத்துள்ளது:-

> *"32.* "மரண தண்டனை விதிக்காத நேர்வில்" என்ற கோட்பாட்டில் பிரதிபலிக்கும் மனிதாபிமான அணுகுமுறையை ஒட்டுமொத்த சமுதாயமும் அங்கீகரிக்காததற்கான காரணங்களைத்தேடி வெகுதூரம் செல்லவேண்டியதில்லை. முதலாவதாக, இந்த பெருந்தன்மையான மனிதாபிமானம் "வாழ்க்கைக்கான மதிப்பு" கோட்பாடு என்ற ஆதாரத்தின் மீது கட்டமைக்கப்படுகின்ற இச்சமூதாயத்திலுள்ள உறுப்பினர் ஒருவர், மற்றொரு உறுப்பினரைக் கொன்று, இக்கோட்பாட்டையே மீறுகிறபோது, சமூதாயமே இக்கோட்பாட்டு விலங்கினால்

கட்டுண்டிருப்பதை உணராமல் போகலாம். இரண்டாவதாக, சமுதாயம் பாதுகாப்பு கவசமாகத் திகழ்வதாலும், மேலும் அது செயற்படுத்தும் சட்ட விதியினாலும் சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தத்தமது உயிருக்கு ஆபத்தின்றி பாதுகாப்புடன் வாழ இயலும் என்பதை உணர்ந்து கொள்ளவேண்டும். மற்றவர்களை அழிப்பதற்கு அவர்களை கொல்வதுதான் அவர்களுக்கு தக்க முடிவு என மனவுறுத்தலின்றி கொல்பவர்களுக்கு நடைமுறையிலுள்ள சட்ட விதியும், அக்குற்றச் செயல் வழக்காகப் பதிவிடப்படும் என்ற அச்சமும் ஒரு தடையாக செயல்படுகிறது. சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் இப்பாதுகாப்புக்காக சமுதாயத்திற்கு கடன்பட்டிருக்கிறார்கள். கொலையாளியே கொலையாவதிலிருந்து பாதுகாக்கின்ற இச்சமுதாயத்தின் உறுப்பினர் ஒருவர் நன்றிக்கடனைச் செலுத்துவதற்கு பதிலாக "கொல்வதன்" மூலம் நன்றியை மறக்கிறபோது, அல்லது சுய பாதுகாப்பின்பொருட்டு கொலை புரிந்தவர் கொல்லப்படவேண்டுமென சமுதாயம் உணர்கிறபோது, சமுதாயம், மரண தண்டனைக்கு ஒப்பளித்து, பாதுகாப்பு வழங்கியதை நன்கு திரும்பப்பெற்றுக்கொள்ளலாம். ஆனால், சமுதாயம் ஒவ்வொரு வழக்கிலும் அவ்வாறு செய்யாது. அது, "அரிதினும் அரிதான வழக்குகளில்", அதன் ஒட்டுமொத்த மனச்சான்றினை மிகவும் அதிர்ச்சியடையச் செய்கிறபோது அவ்வாறு செய்யலாம், நீதிய அதிகார மையத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் மரண தண்டனை குறித்து தங்களுடைய தனிப்பட்ட கருத்தை கணக்கிற்கொள்ளாமல், விருப்பு வெறுப்பின்றி அதனை தம்வசம் வைத்திருக்கவே அது எதிர்பார்க்கும். சமுதாயமானது குற்றம் புரிவதற்கான உட்கருத்து அல்லது குற்றம் புரிந்தவிதம் அல்லது குற்றத்தின் கொடிய அல்லது சமுதாயத்திற்கெதிரான தன்மை போன்ற தளத்திலிருந்து குற்றமானது பார்க்கப்படுகிறபோது அத்தகையதோர் உணர்ச்சிவயப்பாட்டை ஏற்றுக்கொள்ளலாம், எடுத்துக்காட்டாக:

I. கொலைபுரியும் விதம்

33. மிகவும் மிருகத்தனமான, கோரமான, கொடூரமான, அதிர்ச்சியூட்டுகிற அல்லது கீழ்த்தரமான முறையில் கொலைக்குற்றம் செய்யப்படுகிறபோது, அது சமுதாயத்தின் உச்சக்கட்ட மற்றும் கடுமையான சீற்றத்தை எழுச்சியடையச் செய்கிறது. எடுத்துக்காட்டாக,

(i) பாதிக்கப்பட்டவரின் வீட்டில், அவரை உயிரோடு வைத்து, வீட்டை தீ வைத்துக் கொளுத்தி, கரிகட்டை ஆகும்வரை பார்க்கிறபோது,

(ii) பாதிக்கப்பட்ட ஆண் அல்லது பெண்ணுக்கு மரணம் விளைவிக்கும்பொருட்டு, சித்ரவதை அல்லது கொடுமை போன்ற

மனிதத்தன்மையற்ற செயல்களுக்கு அவர்களை உள்ளடக்குகிறபோது.

(iii) பாதிக்கப்பட்டவரின் உடலைத் துண்டுத்துண்டாக வெட்டிப்போடுதல் அல்லது மிகவும் கொடூரமான முறையில் அவரது உடலின் உறுப்புகளைத் தனித்தனியாக பிரித்தெடுக்கிறபோது.

II. கொலை புரிவதற்கான உட்கருத்து

34. முற்றிலும் ஓர் உட்கருத்துக்காக கொலை புரியப்படுகிறபோது, அது ஒழுக்கக்கேட்டையும், கயமைத்தனத்தையும் காட்டுகிறது. எடுத்துக்காட்டாக *(அ)* ஒரு வாடகை கொலையாளி பணத்திற்காகவோ அல்லது பரிசுக்காகவோ கொலை புரிகிறபோது *(ஆ)* கொலையாளியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள நபரின் அல்லது பாதுகாப்பிலுள்ளவரின் சொத்தினை மரபுரிமையாகப் பெறும்பொருட்டு அல்லது அச்சொத்தின்மீது ஆட்சி செலுத்துவதற்கு அல்லது அதற்குமாறாக கொலையாளி ஆதிக்கம் செலுத்தும் நிலையிலிருந்து அல்லது நம்பும்படியான நிலையிலிருந்து திட்டந்தீட்டி கொடூரமாக கொலை புரிகிறபோது அல்லது *(இ)* தாய்நாட்டிற்கு துரோகமிழைக்கும் வகையில் கொலை புரிகிறபோது.

III. சமுதாயத்திற்கு எதிரான அல்லது சமூகரீதியாக கொடிய தன்மையுடைய குற்றம்

35.(அ) பட்டியல் வகுப்பினர் அல்லது சிறுபான்மை சமூகத்தினர் முதலானோர்களில் ஒருவர் தனிப்பட்ட காரணங்களுக்காக அல்லாமல், சமூகத்தை கொந்தளிக்கச்செய்யும் சூழ்நிலைகளில் கொலை செய்யப்படுகிறபோது, எடுத்துக்காட்டாக, அத்தகைய நபர்களை அவ்விடத்திலிருந்து விரட்ட கிலியுண்டாக்கி, அச்சுறுத்தும்பொருட்டோ அல்லது கடந்தகால அநீதிகளை மாற்றும் நோக்குடன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் அல்லது நலன்களை அவர்களிடமிருந்து பறிப்பதற்கு அல்லது அவற்றை ஒப்படைக்கச் செய்யும்பொருட்டோ அல்லது சமூக சமநிலையை மீட்டளிக்கும்பொருட்டோ அத்தகையதொரு கொலை புரியப்படுகிறபோது.

(ஆ) "மணப்பெண்ணை எரித்தல்" மற்றும் "வரதட்சணை மரணங்கள்" என்றழைக்கப்படும் நேர்வுகளில் அல்லது மீண்டும் ஒருமுறை வரதட்சணையை பிடுங்குவதற்காக மறுமணம் செய்யும்பொருட்டு அல்லது மோகம் காரணமாக மற்றொரு பெண்ணை மணப்பதற்கு கொலை புரியப்படுகிறபோது.

IV. குற்றத்தின் வீச்சளவு

36. குற்றம் பெரிதளவிலானதாக இருக்கிறபோது, எடுத்துக்காட்டாக, பன்மடங்கான கொலைகள் அதாவது,

குடும்பத்திலுள்ள அனைவரும் அல்லது பெரும்பாலும் அனைவரும் அல்லது ஒரு குறிப்பிட்ட சாதியினர், சமூகத்தினர் அல்லது வட்டாரத்தைச் சேர்ந்த அதிக எண்ணிக்கையிலான நபர்கள் கொலை செய்யப்படுகிறபோது.

V. கொலையால் பலியானவரின் ஆளுமை

37. கொலையால் பலியானவர் *(அ)* ஏதுமறியா ஒரு குழந்தையாக இருந்து, அதன் தவறை குறைந்தபட்சம் பொறுக்கமாட்டாமல் அல்லது மன்னிக்காமலுங்கூட அதை கொலை புரிவதற்காக தூண்டப்படுகிறபோது, *(ஆ)* உதவியற்ற பெண்மணி அல்லது முதிய வயதினராக அல்லது பலவீனமாக உள்ள உதவியற்ற நபர் *(இ)* கொலையாளி, பலியானவரின் மீது ஆதிக்கம் செலுத்தும் நிலையிலோ அல்லது அவரது நம்பிக்கைக்குரிய நபராக இருக்கிறபோது *(ஈ)* பலியானவர் பொதுவாக, ஒரு சமூகத்தினருக்கு சேவைகள் செய்து அவர்களால் அன்பு பாராட்டப்பட்டு, மதிக்கப்படும் பொது நபராக இருந்து, தனிப்பட்ட காரணங்களுக்காக அன்றி அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது இதேபோன்று வேறுகாரணங்களுக்காகவோ கொலை செய்யப்படுகிறபோது.

38. இப்பின்னணியில், பச்சன் சிங் வழக்கில் [*(1980) 2 எஸ்.சி.சி. 684 : 1980 எஸ்.சி.சி. (கிரி.) 580 : ஏ.ஐ.ஆர். 1980 எஸ்.சி. 898 : 1980 கிரி. லா ஜெ. 636*] குறிப்பிடப்பட்ட வழிகாட்டுதல்களை தேர்ந்தெடுத்து, மரண தண்டனை விதிப்பதற்காக கேள்வி எழுகிறவிடத்து, ஒவ்வொரு தனிப்பட்ட வழக்கின் பொருண்மைகளுக்கு அவற்றைப் பயன்படுத்தவேண்டும். பின்வரும் அறுதியுரைகள் பச்சன் சிங் வழக்கு [*(1980) 2 எஸ்.சி.சி. 684 : 1980 எஸ்.சி.சி. (குற்ற) 580 : ஏ.ஐ.ஆர். 1980 எஸ்.சி. 898 : 1980 கிரி. லா ஜெ. 636*]-லிருந்து தெரிகின்றன.

"(i) உச்சநிலையான கொடிய குற்றம் புரிந்திருக்கிற வழக்குகளைத் தவிர, அதிகப்பட்ச தண்டனையான மரண தண்டனை விதிக்கப்படத் தேவையில்லை.

(ii) மரண தண்டனை விதிப்பதை தேர்ந்தெடுக்கும் முன் 'குற்றம்' புரிந்த சூழ்நிலைகளுடன் சேர்த்து 'குற்றவாளி'யின் சூழ்நிலையையும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகிறது.

(iii) ஆயுள் சிறைத்தண்டனை என்பது ஒரு விதியாகும், மரண தண்டனை என்பது ஒரு விதிவிலக்காகும். அதாவது, ஆயுள் சிறைத்தண்டனை, குற்றத்திற்கு தொடர்புடைய சூழ்நிலைகளைப் பொறுத்து ஒட்டுமொத்தமாக போதாத தண்டனையாகத் தெரிந்து,

அது விதிக்கப்பட்டு, மேலும் அது மட்டுமே விதிக்கப்படுகிறபோது, குற்றத்தின் தன்மையையும், சூழ்நிலைகளையும் மற்றும் அனைத்து சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு, ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கும் தெரிவுரிமையை உளச்சான்றுடன் செயலுறுத்தப்பட இயலாது என்கிறபோது மரண தண்டனைதான் கண்டிப்பாக விதிக்கப்படவேண்டும்.

(iv) குற்றத்தினை கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளின் ஒப்பீட்டுக் குறிப்பை வரையவேண்டும், அவ்வாறு செய்கையில், குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளுக்கு முழு மதிப்பளிக்கப்படவேண்டும் மற்றும் இத்தெரிவுரிமையைச் செயலுறுத்துவதற்கு முன்பாக குற்றத்தினை கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழநிலைகளுக்கிடையேயான சரிசமநிலையை அடித்துவிடவேண்டும்.

39. மற்றவற்றுக்கிடையில் இவ்வழிகாட்டுதல்களைப் பயன்படுத்தும்பொருட்டு, பின்வரும் வினாக்கள் கேட்கப்பட்டு, அதற்கு பதிலளிக்கப்படலாம்:

(அ) குற்றத்திற்கு ஆயுள் சிறைத்தண்டனை போதாமல், மரண தண்டனை கோருகிறபோது, அதில் வழக்கத்திற்கு மாறானது ஏதுமுள்ளதா*?*

(ஆ) குற்றவாளிக்கு ஆதரவாக இருக்கும் குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளுக்கு அதிகபட்ச மதிப்பளித்த பிறகுங்கூட மரண தண்டனை விதிப்பதல்லாத வேறு மாற்று தண்டனை ஏதும் விதிக்க இயலாத அளவுக்கு குற்றத்தின் சூழ்நிலைகள் உள்ளனவா*?"*

இவ்வழக்கில் அதாவது இந்நீதிமன்றத்தின் முன்பு உள்ள மேல்முறையீட்டாளரான காஷ்மீர் சிங்கைப் பொறுத்தவரையில், *37*-ஆவது பத்தியைப் பயன்படுத்தி, குற்றத் தீர்ப்பு பின்வருமாறு உறுதிசெய்யப்படுகிறது:-

"44. மேல்முறையீட்டாளர் காஷ்மீர் சிங், த/பெ. அர்ஜூன் சிங்-ஐப் பொறுத்தவரையில், அவருக்கு அமர்வு நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்வரும் காரணங்களுக்காக அது உயர் நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டது:

அதேபோன்று, கொலை புரியும் கொடிய மனநிலையைப் பிரதிபலிக்கும் சீர்கெட்ட மனநிலையால் மேல்முறையீட்டாளரான காஷ்மீர் சிங் ஒரு பரிதாபகரமான, பாதுகாப்பற்ற ஆறு வயது

குழந்தை பல்பீர் சிங் உறங்கி கொண்டிருக்கையில் அதன் உயிரைப் பறித்துவிட்டார்."

இவ்வாறாக, நீதிமன்றத்தின் மனச்சான்றை உலுக்கிய, 6 வயது குழந்தை, கொலையால் பலியான இப்பொருண்மையே இந்த காஷ்மீர் சிங் வழக்கை அரிதினும் அரிய வழக்காக்குவதற்கு போதுமானதெனத் தெரியவருகிறது.

19. **முகேஷ் -எதிர்- மாநில அரசு (டெல்லி என்.சி.டி.),** (2017) 6 எஸ்.சி.சி. 1 என்ற வழக்கில் இந்நீதிமன்றம், நீதியரசர் தீபக் மிஸ்ரா அவர்கள் மற்றும் நீதியரசர் ஆர். பானுமதி அவர்களின் பல தீர்ப்புரைகளை விவாதிக்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தது, அவற்றில், குற்றத்தினை கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளைப் பரிசீலித்தபிறகு, இந்நீதிமன்றம் கொடிய குற்றங்களைப் பொறுத்தமட்டில் மரண தண்டனையையோ அல்லது ஆயுள் சிறைத்தண்டனையையோ தீர்வளித்துள்ளது. நீதியரசர் தீபக் மிஸ்ரா அவர்களின் தீர்ப்புரையில் 322-ஆவது தீர்ப்புரையிலிருந்து, இவ்வனைத்து தீர்ப்புரைகளும் மிகவும் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளதால், நாங்கள் மீண்டும் இதனை கூறத்தேவையில்லை. 349-ஆம் பத்தியில், **தனஞ்ஜெய் சாட்டர்ஜி -எதிர்- மேற்கு வங்க மாநில அரசு,** (1994) 2 எஸ்.சி.சி. 220 குறிப்பிடப்பட்டிருந்தது, அதில், 18 வயது பெண்ணை வன்புணர்ச்சி செய்து கொலை செய்ததில், இந்நீதிமன்றத்தால் மரண தண்டனையை உறுதிசெய்ததில் முடிவுற்றது. அதற்கு இணையாக, 350 மற்றும் 351-ஆவது பத்திகளில், **லக்ஷ்மண் நாயக் -எதிர்- ஒரிசா மாநில அரசு,** (1994) 3 எஸ்.சி.சி. 381 என்ற வழக்கு குறிப்பிடப்பட்டிருந்தது, அதிலும் 7 வயது சிறுமி, அவளது மாமா/ பெரியப்பா/சித்தப்பா-ஆல் வன்புணர்ச்சி செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டதில், இந்நீதிமன்றத்தால் மரண தண்டனை உறுதிசெய்ததில் முடிவுற்றது. மேற்படி

தீர்ப்புரையின் 353 மற்றும் 351-ஆவது பத்திகளில் குறிப்பிடப்பட்டிருந்த **பண்டு -எதிர்- உத்தரப் பிரதேச மாநில அரசு,** (2008) 11 எஸ்.சி.சி. 113 மற்றும் **இராஜேந்திர பிரகலாத்ராவ் வஸ்நிக் -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு,** (2012) 4 எஸ்.சி.சி. 37 ஆகியவையும் இதேபோன்ற வழக்குகளாகும்.

20. பத்தி 356-இல் குறிப்பிடப்பட்டிருந்த **அக்தார் -எதிர்- உத்தரப் பிரதேச மாநில அரசு,** (1999) 6 எஸ்.சி.சி. 60 என்ற இதேபோன்றதொரு வழக்கில் இளம்பெண் ஒருவர் வன்புணர்ச்சி செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டார், அதில் இந்நீதிமன்றம் ஆயுள் சிறைத்தண்டனை விதித்தது, ஏனென்றால், அவ்வழக்கில் அப்பெண் வன்புணர்ச்சி செய்ய கூட்டிச்செல்லப்பட்டாளேயன்றி, திட்டமிட்டோ அல்லது முன்சிந்தனையேதும் செய்தோ அவளை கொலை செய்யவில்லை என்று சாட்சிகளின் சாட்சியம் தெரிவித்தது. அதேபோன்று, 357-ஆவது பத்தியில் குறிப்பிடப்பட்டிருந்த **மகாராஷ்டிர மாநில அரசு -எதிர்- பரத் பகிரா திவார்**, (2002) 1 எஸ்.சி.சி. 622-இல், 3 வயது பெண் குழந்தை வன்புணர்ச்சி செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்ட வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவர் முன்னதாக உயர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டிருந்ததால், "இவ்வழக்கு 'அரிதினும் அரிதான வழக்கு' ..... என்ற அபாயகரமான பகுதிக்கருகே உள்ளது" என்ற பொருண்மையிருப்பினும், மரண தண்டனை விதிப்பதைத் தவிர்ப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானித்தது.

21. 358 முதல் 362 வரையுள்ள பத்திகள், **வசந்தா சம்பத் துபாரே -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு,** (2017) 6 எஸ்.சி.சி. 631 என்ற வழக்கை விவாதித்தது, அதில் ஒரு இளவர் பெண் குழந்தை வன்புணர்ச்சி செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டாள். இந்நீதிமன்றத்தால் மரண தண்டனை உறுதி செய்யப்பட்டது. தீர்ப்புரை மறுஆய்வின்கீழ் இருந்தபோது குற்றஞ்சாட்டப்பட்டவர் இளங்கலை பயிற்சி

படிப்பை முடித்திருந்தார், மேலும் சிறை பதிவேட்டிலும் அவர் குறித்து எந்தக் குறையும் கூறப்படவில்லை என்ற பொருண்மை இருந்தபோதும், பின்னர் பொது மன்றத்தில் மறுஆய்வு மனுவை விசாரித்தபிறகு மரண தண்டனை மீண்டும் உறுதிசெய்யப்பட்டது. இதிலிருந்து எந்தக்கருத்து முன்னிறுத்தப்படுகிறதென்றால், குற்றஞ்சாட்டப்பட்டவரை சீர்திருத்தி, மறு வாழ்வளிக்கும் சாத்தியம் உள்ளதால், மரண தண்டனை விதிக்கப்படக்கூடாது என்பதாகும். குற்றமானது படுமோசமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் செய்யப்பட்டது என்று கூறி இவ்வாதத்தை இந்நீதிமன்றம் நிராகரித்தது, மேலும், பலியானவர் உதவியற்ற 4 வயது பெண் குழந்தையாகும் என்ற பொருண்மை, குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளை தெளிவாகவே புறந்தள்ளி, மறுஆய்வு மனுவைத் தள்ளுபடி செய்ததில் முடிந்தது. பின்னர், நீதிமன்றம் அவ்வழக்கின் பொருண்மைகளின்பேரில் மரண தண்டனையை உறுதி செய்தது, அவை பின்வருமாறு:

> *"363.* தற்போது நாம், குற்றத்தின் தன்மை மற்றும் அது எம்முறையில் புரியப்பட்டுள்ளது என்பது குறித்து கவனிப்போம். கற்றறிந்த மூத்த வழக்குரைஞரின் வாதமாவது, இவ்வழக்கு, சமூக நம்பிக்கையைப் பாழாக்கி, அதன் ஒட்டுமொத்த ஸ்திரத்தன்மையை முற்றிலும் அழித்து, சமூகத்தினருக்கு கடுங்கோபத்தை வரவழைத்துள்ளது. இத்தன்மையுடைய குற்றம், அச்ச உணர்வை தோற்றுவிப்பதுடன், அரிதினும் அரிதான வழக்குகள் என்ற வகையின் கீழ் நிச்சயமாக வரவேண்டியதாகும்.
>
> *364.* இந்த வழக்கில், மிருகத்தனமான, காட்டுமிராண்டித்தனமான கொடூரத்தனமான குற்றமானது புரியப்பட்டுள்ளது என்பதை இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். இது குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் செய்யப்பட்ட செயல்களிலிருந்து தெரியவருகிறது. அதாவது, அ.சா.*1* தகவல் கொடுத்தவரை இரும்பு கம்பியால் தாக்கி, அவரது துணிகளை கிழித்து, தகவல் கொடுத்தவரையும், இறந்தவரையும் கைகளாலும், எட்டி உதைத்தும், இரும்புக் கம்பியாலும் தாக்கி, கடன் அட்டைகள், மோதிரம், தகவல் கொடுத்தவரின் காலணிகள் போன்ற இன்னபிற அவர்களின் சொந்தப் பொருட்களை திருடியது; அனைத்து

மேல்முறையீட்டாளர்களும், பலவந்தமாக இறந்தவரின் ஆடைகளை களைந்து, கொடூரமாக பாலியல் வன்முறைக்குள்ளாக்கித் தாக்கியது; இறந்தவரிடம் மிருகத்தனமாக நடந்து, அவருடன் குதப்புணர்ச்சிசெய்து, வாய்வழியும் அவரை புணர்ச்சிசெய்ய பலவந்தப்படுத்தியது; இறந்தவரை கடித்ததால் ஏற்பட்ட உடற்காயங்கள் *(10* எண்ணிக்கை*)*; அவரது அந்தரங்கப் பகுதிகளில் கம்பியை உட்செலுத்தியதால், அவரது குடலில் துளை ஏற்பட்டு சீழ்த்தொற்று ஏற்பட்டது. இறுதியாக அவர் மரணத்தைத் தழுவியது. கம்பியையும், கைகளையும் மீண்டும் மீண்டும் உட்செலுத்தியதால் பெண் குற்றமுறையீட்டாளரின் குடல் முழுவதிலும் துளை விழுந்து வெளியில் வந்துவிட்டது என குற்றமுறையீட்டாளரின் மருத்துவக் குறிப்பு *(*அ.சா.ஆ.*50/*ஏ மற்றும் அ.சா.ஆ.*50* என்ற ஆவணங்களில் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது*)* தெளிவுப்படுத்துகிறது; மேல்முறையீட்டாளர்கள் பெண் குற்றமுறையீட்டாளரின் உள்ளுறுப்புகளை மிகவும் கொடூரமாகவும், மனிதாபிமானமற்ற முறையிலும் வெளியில் இழுத்ததன் காரணமாக, கடுமையாக காயங்கள் ஏற்பட்டு, இறுதியாக அவரது உயிரைப் பறித்துவிட்டது. குற்றமுறையீட்டாளரின் முகம், உதடுகள், தாடைகள், காதருகில், வலது மற்றும் இடது மார்பகம், இடது மேல்கை, வலது கீழ் கால்பகுதி, வலது உள் இடுப்பு, வலது கீழ் தொடை, இடது பக்கவாட்டு, இடது கீழ் முன்பக்க தொடை மற்றும் பிறப்புறுப்புகள் ஆகியவற்றில் பற்கால் கடித்த பல்வேறு காயங்கள் காணப்பட்டன என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்களால் செய்யப்பட்ட இச்செயல்களே அவர்களின் வக்கிர மனத்தையும், நினைத்துக்கூட பார்க்கமுடியாத மிருகத்தனத்தையும் எடுத்துக்காட்டுகிறது. மேலும் மெய்ப்பிக்கப்பட்டவாறு, அவர்கள், தகவல் கொடுத்தவரையும், இறந்தவரான பாதிக்கப்பட்டவரையும், குளிர்கால இரவில் சாலையில் தூக்கி எறிந்தனர். தகவல் கொடுத்தவரையும், இறந்துபோன பாதிக்கப்பட்டவரையும் தூக்கியெறிந்தபிறகு, குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள், அவர்களுக்கு எதிராக சாட்சியம் ஏதும் இருக்கக்கூடாது என்பதற்காக, அவர்கள் மீது பேருந்தை ஏற்றிக் கொல்ல முயன்றனர். அவர்கள் சான்றுகளை அழிக்க எடுக்கக்கூடிய அனைத்து முயற்சிகளையும் எடுத்ததற்கிடையே, பேருந்தை கழுவி, இறந்தவரின் துணிகளையும் கொளுத்திவிட்டனர் மற்றும் இக்கொடுஞ்செயலை நிறைவேற்றிய பிறகு, அவர்கள் கொள்ளையடித்த பொருட்களை தங்களுக்கிடையே பிரித்துக்கொண்டனர்.

365. மருத்துவச் சான்று, வாய்மொழி சான்று மற்றும் மரண வாக்குமூலங்கள் ஆகியவற்றால் உறுதி செய்யப்பட்டுள்ளவாறு நாங்கள் சம்பவத்தை எடுத்துரைத்துள்ளவாறு, குற்றஞ்சாட்டப்பட்ட நபர்கள், அவரை ஓர் அனுபவிக்கும் பொருளாகக் கண்டனர் என்பது

நன்கு வெளிப்படை. மேலும், தெளிவாவதைப்போன்று, அவர்கள் வேறெந்த உணர்வுமின்றி, அவரை வன்புணர்ச்சி செய்யும் ஒரே நோக்கம் அவர்களை ஆட்டிப்படைக்க, அவர்கள் விரும்பியவாறு அவரை வன்புணர்ச்சி செய்து, தங்கள் உணர்ச்சிக்கேற்ப அவரை நடத்தினர், இன்னுஞ்சொல்லப்போனால், மற்றவர்களைக் கொடுமைப்படுத்தி இன்பங்காணும் கொடிய மனமும், இன்பமடையும் அகத்தூண்டல் உணர்வுகளும் அவர்கள் முன்னால் வந்து நின்றன, அவரை, அவர்கள் வன்புணர்ச்சி செய்த பிறகு, அவரை, அவரது நண்பருடன் சேர்த்து பேருந்திலிருந்து தூக்கியெறிந்து ஒழித்துவிடுவதை ஒரு சாதாரணமான விசயமாகவே கருதினர். அவரது அடையாளத்துடனும், மாண்புடனும் அவர்கள் மிக மோசமாக விளையாடிய விதமும், அவரை மனப்போக்கான முறையில் நடத்திய விதமும் மனிதத்தன்மையோடு நினைத்துக்கூட பார்க்கமுடியாது. இதைப்பார்த்தால், மனித இனத்தை மதிப்புக்கேடுடன் நடத்துகின்ற வேற்றுலகத்திலிருந்து வந்த கதைப்போல இருக்கிறது. காமப் பசியும், வன்முறை வேட்கையும், அதிகார பலமும், கயமைத்தனமும் இவையாவும் எதைச் செய்யக்கூடாது என்று அறியும் ஒட்டுமொத்த மக்களின் மனச்சான்றை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன. காமவெறி பிடித்து, முற்றிலும் கட்டுக்கடங்காத சிற்றின்ப ஆசையில் கட்டுண்டு, அருவருக்கத்தக்க மிருகத்தனமான உணர்ச்சிக்கு ஆட்பட்டு, இவையாவும் குற்றம் புரிய மேல்முறையீட்டாளர்களின் மனதை ஆட்டிப்படைத்ததையடுத்து, இது ஒட்டு மொத்த மக்களின் மனதில் "சுனாமி" வந்ததைப்போன்று உலுக்கி, மொத்தத்தில் நாகரீக சமூதாயத்தின் சாராம்சத்தை அழித்துவிடலாம்."

xxx xxx xxx

"512. இளம்பெண் ஒருவரை கொடூரமாக கூட்டு வன்புணர்வு செய்து அவரது அந்தரங்கப் பகுதியில் இரும்புக் கம்பி செருகிய மிகவும் பயங்கரமான காட்டுமிராண்டித்தனமான செயலில் ஈடுபட்டு, அவரை கொலை செய்த இவ்வழக்கில், நாங்கள் இங்கு உரிய தண்டனைத் தீர்வளிக்க கடமைப்பட்டுள்ளோம். ஆறு பேர் ஒன்றுகூடி கூட்டுச்சதி செய்து இச்செயலை செய்தனர், அவர்கள் ஒரு பொது போக்குவரத்தான பேருந்தை, பயணிகளை ஈர்க்கும்வண்ணம் காட்சிப்பொருளாக்கி, அவர்களிடம் குற்றம் புரிந்து மோசமான களியாட்டத்தில் இருந்தனர். பலியானவரை வன்புணர்ச்சி செய்து, சித்ரவதை செய்யும் உட்கருத்துடன் அவரையும், அவரது நண்பனையும் தீயயெண்ணத்துடன் முனீர்கா பேருந்து நிலையத்திலிருந்து ஏற்றி வந்தனர். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பலியானவரை கடத்தியதோடன்றி, அவரை கூட்டு வன்புணர்வு செய்து, அவரை வாய்வழி புணர்வுகொள்ள பலவந்தப்படுத்தி, அவரது உதடுகள், கன்னங்கள், மார்பகத்தை கடித்து, அவரது அந்தரங்க பகுதியில் இரும்பு கம்பியை செருகியதால், அது

யோனிக்குழாய் பகுதி, சிறுகுடலின் நடுப்பகுதி மற்றும் மலக்குடலை கிழித்து பயங்கரமான காயங்களை விளைவித்தது. கொடூரமான முறையில் குற்றம் புரியப்பட்டதைப் பார்த்தால், குற்றம் புரிந்தவரின் வக்கிர மனநிலை குறித்து திடுக்கிடச் செய்கிறது. அதற்கும் மேலாக, பேருந்தை அவர் மீது ஏற்றி அவ்விடத்தில் அவரைக் கொல்ல முயன்று, அது தவறியதால் பலியானவரை கொடுங்காயங்களுடன் குளிர்மிகுந்த இரவில் அரை நிர்வாணமாக தூக்கி எறிந்தனர்.

513. இவ்வழக்கில் நாம், குற்றத்தினை கடுமையாக்கும் சூழ்நிலைகளைப் பார்த்தோமானால், பின்வரும் காரணிகள் தெரியவரும்:

(i) குற்றத்தின் கொடூரத்தன்மையும், குற்றம் புரிந்த விதமும், பலியானவரை கூட்டு வன்புணர்வு புரிந்ததில் பிரதிபலிக்கிறது, அதாவது அவரை வாய்வழி புணர்வுக்கு பலவந்தப்படுத்தி, இறந்தவரை கடித்த அடையாளங்களால் அவரின் உடலின் மீதான காயங்கள்; அவரது அந்தரங்கப் பகுதிகளில் இரும்புக் கம்பியைச் செருகி, அவரது அந்தரங்க பகுதிகளில், மரணக் காயங்களையும், மற்ற உள் பகுதிகளில் காயங்களையும் விளைவித்தல்; அவரது உள்ளுறுப்புகளை வெளியில் இழுத்ததன் காரணமாக சீழ்த்தொற்று ஏற்பட்டு இறுதியில் அவர் மரணத்தைத் தழுவுதல்; பலியானவரையும், குற்றமுறையீட்டாளரையும் *(அ.சா.1)* குளிர்கால இரவு குளிரில் தூக்கியெறிந்து, அவர்கள் மீது பேருந்தை ஏற்ற முயற்சி செய்தல் ஆகியவை.

(ii) திமிர்த்தனத்துடனும், உணர்ச்சியற்றத்தன்மையுடனும் ஒரு பொது இடத்திலிருந்து மாலை நேரத்தில் இறந்தவரையும், பாதிக்கப்பட்டவரையும் ஏற்றிக்கொண்டு வந்து, புரிந்த செயல்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்களை உரியமுறையில் தண்டிக்காவிட்டால், அது சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல் நிலையைப் பிரதிபலிக்கிறது. மேலும், அது சீர்திருத்தக்கூடிய வாய்ப்பின்மையையும் பிரதிபலிக்கிறது.

(iii) குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சமுதாய விதிமுறைகளை மட்டுமின்றி, மனிதநேய நெறிமுறைகளையும் முற்றிலுமாக மறந்து, தங்கள் காம இச்சையை தணித்துக்கொள்ள மனிதத்தன்மையற்ற செயல்களைப் பிரதிபலிக்கும் பயங்கரமான செயல்களைச் செய்யுமளவுக்குச் சென்றுவிட்டனர்.

(iv) புரியப்பட்ட செயல்கள் சமுதாயத்தின் மனச்சான்றை மிகவும் உலுக்கியது.

514. ஏற்கெனவே குறிப்பிடப்பட்டவாறு, தண்டனை விதித்தல் என்ற அம்சத்தின்பேரில், மரண தண்டனையிலிருந்து ஆயுள் சிறைத்தண்டனையாக குறைக்கக்கோரி, மூன்று குற்றவாளிகள்/ மேல்முறையீட்டாளர்களான, கு.சா.3-அக்ஷய், கு.சா.4-வினய் மற்றும் கு.சா.5-பவன் ஆகியோர் குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளை, 23.3.2017-ஆம் தேதியிடப்பட்ட தனித்தனி ஆணையுறுதியாவணங்களை பதிவுருவில் முன்வைத்தனர், அது பின்வருமாறு:

(அ) வறுமை மற்றும் கிராமப்புற பின்னணி போன்ற குடும்பச் சூழ்நிலைகள்,

(ஆ) இள வயது,

(இ) முதிய வயது பெற்றோர்கள், குடும்ப உறுப்பினர்களின் உடல்நலக் குறைவு மற்றும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் செய்யவேண்டிய அவர்களுடைய பொறுப்புகள் உட்பட தற்போதைய குடும்ப நிலைமை,

(ஈ) குற்ற முன்னடத்தை இல்லாமை,

(உ) சிறையில் நடத்தை மற்றும்

(ஊ) சீர்திருத்தம் செய்வதற்கான சாத்தியத்தன்மை.

குற்றஞ்சாட்டப்பட்ட முகேஷ், தனது ஆணையுறுதியாவணத்தில், தனது குற்றமற்றத்தன்மையை வலியுறுத்தி, தான் இவ்வழக்கில் பொய்யாகச் சிக்கவைக்கப்பட்டுள்ளதை வாதிட்டார்.

515. புருஷோத்தம் தஷ்ரத் போரதே -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு (புருஷோத்தம் தஷ்ரத் போரதே -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு, (2015) 6 எஸ்.சி.சி. 652 : (2015) 3 எஸ்.சி.சி. (கிரி.) 326) என்ற வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவரின் வயதோ அல்லது குடும்பப் பின்னணியோ அல்லது குற்ற முன்னடத்தைகள் இல்லாமையோ, குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலையாகச் சொல்லப்படமுடியாது. மேலும், குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலையாக குறிப்பாக குற்றத்தின் கொடிய தன்மையையும், குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் அது செய்யப்பட்ட கொடூரமான முறையையும் கருத்திற்கொண்டால், அதை அவ்வாறாகக் கருதப்படமுடியாது.

516. குற்றத்தைத் தடுக்கும்விதமாக, அதன் கொடிய தன்மைக்கேற்ற தண்டனை வழங்கப்படவேண்டும் என்பது

சமூதாயத்தின் நியாயமான எதிர்ப்பார்ப்பாகும். குற்றம் கொடூரமானதாகவும், ஒட்டுமொத்த சமூகத்தின் மனச்சான்றையும் அதிர்ச்சிக்குள்ளாக்குகிறபோது, எவ்விதத்திலும் தகுதியற்றவரிடம் இரக்கங்காட்டப்படக்கூடாது, இது, குற்றவியல்-நீதி வழங்குமுறையில் பொதுமக்களின் நம்பிக்கையை ஆட்டங்காணச் செய்துவிடும். ஓம் பிரகாஷ் -எதிர்- உறரியானா மாநில அரசு, *(1999) 3 எஸ்.சி.சி. 19 : 1999 எஸ்.சி.சி. (கிரி. 334)*-இல் தீர்மானிக்கப்பட்டவாறு, நீதிமன்றம், சமுதாயத்தின் குரலுக்கு பதிலளிக்கவும், வெளிப்படையான மோசமான எந்தக் குற்றத்திற்கு, அதனை தடுக்கும் தண்டனையாக எது இருக்கும் என்பதையும் தீர்வுசெய்யவேண்டும்.

517. தண்டனைக் கொள்கையை முறைப்படுத்துகின்ற மேற்படி கோட்பாடுகளை மனதிற்கொண்டு, நான் இவ்வழக்கிலுள்ள குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகள் அனைத்தையும் பரிசீலித்துள்ளேன். உரிய தண்டனையை விதிப்பதுவே, குற்றத்திற்கெதிராக நீதிக்காக குரல்கொடுக்கும் சமுதாயத்திற்கு நீதிமன்றங்கள் பதிலளிக்கும் விதமாகும். நீதிமன்றங்கள் குற்றத்திற்குரிய தண்டனைகளை விதித்தால்தான், அதுகுறித்து பொதுப்படையான வெறுப்பை பிரதிபலிக்கும். நம்முன் உள்ள குற்றத்தைப் போன்ற ஒன்றை பெருந்தன்மையாகப் பார்க்கமுடியாது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் இளவயது மற்றும் ஏழ்மை பின்னணி போன்ற காரணக்கூறுகள் குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளாகச் சொல்லப்படமுடியாது. அதேபோன்று, குற்றத்திற்கு பின் வருந்துதல் குற்றத்திற்கு பின் குற்றஞ்சாட்டப்பட்டவரின் நன்னடத்தை, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குடும்பப் பின்னணி மற்றும் சூழ்நிலைகள் குறித்து அவர்களின் கூற்று, வயது, குற்ற முன்னடத்தை இல்லாமை மற்றும் சிறையில் அவர்களின் நன்னடத்தை ஆகியவை என்னுடைய கருத்துப்படி, "அரிதினும் அரிதான வழக்குகள்" என்ற வகையிலிருந்து வழக்கை விலக்கி, குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளாக எடுத்துக்கொள்ளப்படயியலாது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களால், தங்களது ஆணையுறுதியாவணங்களில் சொல்லப்பட்ட சூழ்நிலைகள் குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளாகக் கருதப்படுவதற்கு மிகவும் சாரமற்றவையாகும்.

518. இவ்வழக்கில், குற்றத்தினைக் கடுமையாக்கும் சூழ்நிலைகளைப் பொறுத்தவரை, அவை குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளைக்காட்டிலும் முக்கியத்துவம் பெறுகிறது என்பதில் என் மனதில் சிறிதளவுக்கூட தயக்கமில்லை மற்றும் கீழமை நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட மரண தண்டனையை, "எஞ்சிய வாழ்நாளை ஆயுள் தண்டனையாக"

கழிப்பதற்கான தண்டனையாக மாற்றுவதற்கு எந்த நியாயத்தையும் நான் காணவில்லை. கொடூரமான குற்றங்கள், படுபயங்கரமாக புரியப்பட்டுள்ளன. மனித இச்சை, அத்தகையதொரு பேய் வடிவமெடுக்க அனுமதிக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் கல்மனம் கொண்டவர்களல்லர்; ஆனால், ஓடிக்கொண்டிருக்கும் பேருந்தில் கொடூரமான முறையில் கூட்டு வன்புணர்ச்சி செய்தனர்; இரும்பு கம்பிகளை, பலியானவரின் அந்தரங்க பகுதிகளில் செருகினர்; பாதிக்கப்பட்ட இருவரையும் டிசம்பர் மாத குளிர்கால இரவு கடுங்குளிரில் நிர்வாணமாக தூக்கியெறிந்தனர், இவையாவும் ஒட்டுமொத்த சமூதாயத்தின் மனச்சான்றை உலுக்கியது. வேறேதேனும் தண்டனை என்ற கேள்வியானது, "சந்தேகத்திற்கிடமின்றி முடக்கப்படுகிறது" எனுமிடத்து இவ்வழக்கு "அரிதினும் அரிதான வழக்குகள்" என்ற வகைக்குள் தெளிவாகவே வருகிறது. மரண தண்டனை தீர்வளிப்பை வேண்டுறுத்துகின்ற வழக்கு எதுவென்றாலும், அது இவ்வழக்கேயாகும். கூட்டு வன்புணர்வு செய்தல், இயற்கைக்கு மாறான பாலுணர்ச்சி, பலியானவரின் அந்தரங்க பகுதிகளில் இரும்பு கம்பியைச் செருகுதல் போன்ற பயங்கரமான செயல்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் அரங்கேற்றப்பட்டிருப்பது, "அரிதினும் அரிதான வகை"-இல் வராதெனில், பின்னர் அவ்வகையில் எதுதான் வரும் என ஒருவர் ஆச்சர்யப்படலாம். என்னால் பதிவு செய்யப்பட்ட இக்காரணவிளக்கங்களின்பேரில், குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தீர்வளிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதிசெய்ததில் நான் பெரும்பான்மையோருடன் இணங்குகிறேன்."

22. **குஷ்விந்தர் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு,** *(2019) 4* எஸ்.சி.சி. *415*-இல், இந்நீதிமன்றம் குற்றஞ்சாட்டப்பட்டவரின் மரண தண்டனையை உறுதிசெய்தது, அதில் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆறு ஏதுமறியா நபர்களை கொன்றுவிட்டார், அதில் இருவர் இளவர்கள், மூன்று நபர்கள் கடத்தப்பட்டு, தூக்க மாத்திரைகள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டு, பின்னர் அவர்கள் கால்வாய்க்குள் தள்ளிவிடப்பட்டனர். அதன்பின்னர், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று நபர்களும் ஒழித்துக்கட்டப்பட்டனர். இந்நீதிமன்றம் பின்வருமாறு மரண தண்டனை தீர்வளிப்பை உறுதிசெய்தது:-

"14. தற்போது, அறிவார்ந்த அமர்வு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்ட மரண தண்டனையைப் பொறுத்தமட்டில், குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பாக ஆஜரான கற்றறிந்த வழக்குரைஞர், மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்கத் தேவைப்படும் குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகள் எதனையும் சுட்டிக்காட்டும் நிலையிலில்லை என்பதை ஆரம்பத்திலேயே குறிப்பிடவேண்டியதாகிறது. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஏதுமறியா ஆறு நபர்களை கொன்றுவிட்டார், அவர்களில் இருவர் 10 வயதிற்கும் கீழான இளவர்கள், பெரும்பாலும் அ.சா.5-இன் குடும்ப அங்கத்தினர் அனைவரும் கொடூரமாகவும், கீழ்த்தரமான முறையிலும் கொல்லப்பட்டனர். அதிர்ஷ்டவசமாகவோ அல்லது துரதிருஷ்டவசமாகவோ, அ.சா.5-இன் குடும்பத்தில் ஒரேயொருவர் உயிருடன் இருக்கமுடிந்தது. இவ்வழக்கில் ஏதுமறியா ஆறு பேரை முன்திட்டமிட்டு கொன்றுவிட்டார். குற்றவாளி நேரத்தை மிகக் கவனமாக திட்டமிட்டார். அவர் முதலில் மூன்று நபர்களை ஏமாற்றி, கடத்திச்சென்று, கால்வாய்க்கு கூட்டிச்சென்று, அவர்களுக்கு தூக்க மாத்திரைகளைக் கொடுத்து, குற்றத்தைக் கண்டுபிடிக்கமுடியாததென உறுதிப்படுத்திக்கொண்டு நள்ளிரவில் கால்வாய்க்குள் அவர்களை தள்ளிவிட்டார். அதன்பிறகு அவர் இரண்டாம் நிலையாக/தவணையாக மற்ற மூன்று நபர்களை கொன்றார். முகேஷ் -எதிர்- மாநில அரசு (என்.சி.டி. டெல்லி [முகேஷ் -எதிர்- மாநில அரசு (என்.சி.டி. டெல்லி), (2017 6 எஸ்.சி.சி. 1 : (2017) 2 எஸ்.சி.சி. (கிரி.) 673]-இல் இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்படட சட்டத்தைப் பரிசீலித்துள்ளதால், இவ்வழக்கு தூக்கு தண்டனையை/மரண தண்டனையை வேண்டுறுத்துகின்ற "அரிதினும் அரிதான வழக்கு" என்ற வகைக்குள் வரக்கூடியதாகும். ஆகவே, குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளுக்கிடையே துலாக்கோலைப் பிடித்துப்பார்த்தால், அத்துலாக்கோல் மரண தண்டனையை நோக்கியே சாய்ந்துநிற்கும் என்று நாங்கள் கருதுகிறோம். வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளின்படி, மரண தண்டனையைத் தவிர பொருத்தமான மாற்றுத் தண்டனை ஏதுமில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். குற்றமானது அதிகப்பட்ச கொடூரத்துடன் செய்யப்பட்டுள்ளது, மேலும் அது ஒட்டுமொத்த சமுதாயத்தின் மனச்சான்றை உறுக்கியது. ஆகவே, அறிவார்ந்த அமர்வு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட தூக்கு தண்டனை/மரண தண்டனையில், இந்நீதிமன்றத்தின் தலையீடு ஏதும் தேவையில்லை என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக மேல்முறையீட்டாளருக்கு குற்றத் தீர்ப்பு வழங்குகையில், அறிவார்ந்த

அமர்வு நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட மரண தண்டனையை நாங்கள் உறுதிசெய்கிறோம்."

இந்த வழக்கில், 10 வயது சிறுமியை முதலில் கொடுமையாக கூட்டு வன்புணர்வு செய்தபிறகு, அவளையும், 7 வயதான அவளது சகோதரனையும் ஒழித்துக்கட்டுவதற்கு, அவர்கள் விழித்திருக்கும்போதே கால்வாய்க்குள் தூக்கி எறிந்ததும், அவர்கள் அதில் மூழ்கி இறந்துவிட்டனர் என்பதால், (மேற்கண்ட) **குஷ்விந்தர்** வழக்கை விட இதில் மிகவும் அதிர்ச்சியளிக்கக்கூடிய குற்றமுள்ளது.

23. இத்தீர்ப்புரை உரைக்கப்பட்டுக்கொண்டிருக்கும் அச்சமயத்தில், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டம், 2012-இல் இராஜ்ய சபாவால் 24.7.2019 அன்று பிறப்பிக்கப்பட்ட "பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாத்தல் (திருத்தம்) மசோதா, 2019" (இதில் இதற்குப் பிறகு "திருத்தம்") மூலம் குறிப்பிடத்தக்க திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை நாங்கள் கண்டோம். அசல் சட்டத்தில், கொடுமையாக உள்நுழைக்கும் பாலியல் வன்முறையானது பிரிவு 5-இல் பின்வருமாறு பொருள் வரையறுக்கப்பட்டுள்ளது:-

"5. பாலியல் வன்முறையான கொடூரமாக உள்நுழைத்தல்:-

ஜி. ஒரு குழந்தையை கூட்டாக பாலியல் வன்முறையான உள்நுழைத்தல் செய்கிற எவரொருவரும்.

விளக்கம்:- ஒரு குழுவிலுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களால், தங்களின் பொது உட்கருத்தை நிறைவேற்றிக்கொள்ளும்வகையில் ஒரு குழந்தையை பாலியல் வன்முறைக்குள்ளாக்குகிறபோது, அந்த நபர்கள் ஒவ்வொருவரும், இக்கூறின் பொருளுக்குள் வரும் கூட்டு பாலியல் வன்முறையான உள்நுழைத்தல் செய்துள்ளதாக கருதப்படுதல்வேண்டும் மற்றும் அந்த நபர்கள் ஒவ்வொருவரும் அச்செயல் அதேமுறையில் அவரால் மட்டும் செய்யப்பட்டதைப்போன்று அதற்கு பொறுப்புடையராதல்வேண்டும்."

"எல்) குழந்தையை ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அல்லது திரும்பத்திரும்ப பாலியல் வன்முறையான உள்நுழைத்தல் செய்கிற எவரும்;
எம்) பன்னிரெண்டு வயதிற்கு கீழுள்ள குழந்தையை பாலியல் வன்முறையான உள்நுழைத்தல் செய்கிற எவரும்;"

xxx xxx xxx

"ஆர்) குழந்தையை பாலியல் வன்முறையான உள்நுழைத்தல் செய்து, அக்குழந்தையை கொலைசெய்ய முயற்சிசெய்யும் எவரும்;"

முதன்முதலில் பாலியல் வன்முறையான கொடூரமாக உள்நுழைத்தலுக்கான தண்டனை பின்வருமாறு:-

"6. பாலியல் வன்முறையான கொடூரமாக உள்நுழைத்தலுக்கான தண்டனை:-

பாலியல் வன்முறையான கொடூரமாக உள்நுழைத்தல் செய்கிற எவரும், பத்தாண்டுகளுக்கு குறையாத ஒரு கால அளவுக்கு கடுஞ்சிறைத்தண்டனையளித்து தண்டிக்கப்படுதல்வேண்டும், ஆனால் அது ஆயுள் தண்டனையாகவும் நீட்டிக்கப்படலாம் மற்றும் அபராதம் செலுத்துவதற்கும் உரியவராவார்."

திருத்தத்திற்குப் பின், பிரிவு 6 பின்வருமாறு பதிலமைக்கப்பட்டுள்ளது:-

"6. (1) பாலியல் வன்முறையான கொடூரமாக உள்நுழைத்தல் செய்கிற எவரும், இருபதாண்டுகளுக்கு குறையாத ஒரு கால அளவுக்கு கடுஞ்சிறைத்தண்டனையளித்து தண்டிக்கப்படுதல் வேண்டும், ஆனால் அது ஆயுள் தண்டனையாகவும் நீட்டிக்கப்படலாம், அது அந்த நபர் எஞ்சிய வாழ்நாளை சிறையில் கழித்தல்வேண்டும் என பெருள்படுகிறது மற்றும் அபராதம் செலுத்துவதற்கும் உரியவராவார் அல்லது மரண தண்டனையளித்து தண்டிக்கப்படுதல்வேண்டும்.

(2) உட்பிரிவு (1)-இன் கீழ் விதிக்கப்பட்ட அபராதம், உரியளவில் நியாயமானதாகவும், அதனை அந்த பாதிக்கப்பட்டவர் மருத்துவச் செலவுகளை எதிர்கொள்ளவும், அவருடைய மறுவாழ்வுக்காகவும், அவருக்கு கொடுத்தல்வேண்டும்."

குறைந்தபட்ச தண்டனை 10 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது என்பது ஆயுள் சிறைத்தண்டனையானது, தற்போது அந்நபர்

எஞ்சிய வாழ்நாள் முழுவதையும் சிறையில் கழிக்கப்படவேண்டுமென்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறதென்றால் மரண தண்டனையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதேயாகும்.

24. இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, 10 வயது சிறுமியிடம் பாலியல் வன்முறையான கொடூரமாக உள்நுழைத்தல் ஒன்றிற்கு மேற்பட்ட நபரால் செய்யப்பட்டது என்பதில் ஐயமில்லை. 10 வயது சிறுமி (12 வயதிற்கு கீழ் உள்ளவர்) பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டத்தின் பிரிவு 5(எம்)-க்குள் வருவார். அத்தகைய குற்றங்கள் எழுகிறபோது, அவை கடுமையாகக் கையாளப்படவேண்டும் என்ற சட்டமன்றத்தின் எண்ணத்தை இன்றைய தீர்ப்புரையானது பின்பற்றியுள்ளது. உண்மையில், திருத்தத்தின் நோக்கங்களும், காரணவிளக்க உரைகளும் முக்கியத்துவம் வாய்ந்தவை, அவை பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:-

> "3. எனினும், குழந்தைகள் பாலியல் குற்ற வழக்குகளில் கடந்தகால சமீபத்திய நிகழ்வுகள் அக்குற்றங்கள் புரிவோர், பாதிக்கப்படும் இளையவர்களை நோக்கிய அவர்களது காட்டுமிராண்டித்தனமான அணுகுமுறை நாட்டில் அதிகரித்து வருவதை எடுத்துக்காட்டுகிறது. குழந்தைகள், அவர்கள் இளவயது, எளிதில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய உடலமைப்பு மற்றும் வாழ்க்கை மற்றும் சமுதாயம் குறித்த அனுபவமின்மை ஆகியவற்றால் எளிதில் இரையாகிவிடுகின்றனர். இச்சமநிலையற்ற சக்தி கொடூரமான செயல்களுக்கு வழிகோலுவதுடன், அது சரிதான் என நம்பும் அளவுக்கு குழந்தையின் மனதையும் கெடுத்துவிடலாம். மேலும், தங்களுடைய குழந்தைப்பருவத்தில் பாலியல் வன்முறைக்குள்ளாகி பாதிக்கப்படும் குழந்தைகள் பின்னாளில் தங்கள் வாழ்க்கையில் மிகவும் நெறிகோணியவர்களாக ஆகிவிடுகிறார்கள். தேசிய குற்றப் பதிவுகள் துறையின் 2016-ஆம் ஆண்டுக்கான அறிக்கையானது, மேற்படி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையில் 2012-ஆம் ஆண்டைவிட 2013-ஆம் ஆண்டில் 44.7 சதவீதமும், 2013-ஆம் ஆண்டைவிட 2014-இல் 178.6 சதவீதமும் அதிகரித்துள்ளது, அதன்பிறகும் வழக்குகளின் எண்ணிக்கை குறையவில்லை.

4. மச்சி சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் சுய பாதுகாப்பின்பொருட்டு கொலை புரிந்தவர் கொல்லப்படவேண்டுமென சமுதாயம் உணர்கிறபோது, சமுதாயம், மரண தண்டனைக்கு ஒப்பளித்து, பாதுகாப்பு வழங்கியதை நன்கு திரும்பப்பெற்றுக்கொள்ளலாம். ஆனால், சமுதாயம் ஒவ்வொரு வழக்கிலும் அவ்வாறு செய்யாது. அது, "அரிதினும் அரிதான வழக்குகளில்", அதன் ஒட்டுமொத்த மனச்சான்றினை மிகவும் அதிர்ச்சியடையச் செய்கிறபோது அவ்வாறு செய்யலாம், நீதிய அதிகார மையத்தைக் கையில் வைத்திருப்பவர்கள் மரண தண்டனை குறித்து தங்களுடைய தனிப்பட்ட கருத்தை கணக்கிற்கொள்ளாமல், விருப்புவெறுப்பின்றி அதனை தம்வசம் வைத்திருக்கவே அது எதிர்பார்க்கும் என்று தீர்மானித்தது. தேவேந்தர் பால் சிங் -எதிர்- மாநில அரசு (என்.சி.டி., டெல்லி) (ஏ.ஐ.ஆர். 2002 எஸ்.சி. 1661) என்ற வழக்கில் அதே ஒப்பீட்டமைவு உச்ச நீதிமன்றத்தால் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது, அதில் ஒட்டுமொத்த சமுதாயத்தின் மனச்சான்றை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்குகிறபோது, நீதிமன்றம் மரண தண்டனையைத் தீர்வளிக்கவேண்டும்.

5. மேற்படி பின்னணியில், நாட்டில், குழந்தை பாலியல் குற்றங்கள் அதிகரித்துவரும் போக்கைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகளை உறுதியுடன் எடுக்கவேண்டியிருப்பதால், மேற்படி சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், குற்றம் புரிபவர்களை தடுக்கும்வண்ணம் பல்வேறு குற்றங்களுக்கான தண்டனைகளை அதிகப்படுத்துவதற்காகவும், ஒரு குழந்தைக்கு பாதுகாப்பான, இடர்க்காப்பான மற்றும் கண்ணியமான குழந்தைப்பருவத்தை உறுதிப்படுத்துவதற்கான வகைமுறைகளை வகுத்தமைக்கவேண்டும். ஒரு குழந்தையை உள்ளடக்கிய பாலியல் தொடர்பான பொருள்வகைகள் எவ்வடிவத்திலிருந்தாலும் அதுகுறித்து நியமிக்கப்படும் அதிகாரியிடம் அறிக்கையளிக்கவோ அல்லது அதை நீக்கவோ அல்லது அழிக்கவோ செய்யும் முறைக்கான விதிகளை வகுத்துரைக்கவும் அது மத்திய அரசுக்கு அதிகாரமளிக்கிறது."

25. இச்சூழ்நிலைகளில், ஒரு இளவர் பெண்ணை வன்புணர்வு செய்து, இரு குழந்தைகளையும் மிகக் கொடூரமானமுறையில் எப்படி செய்யமுடியுமோ அப்படி கொலைசெய்ததில் குற்றம் மிகவும் பயங்கரமாகச் செய்யப்பட்டதாக விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் கண்டறிந்து, குற்றத்தினைக் கடுமையாக்கும் சூழ்நிலைகளை, குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து,

சரியான தண்டனையைக் கொடுத்துள்ளன. செய்த குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர் சிறிதும் வருத்தப்படவில்லை, மேலும், மேல்முறையீட்டாளரை விடுவித்தால், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையின் 84-ஆவது பத்தியில் குறிப்பிட்டுள்ளவாறு, செய்யப்பட்ட குற்றத்தின் தன்மையைப்பார்த்தால், அவர் அத்தகையதொரு குற்றத்தை மீண்டும் செய்யமாட்டார் எனச் சொல்வதற்கு சாத்தியமேயில்லை. மேல்முறையீட்டாளர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்ற பொருண்மையை, இவ்வழக்கின் பொருண்மைகளின்படி பார்த்தால், அவர், அத்தகையதொரு கொடூரமான குற்றம் புரிந்ததற்கு வருந்துவதாகப் பொருளாகாது. அவர் ஒப்புதல் வாக்குமூலத்துடன் உறுதியாக நிற்காமல், சிறுமியை வன்புணர்வு செய்ததிலும், அவளையும், அவளது தம்பியையும் கொலை செய்ததிலும் அவர் ஈடுபட்டதாகச்சொல்லும் அப்பகுதியை மட்டும் மறுக்கப்பட்ட வாக்குமூலமென பொய்யாகத் தெரிவித்தார். அதன்விளைவாக, நாங்கள் மரண தண்டனையை உறுதிசெய்து மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்கிறோம்.

மாண்புமிகு நீதியரசர் திரு. ஆர். எ.ஃப். நாரிமன்

மாண்புமிகு நீதியரசர் திரு. சூர்ய காந்த்

புது தில்லி,

01.08.2019.

இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண்(கள்) *1174-1175/2019*

(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண்(கள்) 7581-7582/2014-லிருந்து எழுகிறது)

மனோகரன் ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

மாநில அரசு,
காவல் ஆய்வாளர் மூலமாக
வெரைட்டி உறால் காவல் நிலையம்,
கோயம்புத்தூர். ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சீவ் கன்னா:

என்னுடைய மரியாதைக்குரிய சகோதரர் நீதியரசர் ரோஹிண்டன் பாலி நாரிமன் அவர்களின் விரிவான தீர்ப்புரையில் உள்ள அனைத்து விடயங்களையும் நான் முழுமையாக ஒத்துக்கொள்கிறேன். நான், இந்திய தண்டனைச் சட்டம், 1898 (சுருக்கமாக "இ.த.ச.")-இன் பிரிவுகள் (302), 376(2)(ஊ) மற்றும் (எ) மற்றும் 201 ஆகியவற்றின் கீழான மேல்முறையீட்டாளரின் குற்றத்தீர்ப்பை உறுதிசெய்கிறேன். ஆயினும், கீழே கொடுக்கப்பட்டுள்ள காரணங்களுக்காக, மேல்முறையீட்டாளருக்கு மரண தண்டனை வழங்கவேண்டிய வழக்கு இதுவல்ல என நான் கருதுகிறேன், மேலும், அதனை ஆயுள் சிறைத்தண்டனையாக குறைத்து, அதாவது, மேல்முறையீட்டாளர், குற்றவியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 (சுருக்கமாக "கு.வி.மு.ச."), பிரிவுகள் 432 மற்றும் 433-இன் தண்டனை குறைப்புக்கு தகுதியுடையவரல்லர் என்ற நிபந்தனையுடன், அவரது வாழ்நாள்வரை சிறையில் கழிப்பதாகும்.

2. **பச்சன் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு**[1]-இல், இந்நீதிமன்றம் இ.த.ச., பிரிவு 302-இன் கீழ் கொலைக்குற்றத்திற்கான மரண தண்டனையை அரசியலமைப்பு ரீதியாக உறுதிசெய்து, உ.வி.மு.ச., பிரிவு 354(3)-இல் தண்டனைக்கான நடைமுறையை வகுத்துரைக்கையில் வகுத்துரைத்திருந்ததாவது:

> "209. மனித வாழ்வின் மாண்புக்காக உண்மையாகவும் மற்றும் தொடர்ந்து அக்கறைகாட்டுவதும் சட்டத்தின் துணையுடன் உயிரைப் பறிப்பதை எதிப்பதன் அடிப்படை நிலையாகும். மாற்று தேர்ந்தெடுப்பு சந்தேகத்திற்கிடமின்றி முடக்கப்படுகிறபோது, அது, அரிதினும் அரிதான வழக்குகளில் செய்யப்படக்கூடாது."

இவ்வாறாக, (மேற்கண்ட) **பச்சன் சிங்** வழக்கில், மரண தண்டனையின் செல்லுந்தன்மையை ஏற்றுக்கொள்கையில், இ.த.ச., பிரிவு 302-இன் கீழான குற்றங்களுக்கு ஆயுள் தண்டனை என்பது சாதாரணமாக விரும்பத்தக்க தண்டனை என்றும், முதல் விருப்பத்தேர்வான ஆயுள் தண்டனை விதிப்பது முடக்கப்படுகிறபோது, 'அரிதினும் அரிதான' வழக்குகளில் விதிவிலக்காக மட்டுமே குற்றஞ்சாட்டப்பட்டவரின் உயிரைப் பறிக்கும் மரண தண்டனை விதிக்கப்படவேண்டியது என்றும், அதற்கான தனிக் காரணங்கள் கண்டிப்பாக பதிவு செய்யப்படவேண்டுமென்றும் ஓர் அகவுரையாக அறுதியிடப்பட்டது.

3. இ.த.ச., பிரிவு 302 மற்றும் கு.வி.மு.ச., பிரிவு 354(3)-இன் வகையங்களில் அமைந்துள்ள சட்டரீதியான கொள்கை, தண்டனைத் தீர்வளிப்பின்போில் நீதிமன்றத்தின் விருப்பத்தேர்வைச் செயலுறுத்தவேண்டியதாகிறது என்பதை அங்கீகரித்து, குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளின் இருப்புநிலைக் குறிப்பு வரையப்படவேண்டும், அவ்வாறு செய்கையில்,

---

1. (1980) 2 எஸ்.சி.சி. 684

குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளுக்கு முழு மதிப்பளிக்கப்படவேண்டியுள்ளது மற்றும் நீதிய விருப்பத்தேர்வு செயலுறுத்தப்படுவதற்காக குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளுக்கிடையே நியாய துலாக்கோலை பிடித்துப்பார்க்கவேண்டும் என *(மேற்கண்ட)* **பச்சன் சிங்** வழக்கில் வகுத்துரைத்திருந்தது. இத்தறுவாயில் "தனிக்காரணங்கள்" என்ற சொல்லமைப்பு, குற்றம் மற்றும் குற்றவியல் தொடர்பான விதிவிலக்கான கொடிய சூழ்நிலைகளின்பேரில் அமைந்த "விதிவிலக்கான காரணங்கள்" எனப் பொருள்படுவதாகக் கருத்துரைக்கப்பட்டது.

4. பொதுவாக குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகள் என்ற அம்சத்தின்பேரிலும், வழக்கைப் பொருண்மைச்சார்ந்த கருப்பொருளின்பேரிலும், *(மேற்கண்ட)* **பச்சன் சிங்**-இல் கருத்துரைக்கப்பட்டதாவது:

> *"206.* டாக்டர். சைதாலே, குற்றத்தினை மட்டுப்படுத்தும் காரணிகளைக் கருத்துரைத்துள்ளார்:
>
> குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகள் - மேற்படி வழக்குகளில் நீதிமன்றம் அதன் விருப்புரிமையைச் செயலுறுத்துகையில், பின்வரும் சூழ்நிலைகளைக் கணக்கிற்கொள்ளவேண்டும்:
>
> *(1)* மனரீதியாகவோ அல்லது உணர்வு பூர்வமாகவோ அதீத குழப்பத்தினால் குற்றம் புரிவது.
>
> *(2)* குற்றஞ்சாட்டப்பட்டவரின் வயது, குற்றஞ்சாட்டப்பட்டவர் இளவயதினராகவோ அல்லது வயதானவராகவோ இருந்தால், அவருக்கு மரண தண்டனை விதித்தல்கூடாது.
>
> *(3)* வன்முறை குற்றச்செயல்கள் சமுதாயத்திற்கு தொடர் அச்சுறுத்தாக அமைந்துவிடும் என்பதால் குற்றஞ்சாட்டப்பட்டவர் அவற்றை புரியமாட்டார் என்ற சாத்தியதன்மை.
>
> *(4)* குற்றஞ்சாட்டப்பட்டவர் சீர்த்திருத்தப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்படலாம் என்ற சாத்தியத்தன்மை.

குற்றஞ்சாட்டப்பட்டவர் மேற்படியுள்ள 3 மற்றும் 4-ஆம் நிபந்தனைகளை நிறைவு செய்யவில்லையென சான்றின்மூலம் அரசு மெய்ப்பித்தல்வேண்டும்.

(5) குற்றஞ்சாட்டப்பட்டவர், தான் புரிந்த குற்றம் அறமுறையானவகையில் நியாயமானதென அவர் வழக்கின் பொருண்மைகளின்படியும், சூழ்நிலைகளின்படியும் நம்புவது.

(6) குற்றஞ்சாட்டப்பட்டவர், மற்றவரின் நிர்பந்தத்தினாலோ அல்லது ஆதிக்கத்தினாலோ செயல்படுவது.

(7) குற்றஞ்சாட்டப்பட்டவர் மனரீதியாக குறையுடையவர் என்றும், அக்குறைபாடு, அவரது குற்ற நடத்தையை மதிப்பிடும் அவரது தகுநிலையை இழக்கச்செய்துவிட்டது என்று அவருக்கு நிலையைக் காட்டுதல்."

மேற்கூறிய பத்தியில் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வு குறித்த சாத்தியத்தன்மையையும், மேலும், குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூகத்திற்கு தொடர் அச்சுறுத்தலை அமைத்துதரக்கூடிய குற்றவியல் செயல்களைச் செய்யமாட்டார் என்ற சாத்தியதன்மையையும் 3 மற்றும் 4-ஆம் நிபந்தனைகள் நிறைவுசெய்யப்படவில்லை என்ற அம்சத்தையும், அரசு சான்றளிப்பதன் மூலம் நிலைநாட்டவேண்டுமென (மேற்கண்ட) **பச்சன் சிங்** வழக்கு நன்கு புலப்படுத்துகிறது.

5. **மச்சி சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு**,[2]-இல் ஒரு பக்கம் "கண்ணுக்கு கண்" எனும் கோட்பாட்டை ஆதரித்து, "சாவுக்கு சாவு" எனக்கோரும் கோட்பாட்டு ஆதரவாளர்களுக்கும், எச்சந்தர்ப்பத்திலும் சாவு வேண்டாம்" என வலியுறுத்தும் "மனிதாபிமானிகளுக்கும்" இடையேயான சச்சரவிலிருந்து 'அரிதினும் அரிதான' வழக்குகளில் மட்டுமே மரணதண்டனை விதிப்பதற்கான ஒரு கருத்தாக்கம் தோன்றியதை இந்நீதிமன்றம் விளக்கியது. நிகழ்ந்த குற்றத்திலிருந்து

---

2. (1983) 3 எஸ்.சி.சி. 470

பேரதிர்ச்சியுற்ற ஒட்டுமொத்த சமூகத்தின் மனச்சான்றும், மரண தண்டனையை தன்வசம் கொண்டுள்ள நீதிய பதவி வகிப்பவர்கள் தங்களுடைய தனிப்பட்ட விருப்புவெறுப்பின்றியோ அல்லது வேறுவகையிலோ மரண தண்டனை விதிப்பதை எதிர்ப்பார்க்கும் எனத் தீர்ப்புரை குறிப்பிடுகிறது. சமூகம், இவ்வுணர்வுகளை பின்வரும் சூழ்நிலைகளில் ஏற்கலாம் எனக் கருத்துரைக்கப்பட்டது:-

(1) மிகவும் கொடூரமாகவோ, அருவருக்கத்தக்கதாகவோ, அரக்கத்தனமாகவோ, வெறுக்கத்தக்கதாகவோ அல்லது கோழைத்தனமாகவோ கொலை செய்யப்பட்டு, அதன்பொருட்டு சமூகத்தின் தீவிரமான, அதீத கோப உணர்ச்சி கொந்தளிக்கிறபோது.

(2) முற்றிலும் வக்கிரத்தன்மையையும், கயமைத்தனத்தையும் காட்டும் உட்கருத்துடன் கொலை புரியப்படுகிறபோது. எடுத்துக்காட்டாக, வாடகை குற்றவாளியால் பணத்திற்காகவோ அல்லது பரிசுக்காகவோ கொலை புரியப்படுதல் அல்லது கொலையாளி ஆதிக்க நிலையிலுள்ளவராகவோ அல்லது நம்பிக்கைக்குரியவராகவோ இருந்து, அதற்குமாறாக ஒரு நபரின் ஆதாயத்திற்காக, கொடூரமாக கொலைபுரிதல் அல்லது தாய்நாட்டிற்கு துரோகம் செய்கிறபோது கொலை புரியப்படுவது.

(3) பட்டியல் வகுப்பினர் அல்லது சிறுபான்மை சமூகத்தைச் சார்ந்த ஒருவரை, தனிப்பட்ட காரணங்களுக்காக அல்லாமல் சமூக கோபக் கொந்தளிப்பினால் எழும் சூழ்நிலைகளிலோ அல்லது 'மருமகளை எரித்தல்' அல்லது "வரதட்சணை மரணங்கள்" என்ற சந்தர்ப்பங்களில் கொலை புரியப்படுகிறபோது அல்லது வரதட்சணையை மீண்டும் ஒருமுறை வாங்குவதற்காக, மீண்டும் திருமணம்

செய்யும் பொருட்டு அல்லது மோகத்தின் காரணமாக மற்றொரு பெண்ணை மணக்கும்பொருட்டு கொலை புரியப்படுகிறபோது.

(4) குற்றம் பெரிதளவில் இருக்கிறபோது. எடுத்துக்காட்டாக, பல கொலைகள் செய்வது அதாவது ஒரு குடும்பத்திலுள்ள அனைவரையும் அல்லது பெரும்பான்மையோரையும் அல்லது ஒரு குறிப்பிட்ட சாதி, சமூகம் அல்லது இடத்தைச் சார்ந்த அதிக எண்ணிக்கையிலான நபர்கள் கொலை புரியப்படுகிறபோது.

(5) கொலையால் பலியானவர், ஏதுமறியா குழந்தையாகவோ அல்லது உதவியற்ற பெண்ணாகவோ அல்லது வலிமையற்றவராகவோ இருந்து, அதற்கு மாறாக, கொலையாளி ஆதிக்க நிலையிலுள்ளவராகவோ அல்லது பொதுவாக சமூகத்தால் விரும்பப்படும் மற்றும் மதிக்கப்படும் ஒரு பொது நபராக இருக்கிறபோது.

மேற்கூறிய முன்மொழிவுரைகளின் துணைகொண்டு, அனைத்து சூழ்நிலைகளையும் ஒட்டுமொத்த உலகளாவிய பார்வையில் எடுத்துக்கொண்டு, 'அரிதினும் அரிதான' வழக்குகளுக்கான ஆய்வின்படி முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கான பதில்களைக் கருத்திற்கொண்டோமானால், வழக்கின் சூழ்நிலைகள், மரண தண்டனையைக் கோருவதாகவே உள்ளன, நீதிமன்றம் அவ்வாறு செய்யவே முற்படுகிறது.

6. (மேற்கண்ட) **மச்சி சிங்** வழக்கு *(மேற்கண்ட)* **பச்சன் சிங்** வழக்கின் கோட்பாடுகளை பகுப்பாய்வு செய்து, 'அரிதினும் அரிதான' வழக்குகளைத் தீர்மானிக்க, நீதிமன்றங்கள் விருப்பதிகாரத்தைச் செலுத்துகிறபோது, அவற்றால்

பதிலளிக்கப்படவேண்டிய இரட்டை கேள்விமுறை ஆய்வை அவை அடிப்படைக்கூற்றாக உரைகின்றன என்று கருத்தறிவித்தது. கேட்கப்படவேண்டிய கேள்விகளும், அதற்கான பதில்களும்:

> *(அ)* குற்றம் குறித்து வழக்கத்திற்கு மாறாக எதுவுமிருந்து, அதற்கு ஆயுள் சிறைத்தண்டனை அளித்தது போதாமல், மரண தண்டனையைக் கோருகிறது?
>
> *(ஆ)* குற்றவாளிக்கு ஆதரவாகப் பேசும் குற்றத்தினைக் கடுமையாக்கும் அனைத்து சூழ்நிலைகளுக்கும் அதிகபட்ச முக்கியத்துவமளித்த பிறகு, மரண தண்டனை விதிப்பதைத் தவிர மாற்றுவழி ஏதுமில்லை, யாதலால், குற்றம் தொடர்பான வேறேதேனும் சூழ்நிலைகளான குற்றத்தை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகள் ஏதும் இருந்தனவா?

7. *(மேற்கண்ட)* **மச்சி சிங்** என்ற வழக்கில் விவரிக்கப்பட்டுள்ள சூழ்நிலைகளைக் கவனமாக ஆய்வு செய்தால், கேட்கப்பட்ட முதல் கேள்வி தொடர்பாக பதிலளிக்கப்பட்டுவிட்டது. ஆனால், இது நீதிமன்றம் கட்டாயம் பதில் கூறவேண்டிய கேள்வி மட்டுமல்ல, மரண தண்டனையை ஆணையிடும்பொருட்டோ அல்லது உறுதிசெய்யும்பொருட்டோ இரண்டாவது கேள்விக்கும் பதிலளிக்கவேண்டும். இரண்டாவது கேள்வி, மேற்படி 3-ஆம் பத்தியில் *(மேற்கண்ட)* **பச்சன் சிங்** என்ற வழக்கிலிருந்து மேற்கோள் காட்டப்பட்ட காரணங்களைக்கொண்டு பதிலளிக்கப்படலாம். இக்காரணங்கள் குற்றத்தினை மட்டுப்படுத்தும் காரணிகளாக இருந்தாலும் விரிவானதல்ல.

8. **இராஜேஷ் குமார் -எதிர்- மாநில அரசு, டெல்லி என்.சி.டி. அரசு,**[3] மூலமாக என்ற வழக்கில், இந்திய சூழலில், குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகள் தொடர்பாக தண்டனை அமைப்பை மதிப்பிடுவதற்காக தீர்ப்புவழி சட்டங்களை இந்நீதிமன்றம் கண்டறிந்தது. தண்டனைத் தொடர்பான கேள்வியானது, குற்றத்தீர்ப்பை பெற்றுத்தரும்பொருட்டு, அரசுத்தரப்பால் முற்படுத்தப்பட்ட சான்றின் நிறையளவு, தன்மை அல்லது பண்பு ஆகியவை குறித்து மட்டுமல்லாது, அக்குறிப்பிட்ட வழக்கின் பொருண்மைகளையும், கொடுங்குற்றத்தின் தன்மையையும் மட்டுப்படுத்தக்கூடிய, தண்டனையைத் தளர்த்தும் சூழ்நிலைகள் இருப்பது குறித்தும் தீர்மானித்தல்வேண்டும், இதற்கு, 1898-ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட, **வடிவேலு தேவர் மற்றும் ஒருவர் -எதிர்- மெட்ராஸ் மாநில அரசு,**[4] என்ற வழக்கு குறிப்பீடு செய்யப்பட்டது. சான்றின் நிறையளவும், பண்பும் முதல் கேள்வியைக் குறிப்பிடுகிறது, அதேவேளையில் தண்டனைவியலில் நடப்புமுறைகளிலுள்ள தண்டனையைத் தளர்த்தும் சூழ்நிலைகளும், தண்டனை நடைமுறைகளும் இரண்டாவது கேள்வியைக் குறிப்பிடுகிறது. மரண தண்டனை தீர்வளிப்பதற்கான சட்ட வகையங்கள் தன்னியலான மாற்றத்திற்குட்பட்டுள்ளதோடல்லாமல், தண்டனை விதிப்பது குறித்த சட்டத்திலும், அதற்கு பொருந்தத்தக்க கோட்பாடுகளின்பேரிலான நீதிசார் பொருள்விளக்கத்திலும் பரிணாமவளர்ச்சி கண்டுள்ளது என்பதும் வெளிப்படை. (மேற்கண்ட) **இராஜேஷ் குமார்** என்ற வழக்கில், மரண தண்டனை என்ற

---

3. (2011) 13 எஸ்.சி.சி. 706
4. ஏ.ஐ.ஆர். 1957 எஸ்.சி. 614

தண்டனையை விதிக்கையில், குற்றவாளியின் பண்புநலன்களை நீக்கி, குற்றத்தின் தன்மையும், கொடுந்தன்மையும் மட்டுமே உரிய தண்டனை விதிப்பதற்கும், பரிசீலிப்பதற்கும் உகந்தவை என்ற கோட்பாட்டினைத் தெளிவாகவே நிராகரிக்கிறது. இவ்வாறு, தண்டனை தீர்வளிக்கையில், நீதிமன்றம், ஒரு குறிப்பிட்ட குற்றச் சூழ்நிலைகளை "முக்கியமான அல்லது சாதாரணமான" பரிசீலனைக்கு உட்படுத்தக்கூடாது என்பதோடன்றி, குற்றவாளியின் சூழ்நிலைகளையும், பண்புநலன்களையும் குறித்தும் உரிய பரிசீலனை செய்யவேண்டும். இந்நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புரையான **ராவ்ஜி என்கிற இராம் சந்திரா -எதிர்- இராஜஸ்தான் மாநில அரசு,**[5] என்ற வழக்கில், இந்நீதிமன்றத்தின் குறைந்தபட்சம் வேறுபிற ஆறு தீர்முடிவுகள் பின்பற்றப்பட்டு, உரிய தண்டனை விதிப்பதற்கு குற்றத்தின் தன்மைதான் பரிசீலனைக்குரியதேயன்றி, குற்றவாளியின் தன்மையல்ல எனக் கருத்துரைக்கப்பட்டதாகத் தீர்மானித்து, அதைப் புறந்தள்ளுவதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நீதிமன்றம், குற்றத்தினைக் கடுமையாக்கும் சூழ்நிலைகளையும் அதனை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளையும் குறிப்பிட்டு, குற்றம் புரிந்த விதத்திலுள்ள கொடூரத்தன்மையும், கொடுமையும், அதனைத் தொடர்ந்து குற்றவாளியின் நடத்தையும் தொடர்புடைய காரணியாக இருக்கலாம் என்றாலும், அவை மரண தண்டனை தீர்வளிப்பதற்கான அடிப்படையாக மட்டுமே எடுத்துக்கொள்ளாமல், மேலும் அது, முக்கியமாக நீதிமன்றத்தைத் தாக்கத்திற்குள்ளாக்கக்கூடாது என்று நீதிமன்றம் தீர்மானித்தது. மேலே மேற்கோள்

---

5. (1996) 2 எஸ்.சி.சி. 175

காட்டப்பட்ட (மேற்கண்ட) **பச்சங் சிங்** என்ற வழக்கின் தீர்ப்புரையின் 206-ஆவது பத்தியில் '3 மற்றும் 4'-இல் கூறப்பட்டுள்ள குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளைக் குறிப்பிட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவரை சீர்திருத்தி, மறுவாழ்வளிப்பதன் சாத்தியத்தின்பேரிலும், சமூகத்தை தொடர்ந்து அச்சுறுத்தும்வண்ணம் வன்முறையான குற்றச்செயல்கள் புரியமாட்டார் என்பதன்பேரிலும், உரிய தண்டனையைக் தீர்மானிக்கும்வகையில் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் சமூதாயத்தில் சீர்த்திருத்தப்படவோ அல்லது மறுவாழ்வளிக்கப்படவோ தகுதியற்றவராயிருக்கிறார் என்பதைக் காட்டுவதற்கு சான்றாதாரமும், அதை மறுக்கின்ற சில சான்றுகளும் இருக்கவேண்டும். இக்கருத்துரை பின்வரும் வாசகங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

> "74. குற்றஞ்சாட்டப்பட்டவர் சமுதாயத்தில் சீர்த்திருத்தப்படவோ அல்லது மறுவாழ்வளிக்கப்படவோ தகுதியற்றவராயிருக்கிறார் என்பதைக் காண்பிக்க சான்றேதுமில்லை என்ற உயர் நீதிமன்றத்தின் மேற்கூறிய காண்முடிவிலிருந்து தெளிவாகிறது மற்றும் உயர் நீதிமன்றம் அதை நடுநிலையான சூழ்நிலையாகப் பரிசீலித்துள்ளது. எங்களுடைய கருத்துப்படி, உயர் நீதிமன்றம் வெளிப்படையாகவே பிழைபுரிந்துள்ளது என்பதாகும். குற்றஞ்சாட்டப்பட்டவரை சமுதாயத்தில் மறுவாழ்வளிக்க இயலும், மேலும், சீர்த்திருத்தவும் தகுதியுடையவர் என்பதற்கு மாறாக மாநில அரசுக்கு சான்றளிக்காததால், இப்பொருண்மையே, நிச்சயமாக குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலையாக இருக்கிறது மற்றும் இதை உயர் நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுக்கத்தவறிவிட்டது. அதற்குமாறாக, சான்றேதுமில்லாத நிலையில், மேல்முறையீட்டாளர் சமுதாயத்திற்கு தொடர் அச்சுறுத்தல் அல்ல என்ற பரிசீலனையையும் கவனத்திற்கொள்ள உயர் நீதிமன்றம் தவறிவிட்டது. ஆகவே, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின் 78-ஆவது பத்தியில், உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டாளரின் குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளைக் குறித்து மிகவும் குறுகிய கண்ணோட்டத்துடன் எடுத்துக்கொண்டுள்ளது. மேல்முறையீட்டாளர் முதன்முறையாக குற்றம் செய்தவர் என்பதையும், அவருக்கு கவனித்துக்கொள்ளவேண்டிய குடும்பம் இருக்கிறது என்பதையும்

மட்டுமே உயர் நீதிமன்றம் பரிசீலனை செய்துள்ளது. ஆகவே, மேல்முறையீட்டாளரைப் பொறுத்தவரையில் குற்றத்தினை மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளைக் குறித்த உயர் நீதிமன்றத்தின் பார்வை மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டதாக உள்ளது என்பதற்குட்பட்டு கருத்துரைக்கிறோம்."

9. **சந்தோஷ் குமார் சதீஷ்பூஷன் பாரியார் -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு,**[6] என்ற வழக்கின் முந்தைய தீர்முடிவில், 'அரிதினும் அரிதான என்ற கருத்து, கு.வி.மு.ச.-இன் பிரிவு 354(3)-இன் கீழ் பதிவு செய்யப்படவேண்டியவையான 'தனி காரணங்கள்' என்பதன் உயிர் மூச்சாகும். இது தொடர்பாக (மேற்கண்ட) **பச்சன் சிங்** என்ற வழக்கைக் குறிப்பிட்டுக்காட்டி, மனித வாழ்வின் மாண்புக்காக உண்மையான மற்றும் இணக்கமான அக்கறையின் மீதமைகின்ற மேற்கூறிய கோட்பாடுகள், சட்டத்தின் துணைகொண்டு உயிரைப் பறிப்பதை எதிர்க்கவும், அரிதினும் அரிதான வழக்குகளிலும் மாற்றுத்தேர்வு உறுதியாக முடக்கப்படுகிறபோதும் தவிர, மரண தண்டனை தீர்வளிக்கப்படவேண்டாம் என்பதை நீதிமன்றம் வலியுறுத்தியது.

10. 'அரிதினும் அரிதான' என்ற சொல்லமைப்பு என்பது அபூர்வமானதிலும் மிகவும் அபூர்வமாக, அதாவது உச்சக்கட்ட தன்மையுடைய ஓர் அரிதான வழக்கு என நேர்த்தியாகப் பொருள்படுகிறது. சொல்லமைப்பும், சொற்களின் தேர்வும் மிகமிக குறுகிய மனப்பான்மையுடனும், அரிய விதிவிலக்குக்குட்பட்டும் உள்ளது என பொருள்படுகிறது. விதிவிலக்கற்றதாக இல்லாவிடில், சாதாரணமாக ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது, ஆயுள் தண்டனை ஐயத்திற்கிடமின்றி முடக்கப்படுகிறபோதுதான் விதியைத் தளர்த்தவும், மாற்றியமைக்கவும் செய்யலாம். அரசுத்தரப்பால் முற்படுத்தப்பட்ட பொருண்மைகளும், சான்றாதாரமும் புறக்கணிக்கப்பட்டு,

---

6. (2009) 6 எஸ்.சி.சி. 498

ஆயுள் தண்டனையைத் தெரிவுசெய்வது போதுமானதாக இருக்காது என்றும், அது முற்றிலும் அளவொவ்வாதது என்றும், ஆகவே இது 'அரிதினும் அரிதான' வகையைச் சார்ந்தது என்றும் முழுமையாக நிலைநாட்டப்பட்டால் மட்டுமே மரண தண்டனை வேண்டுரைக்கப்பட்டு, தீர்வளிக்கப்படுகிறது.

11. தண்டனை குற்றத்தடுப்பு நடவடிக்கையாக திகழ்வது குறித்த பிரச்சினையின்பேரில், *(மேற்கண்ட)* **சந்தோஷ் குமார்** என்ற வழக்கில் **சுவாமி ஷ்ரத்தானந்தா என்கிற முரளி மனோகர் மிஷ்ரா -எதிர்- கர்நாடக மாநில அரசு,**[7] ***(சுவாமி ஷ்ரத்தானந்தா-1)*** என்ற வழக்கு குறிப்பீடு செய்யப்பட்டு, வேறுபல ஆய்வுகளும் செய்யப்பட்டு கருத்துரைக்கப்பட்டதாவது:

> *"164. (மேற்கண்ட)* சுவாமி ஷ்ரததானந்தா-*1* என்ற வழக்கின் தீர்ப்புரையில் குற்றத்தடுப்பு என்ற பிரச்சினையும் இவ்வாறு விவாதிக்கப்பட்டது:
>
> *"68.* மரண தண்டனை, ஒரு குற்றத்தடுப்பு நடவடிக்கையாக விளங்குகிறது என்று சட்ட ஆணையம் *1967*-ஆம் ஆண்டு அதனுடைய அறிக்கையில் கருத்து தெரிவித்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு கூறப்படும் குற்றத்தடுப்பு நடவடிக்கைகளை, புள்ளிவிவரங்கள் மெய்ப்பிக்கவில்லை என்பதை ஒப்புக்கொண்டாலும், அந்த எண்ணிக்கைகள், யாதொன்றையும் தவறெனவும் சொல்லவில்லை."
>
> இப்பிரச்சினையின்பேரிலான பெரும்பாலான ஆராய்ச்சிகளும் குற்றத்தடுப்புச் செயலுக்கும், தண்டனையின் கடுமைக்கும் இடையேயான தொடர்பு சிக்கலானது எனத் தெரிவிக்கின்றன. கடுமைத்தன்மையும், உறுதித்தன்மையும் எவ்வாறு குற்றத் தடுப்புச் செயல்களுடன் தொடர்புடையது என்பது தெளிவில்லை. மேலும், குற்றவியல் கொள்கை என்பது உள்ளுணர்வுகளின் அடிப்படையிலானவையாக அல்லாமல் சான்றினை முன்வைப்பதன் அடிப்படையிலேயே இருக்கவேண்டும், உலக முழுவதும் இந்த ஆராய்ச்சியும் அவ்வப்போது, இதுவும் மிகத் தவறென காட்டியுள்ளது. இப்பிரச்சினையில் இந்திய குற்றவியல் நிபுணர்களால்

---

7. (2007) 12 எஸ்.சி.சி. 288

ஏதும் குறிப்பிடத்தக்கவகையில் கவனம் செலுத்தப்படாததால் மரண தண்டனை விதிப்பதன் மூலம் மனித வர்க்கத்தின் மிகவும் அடிப்படை உரிமையை தடைசெய்வதை நியாயப்படுத்துமளவுக்கு, தண்டனையின் கடுமை குற்றத்தடுப்புடன் தொடர்புடையதாக நாம் அனுமானிக்க இயலாது. அதற்கு காவல்துறையினரால் மற்றும் வழக்கிடுவோரால் செய்யப்படும் சிறந்த சேவையினாலோ அல்லது அதிகபட்சமாக மரண தண்டனை விதிப்பதைவிட குறைந்தபட்ச தண்டனை விதிப்பதாலோ குற்றத்தைக் குறைக்கும் குறிக்கோளினை அடையமுடியும்."

மேலும் கருத்துரைக்கப்பட்டதாவது:

"72. மேலும், மரண தண்டனை வழக்குகளில் வெறும் நியாயப்படுத்துதலுக்காக மட்டும் "சமூகத் தேவை" என்னும் பதத்தைப் பயன்படுத்துவதில் நீதிமன்றத்தில் ஒருமித்த கருத்தில்லை என்பதை இச்சூழலில் நாங்கள் கண்டிப்பாக சுட்டிக்காட்டவேண்டும். பரிசீலனையிலுள்ள குற்றத்தின் கடுமையினையும், தன்மையினையும் பொருட்படுத்தாது, குற்றம் மற்றும் குற்றவியல் என்ற இரண்டையும் குறித்து நீதிமன்றங்கள் திறந்த மனதுடன் குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளை ஆய்வுசெய்வதில் ஈடுபடவேண்டும் என்பதே (மேற்கண்ட) பச்சன் சிங் வழக்கில் தெளிவான கூற்றுகளில் தெரியவரும் ஆய்வாகும். மேற்குறிப்பிடப்பட்ட கருத்துரைகளின்பேரில் உணர்வுகளுக்கு இடங்கொடாமல் ஆய்வு செய்யப்படவேண்டும். வாழ்வா, சாவா என்பதன் அடிப்படையில் தீர்ப்பளிக்கையில், நீதிமன்றங்கள், மன உணர்வுகளுக்கும், உள்ளக் கிளர்ச்சிகளுக்கும் மேலாக, கண்டிப்புக்கும், நேர்மைக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளன என்பதை உறுதிசெய்யவேண்டும்."

12. (மேற்கண்ட) **சந்தோஷ் குமார்** என்ற வழக்கில், **பஞ்சி மற்றும் பலர் -எதிர்- உத்தரப் பிரதேச மாநில அரசு,**[8] மற்றும் **வஷ்ராம் நர்ஷி பாய் ராஜ்பரா -எதிர்- குஜராத் மாநில அரசு,**[9] என்ற வழக்குகள் குறிப்பீடு செய்யப்பட்டு, குற்றம் எம்முறையில் கொடூரமாகப் புரியப்பட்டது என்ற வழக்கு 'அரிதினும் அரிதான' ஒன்றா? என்று தீர்மானிப்பதற்கான ஒரே காரணமாக அமையாது எனக்

---

8. (1998) 7 எஸ்.சி.சி. 177
9. (2002) 9 எஸ்.சி.சி. 168

குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு கொலையும் கொடூரமானதாக கருதப்படுகிறது மற்றும் கொலையானது, 'அரிதினும் அரிதான' வழக்காக கருதப்படுவதற்கு பரிசீலிக்கப்படவேண்டிய கூடுதல் காரணிகளான தீவிர மனக்கசப்பை மேலோங்கச்செய்து, கொந்தளிக்கும் எண்ணங்களை அதிகரிக்கச்செய்து, பழியுணர்ச்சியையோ அல்லது பழிவாங்குவதற்கான தாகத்தை எற்படுத்துதலை உள்ளடக்கியிருக்கக்கூடிய கொலையைச் சுற்றி குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகள் இடம்பெற்றிருக்கும். **ஓம் பிரகாஷ் -எதிர்- உறியானா மாநில அரசு,**[10]-ஐ குறிப்பீடு செய்து, தீர்மானித்ததாவது:

> *"76. நீதியரசர் கே.டி. தாமஸ் அவர்கள், ஓம் பிரகாஷ் -எதிர்- உறியானா மாநில அரசு என்ற வழக்கில், "சமூகத்தின் குரலுக்கு" பதிலளிப்பதற்கும், "குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளைச் சமநிலைப்படுத்தும் பச்சன் சிங் வழக்கின் கருத்துரைக்கு ஒத்திசைவதற்குமிடையேயான வெளிப்படையான பதற்றத்தின் அடிப்படையில் ஆழ்ந்து ஆராய்ந்தார். சமூகத்தின் பொருத்தமற்ற நீர்த்துப்போகும் எதிர்ச்செயல்கள் குறித்து குறிப்பிட்டுக் கூறாது, தண்டனையளிக்கும் நீதிமன்றம் பச்சன் சிங் வழக்கினால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பது நீதிமன்றத்தின் கருத்துரையாகும்:*
>
> *7. நீதிமன்றம் சமூகத்தின் குரலுக்கு மறுமொழி உரைத்து ஒரு வெறுக்கத்தக்க குற்றத்தினை தடுக்கும் தண்டனையாக எது இருக்கக்கூடும் என்பதை தீர்வு செய்யவேண்டும் என்பது உண்மை. பெரும்பாலான குற்றவாளிகள் தண்டிக்கப்படாததால், சமூதாயத்தில் குற்றவாளிகள் அதிகரித்து வருகின்றனர் மற்றும் சட்டம், அதனுடைய தடுக்கும் ஆற்றலை இழந்துவருகிறது என்பது முற்றிலும் உண்மை. மத்தியப் பிரதேச மாநில அரசு -எதிர்- ஹியாம் சுந்தர் திரிவேதி என்ற வழக்கில் கருத்துரைக்கப்பட்டவாறு மிகைப்படுத்தப்பட்ட கூற்றினை ஒட்டி, ஒவ்வொரு நியாயமான சந்தேகத்திற்கப்பால் சான்றினை நிலைநாட்டுவது அரசுத்தரப்பால் வற்புறுத்தப்படுவதன்பேரில் குறிப்பிட்டதொரு வழக்கின் அடிப்படை உண்மைகளையும், பொருண்மைச்சார்ந்த சூழமைவினையும், வழக்கமீறிய சூழ்நிலைகளையும் புறக்கணிப்பது அவ்வப்போது நீதி*

---

10. (1999) 3 எஸ்.சி.சி. 19

வழுவுதலில் முடிவுற்று, நீதி வழங்கும் அமைப்பை சந்தேகத்திற்குரியதாக்குகிறது என்பதும் உலகறிந்த உண்மையாகும், இறுதி ஆய்வாகக்கொண்டால், ஒரு குற்றவாளி ஊக்குவிக்கப்பட்டு சமூகம் பாதிப்படைகிறது. சில சமயங்களில், குற்றவாளிகளின் உரிமைகள் மட்டுமே மனதிற்கொள்ளப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களை மறந்துவிடுகின்றனர் என்று சொல்லப்படுகிறது. இவ்வாறிருப்பினும், அரிதினும் அரிதான தண்டனையான மரண தண்டனையை விதிக்கையில், நீதிமன்றம் குற்றத்தினைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளைச் சமநிலைப்படுத்தவேண்டும் மற்றும் இது ஒவ்வொரு வழக்கின் வழக்கமீறிய பொருண்மைகளையும், சூழ்நிலைகளையும் சார்ந்திருக்கும்."

13. **யூனியன் ஆ.ப் இந்தியா -எதிர்- வி. ஸ்ரீஉறரன் என்கிற முருகன் மற்றும் பலர்,**[11] என்ற வழக்கில் அரசியலமைப்பு நீதியராயம், பல கேள்விகளை/ பிரச்சினைகளை ஆராய்ந்தது. இ.த.ச., பிரிவுகள் 53 மற்றும் 45-ஐ பொருள்விளக்கம் செய்ததன்பேரில், ஆயுள் தண்டனை என்றால் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவரின் வாழ்நாள் இறுதிவரையில் சிறையிலிருத்தல் என பொருள்படும் என முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், உரிய அரசு, கு.வி.மு.ச., பிரிவுகள் 432 மற்றும் 433-இன் கீழ் அதிகாரத்தைச் செலுத்தி, தண்டனைக் குறைப்பு என்ற முறையில் மன்னிப்பு வழங்கலாம். ஆயுள் தண்டனைக் குற்றவாளிக்கும், அரசியலமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறுகள் 72 மற்றும் 161-இன் கீழ் வகைசெய்யப்பட்டுள்ளவாறு, குடியரசுத் தலைவர் மற்றும் மாநில ஆளுநர் அவர்களால் முறைப்படியாக தண்டனை குறைக்கப்படலாம். **சுவாமி ஷ்ரத்தானந்தா(2) -எதிர்- கர்நாடக மாநில அரசு,**[12] **[சுவாமி ஷ்ரத்தானந்தா (2)]** என்ற வழக்கின் முந்தைய தீர்முடிவினை

---

11. (2016) 7 எஸ்.சி.சி. 191
12. (2008) 13 எஸ்.சி.சி. 767

ஆழ்ந்தாராய்ந்து, மேற்படி கருத்துரை சிறந்த கருத்துரையென்று ஏற்றுக்கொண்டு வாழ்நாள் முழுமையாகவோ அல்லது கு.வி.மு.ச., பிரிவுகள் 432 மற்றும் 433-இன் கீழ் தண்டனை குறைப்பின்றி குறிப்பிட்ட 14 ஆண்டுகளுக்கு மிகாமலோ ஆயுள் முழுவதும் அதாவது 'வாழ்நாள் முழுவதும்' தண்டனை அனுபவிப்பதற்காக, மரண தண்டனைக்குப் பதிலாக தனிவகை தண்டனையைப் பரிசீலிக்கலாமா? என்ற கேள்விக்கு நீதியரசர் திரு. முகமது இப்ராஉறிம் கலிபுல்லா அவர்களால் வழங்கப்பட்ட பெரும்பான்மையர் தீர்ப்புரையில் உடன்பாடாகப் பதிலளிக்கப்பட்டது. (மேற்கண்ட) **வி. ஸ்ரீஉறரன்** என்ற வழக்கில் பெரும்பான்மையர் கருத்தறிவித்ததாவது:

> "68. மேற்படி விவரங்களின் பின்புலத்தில் பாதிக்கப்பட்டவரின் தரப்பிலிருந்து பார்த்து, மேற்படி மேல்முறையீட்டாளரின் வழக்கை, ஒருவர் தீர்மானித்தால், அவர் தயக்கமின்றி மரண தண்டனை விதிக்கக்கூடும் என எந்தவித தயக்கமுமின்றி சொல்லலாம். அத்தகையதொரு கொடூரமான குற்றம் புரிந்த குற்றவாளியால் பாதிக்கப்படும் எந்தவொரு மனிதனின் எதிர்வினை என அதனை அழைக்கலாம். சாதாரண மனிதனின் கருத்துப்படி, அதனை எதிர்வினை அல்லது பிரதிபலித்தல் என்றுங்கூட அழைக்கலாம். சட்டவிதி மேலோங்கியிருக்கும் ஓர் ஒன்றுபட்ட சமுதாயத்தில், மனித இனத்தின் ஒவ்வொரு நடத்தையும் சரியோ, தவறோ ஆய்வுக்குட்படுத்தியதன் அடிப்படையில் பின்பற்றப்படும் நன்கமையப்பெற்ற கோட்பாட்டில், எவரையும் தண்டிக்கவோ அல்லது பரிசளிக்கவோ ஆழ்ந்தாராய்ந்தளிக்கப்பட்ட கோட்பாடுகள், தொடர்புடைய நபர், அவரது (ஆண் அல்லது பெண்) கடந்த கால நடத்தை, ஒருவர் எப்பின்னணியில் வளர்க்கப்பட்டார், அடிப்படையான கல்வியறிவு, ஒருவர் வளர்க்கப்பட்ட சுற்றுச்சூழல்கள், சமூகப் பின்னணி, அடிப்படை ஆதாரம், ஏதேனும் செயல் செய்யப்பட்டபோது அல்லது நிறைவேற்றப்பட்டபோது அச்சமயத்தில் மேலோங்கி நிற்கும் சூழ்நிலைகள், தீவிரமான முன் திட்டம் ஏதுமிருந்ததா? இது ஒரு தனி நபர் செயல்பாடா? அல்லது தனிப்பட்ட செயல்பாடா? அல்லது எவரேனும் தூண்டுதலினால் நிகழ்ந்ததா? அல்லது அச்செயல் நிகழப்போவது அறியாவண்ணம் நிகழ்ந்ததா? மேலும் இதுபோன்ற மிகப்பல காரணிகளைக் கருத்திற்கொண்டு, தொன்றுதொட்டே உருப்படுத்தப்பட்டன. இக்காரணத்திற்காகத்தான், பல்வேறு குற்றங்களையும் விவரித்து, சாட்டுரைக்கப்படும் குற்றங்கள், அக்குற்றங்கள் புரிதற்குரிய தன்மைக்கும், அளவுக்கும் பலவிதமான தண்டனைகளும் பொருந்துகின்றன என்பதை

உறுதிசெய்யும்பொருட்டு, அவற்றுடன் தொடர்புடைய அத்தண்டனைகளை வெவ்வேறான அளவில் வழங்கியும், விதிக்கப்பட்ட தண்டனைகள் தேவையை அல்லது புரியப்பட்ட குற்றத்தின் கடுமையை நிறைவுசெய்கின்றன என்பது போன்ற மிகப்பல கூறுகளை ஆக்கியமைத்து குற்றவியல் சட்டக் கோட்பாடு மேம்படுத்தப்பட்டது என நாங்கள் அறிகிறோம்.

69. மேற்படி சட்ட விதியினையும், குற்றவியல் சட்டக் கோட்பாட்டின் அறுதியிடப்பட்ட கொள்கையையும் கருத்திற்கொண்டு, மேற்படி மேல்முறையீட்டாளரின் மரண தண்டனையை எம்முறையில் தளர்த்துவது குறித்து நீதிமன்றம் கவலையைத் தெரிவித்திருந்தாலும், *14* ஆண்டுகால சிறைத்தண்டனைக்குப் பிறகு, தண்டனைக் குறைப்பு என்ற கோட்பாட்டினைப் பயன்படுத்தி மேல்முறையீட்டாளருக்கு விடுதலையளிப்பதற்கு ஏதும் வாய்ப்பிருந்தாலும், அது நீதியின் குறிக்கோளை நிறைவு செய்வதாகாது என வருந்தியது. இக்கருத்துடன், அத்தகைய இரக்கமற்ற, கல்நெஞ்சம் கொண்ட, பணத்தாசைப் பிடித்த, காமவெறி கொண்ட, கூலிப்படை கொலையாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்படாமல், அவர்கள் உயிர்பிழைத்துவாழ எவ்வாறாயினும் அனுமதிக்கப்படுவார்களாயின், அதேசமயத்தில் அவர்களின் தீய நோக்கங்களிலிருந்தும், துரோக நடத்தைகளிலிருந்தும் சாதாரண மனிதனும், எளிதில் பாதிக்கப்படுவோரும் பெருமளவில் பாதுகாக்கப்பட வேண்டியவர்களாவார்கள்....."

14. *'சம பாதுகாப்பு கூறு'* என்ற தலைப்பின் கீழ் *(மேற்கண்ட)* **சந்தோஷ் குமார்** என்ற வழக்கின் தீர்ப்புரை *(மேற்கண்ட)* **சுவாமி ஷ்ரத்தானந்தா** *(2)* என்ற வழக்கை சுட்டிக்காட்டி, அதில் நீதிமன்றம் மரண தண்டனை முறையில் மேலோங்கியிருக்கும் மனப்போக்கு" என்ற வழக்கமீறிய நேர்மைப்போக்கை குறிப்பிட்டு, பின்வரும் வாசகங்களில் பதிவு செய்திருந்தது:

"48. .....குற்றவியல் நீதிமுறை குறைபாடுடன் இணைந்திருப்பது, இந்நீதிமன்றத்தாலுமே வழங்கப்படும் தண்டனைமுறையில் ஒருமித்த கருத்தில்லாததேயாகும். பச்சன் சிங் வழக்கு அரிதினும் அரிதான வழக்குகளின் கோட்பாட்டை வகுத்துரைத்தது என்று மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளது. நடைமுறை பயன்பாட்டுக்காக மச்சி சிங் என்ற வழக்கில் கொலை வழக்குகளை தெளிவாக ஐந்து வகை கோட்பாடுகளாக உருப்படுத்தியது, மேலும் அவ்வாறு செய்கையில், மரண தண்டனை

விதிப்பதற்கான வாய்ப்பை குறிப்பிடத்தக்கவகையில் மிகுதியாக்கியது. ஆனால் பரிதாபகரமான உண்மை என்னவென்றால், பிந்தைய தீர்முடிவுகளில் அரிதினும் அரிதான வழக்கு கோட்பாடுகளோ மச்சி சிங் வழக்கு வகைப்பாடுகளோ ஒரே சீராகவும், ஒருமித்தும் பின்பற்றப்படவேயில்லை.

அலோக் நாத் தத்தா -எதிர்- மேற்கு வங்க மாநில அரசு, [*(2007) 12* எஸ்.சி.சி. *230 : (2008) 2* எஸ்.சி.சி. *(கிரி.) 264 : (2006) 13* ஸ்கேல் *467*] என்ற வழக்கில், நீதியரசர் சின்உறா அவர்கள், பல சமீபத்திய தீர்முடிவுகளிலிருந்து நல்ல பல எடுத்துக்காட்டுகளை கொடுத்துள்ளார், அதில் குற்றவாளிக்கு மரண தண்டனை அளிப்பதன்போில் ஒரே மாதிரியான பொருண்மைகளின் அடிப்படையில் இந்நீதிமன்றம் மாறுபட்ட கருத்தெடுத்தது. (பார்க்க: எஸ்.சி.சி. பக்கங்கள் *279-87*, பத்திகள் *151-78* : ஸ்கேல் பக்கங்கள் *504-10*, பத்திகள் *154-82)* நீதிமன்றங்கள் தண்டனையளிக்கும் விசயத்தில், பொருண்மைச் சூழல் ஏதோவொருவகையில் ஒரேமாதிரியாக இருப்பதாகத் தோன்றினாலும், அவை மாறுபாடாகவே செயல்படுகின்றன என்றும், மேலும், வெவ்வேறு நீதியராயங்கள் இவ்வழக்கில் வெவ்வெறான கருத்தெடுத்திருந்தன என்றும் அவர் இறுதியாகக் கருத்துரைத்தார். நீதியரசர் கட்ஜூ அவர்கள் இந்த மேல்முறையீட்டில் பிறப்பிக்கப்பட்ட தமது உத்தரவில் அலோக் நாத் தத்தா [*(2007) 12* எஸ்.சி.சி. *230 : (2008) 2* எஸ்.சி.சி. *(கிரி.) 264 : (2006) 13* ஸ்கேல் *467)* என்ற வழக்கில் மரண தண்டனை, சூழ்நிலைச் சான்றைப் பொறுத்த வழக்கில் தீர்வளிக்கப்படக்கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது என்ற தீர்முடிவுடன் தாம் ஒத்துப்போகவில்லை என்று கூறியுள்ளார். சூழ்நிலைச் சான்றைப் பொறுத்த அனைத்து வழக்குகளிலும் மரண தண்டனையைத் தவிர்க்கும் முழுமையான விதி இருக்கமுடியாது என்பதில் நீதியரசர் கட்ஜூ அவர்களின் கருத்து ஏற்புடையதாயிருக்கலாம். (அலோக் நாத் தத்தா [*(2007) 12* எஸ்.சி.சி. *230 (2008) 2* எஸ்.சி.சி. *(கிரி.) 264 : (2006) 13* ஸ்கேல் *476*-இல் இருந்தாலும் அது முழுமையான விதியாக அல்லாமல் "சாதாரணமாக"வே கூறப்பட்டுள்ளது*)*. ஆனால், பொருண்மைச் சார்ந்த விடயமாக உள்ளவையான, நீதியரசர் சின்உறா அவர்களால் மேற்கோளிடப்பட்ட எடுத்துக்காட்டுகளுக்கு மறுப்பேதுமில்லை.

50. இதே கருத்து, அம்னெஸ்டி இன்டர்நேஷனல் இந்தியா மற்றும் பீபுள்ஸ் யூனியன் பார் சிவில் லிபர்டீஸ், தமிழ்நாடு & புதுச்சேரி ஆகியவற்றால் கூட்டாக தொகுக்கப்பட்ட "லெத்தல் லாட்டரி, தி டெத் பெனால்டி இன் இந்தியா" என்றழைக்கப்படும் அறிக்கையில் மிக விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வறிக்கை, *1950*-ஆம் ஆண்டிலிருந்து *2006*-ஆம் ஆண்டு

வரையில் மரண தண்டனை வழக்குகளில் வழங்கப்பட்டுள்ள உச்ச நீதிமன்ற தீர்ப்புரைகளின் ஆய்வு செய்ததன் அடிப்படையிலானது. இவ்வறிக்கையில் முக்கிய கூறுகளில் ஒன்றாகக் கொடுக்கப்பட்டுள்ளது யாதெனில், மரண தண்டனை தீர்வளிப்பதில் சீரான நிலையும், ஒருமித்த நிலையும் நீதிமன்றத்திடம் இல்லாதது குறித்தே ஆகும்.

51. உண்மையான விடயம் யாதெனில், மரண தண்டனை என்ற பிரச்சினை அக எண்ணஞ்சார்ந்த கூறிலிருந்து விடுபடுவதல்ல மற்றும் மரண தண்டனை இந்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்படுவதோ அல்லது குறைக்கப்படுவதோ என்பது பெரும்பாலும் நீதியராயத்தை அமைக்கின்ற நீதிபதிகளில் தனிப்பட்ட விருப்பதைச் சார்ந்ததாகும்.

52. அனைத்து பெருங்குற்றங்களையும் ஒரே சீராகவும், திறம்படவும் கையாள குற்றவியல் நீதிமுறையின் இயலாமையும், தண்டனை வழங்குமுறையில் நீதிமன்றத்தால் சீரான நிலை பின்பற்றப்படாமையும் முடிவில் குறிப்பிடத்தக்க ஏற்றத் தாழ்வுக்கு வழிவகுத்துவிடும். ஒரு பக்கம் குறிப்பிட்ட சில வழக்குகளில் தண்டனைத் தீர்ப்பு பெற்ற கொலையாளி, நீதிமன்றத்தால் அவரது மரண தண்டனையை உறுதிசெய்வதன்பேரில் தூக்குமேடைக்கு அனுப்பப்படுவதாகத் தெரிகிறது, மற்றொரு பக்கம் இதேப்போன்று அல்லது மிகப்பெரும் அதிர்ச்சியூட்டும்வகையில் கொலைபுரியும் கொலையாளி, தண்டனைகள் அளிப்பதில் நீதிமன்றத்தால் உறுதித்தன்மை கடைபிடிக்கப்படாததன் காரணமாக அவரது மரண தண்டனையிலிருந்து உயிர்பிழைத்து கொள்கிறார் அல்லது குற்றவியல் நீதிமுறையிலுள்ள குறைபாடுகள் காரணமாக மோசமான குற்றவாளி தண்டனையிலிருந்து நழுவிச்செல்ல அனுமதிக்கப்படுகிறார். இவ்வாறு இந்த ஒட்டுமொத்த பெரும் விவகாரம் சீரற்றதாகவும், ஏற்றத்தாழ்வுடனும் உள்ளது, மேலும் இது குற்றவியல் நீதி வழங்குமுறையில் ஒரு குறைபாடான பிரதிபிம்பத்தை அளிக்கிறது. இந்த நிலைமை இந்நீதிமன்றத்திற்கு கவலைக்குரிய விசயமாகும் மற்றும் இது தீர்வு செய்யப்படவேண்டியதாகும்.

53. இவையெல்லாம், மேல்முறையீட்டாளரின் மரண தண்டனையை உறுதிசெய்வதற்கு எங்களைத் தயங்கவைக்கும் பெரும் பிரச்சினைகளாகும்."

15. (மேற்கண்ட) **வி. ஸ்ரீஉறரன்** என்ற வழக்கின் தீர்ப்புரையின் சிறப்புப் பகுதி மேற்படி திறனாய்வைக் குறிப்பிட்டு, கடும் வேதனையையும் முழுமையாகக் குறித்துக்கொண்டு, மரண தண்டனை வழங்குவதில் சீரானநிலை இல்லாமையும்,

உறுதியின்மையும், உள்ள நிலைமையும், அதன் குறைபாடுகளும் மிகவும் கவலைக்குரியவை எனக் கருத்துரைக்கப்பட்டது. அதன்பிறகு, இந்நீதிமன்றம் பல வழக்குகளில், மரண தண்டனையை அங்கீகரித்து, அதற்குள் கவனத்தைத் திருப்புவதைவிட ஓர் இடைவழியாக ஆயுட்காலம் வரை அல்லது தண்டனைக் குறைப்பின்றி 14 ஆண்டுகளுக்கு மிகாமல் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்கோ சிறைத்தண்டனை விதித்திருந்தது, ஆயுள் தண்டனை என்றால் ஒரு நபரை ஆயுட்காலம் முழுவதும் சிறைப்படுத்துவதாகும். நீதிமன்றம், மேற்சொன்ன உத்தரவிடுவதன் மூலமோ, நிபந்தனையுடன் சிறைத்தண்டனை விதிப்பதன் மூலமோ, சட்டரீதியான செயல்நடவடிக்கை மூலம் தண்டனைக் குறைப்பு வழங்க தடை செய்வதாலோ அல்லது வரையறைக்குட்படுவதாலோ சட்டத்தை மீறலாகாது.

16. இவ்வாறு (மேற்படி) **சுவாமி ஷ்ரத்தானந்தா** (2)-இல் ஆயுள் தண்டனை 14 ஆண்டுகளுக்கு மிகாமலும் தண்டனைக் குறைப்புக்கான விண்ணப்பித்தலுக்கு அப்பாலும் இருக்கக்கூடும் என்பதை நீதிமன்றம் குறிப்பிடுமிடத்து, தனிவகை தண்டனை இருக்கலாம் என்ற அகவுரையை சிறந்த தீர்ப்புரை பகுதி அங்கீகரித்தது. நீதிமன்றம், 20-25 ஆண்டுகள் தண்டனைகளை தீர்வளிப்பதன் மூலம் உரிய அரசின் தண்டனைக் குறைப்பு அதிகாரத்தை வகுத்துரைக்கமுடியாது என்று **சங்கீத் மற்றும் ஒருவர் -எதிர்- உறரியானா மாநில அரசு,**[13] என்ற வழக்கின் இந்நீதிமன்றத்தின் முந்தைய தீர்ப்புரை நீக்கப்பட்டது. தீர்ப்புரையில் அத்தகைய உத்தரவுகள், அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 72 மற்றும் வகுமுறைக்கூறு 161-இன் கீழ் வகைசெய்யப்பட்டவாறு தண்டனைக் குறைப்பு, தண்டனையில் மாற்றம்,

---

13. (2013) 2 எஸ்.சி.சி. 452

கருணை போன்ற இன்னும் பிறவற்றைக் கோரும் உரிமையை எம்முறையிலும் தடைசெய்யாது.

17. குற்றவியல் மேல்முறையீடு எண் *379/2009*-இன் மறு ஆய்வு மனு *(குற்றவியல்)* எண் *308/2011*-இல் **முகமது மன்னன் என்கிற அப்துல் மன்னன் -எதிர்- பீகார் மாநில அரசு** என்ற வழக்கில் *2019*-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் *4*-ஆம் நாளிட்ட மூவரமர் நீதியராயத்தின் தீர்முடிவில், மறுஆய்வு மனுவை அனுமதிக்கையில், புரியப்பட்ட குற்றத்தின் கொடூரத்தன்மையைப் பரிசீலித்து, அதிலுள்ள மனுதாரர் ஆயுள் தண்டனை அதாவது அவரது இயற்கையான மரணம் வரையில் தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும், தண்டனைக் குறைப்பு ஏதும் வழங்கப்படாது என்றும் உத்தரவிட்டு, மரண தண்டனையைக் குறைத்தது. *(மேற்கண்ட)* **முகமது மன்னன்** என்ற வழக்கில், **தக்கு மற்றும் பலர் -எதிர்- மகாராஷ்டிர மாநில அரசு,**[14] மற்றும் **மொகிந்தர் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு,**[15] உட்பட பல வழக்குகளைக் குறிப்பிட்டுக்காட்டியபிறகு, 'அரிதினும் அரிதான' என்ற கோட்பாட்டின்பேரிலும், அதன் பொருந்துகையின்பேரிலும், அது தீர்மானித்ததாவது:

> 'அரிதினும் அரிதான' என்ற கோட்பாடு இரு அம்சங்களுக்கு உட்படுகிறது, மேலும் இரு அம்சங்களும் நிறைவு செய்யப்படுகிறபோதுதான் மரண தண்டனை விதிக்கப்பட முடியும். முதலாவதாக, வழக்கு தெளிவாக 'அரிதினும் அரிதான' என்ற எல்லைக்குள் வரவேண்டும், இரண்டாவதாக, மாற்றுத் தேர்வு சந்தேகத்திற்கிடமற்றவகையில் முடக்கப்படுகிறபோதாகும். பச்சன் சிங் வழக்கில், மாற்று தண்டனையான ஆயுள் தண்டனை பயனற்றதாகி, எந்த நோக்கத்தையும் நிறைவேற்றாது எனும்போது, தண்டனையளிப்பதற்கு கடைசி ஆயுதமாக மரண தண்டனையை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகக் கருத்துரைக்கப்பட்டது."

---

14. (1977) 3 எஸ்.சி.சி. 68
15. (2013) 3 எஸ்.சி.சி. 294

18. (மேற்கண்ட) **சந்தோஷ் குமார்** வழக்கில், 48-ஆவது சட்ட ஆணையத்தின் அறிக்கை குறிப்பீடு செய்யப்பட்டு, ஒரு குற்றவாளியின் பண்புநலன்கள் மற்றும் சமூக-பொருளாதாரம் தொடர்பான தகவலின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அது சேகரிக்கப்பட்டு, நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்படவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

19. **முல்லா -எதிர்- உத்தரப் பிரதேச மாநில அரசு,**[16] என்ற வழக்கில், குற்றம் மற்றும் குற்றவாளி தொடர்புடைய சமூக-பொருளாதார காரணிகள் பரிசீலிக்கப்படவேண்டும் என பின்வரும் வாசகங்களில் தீர்மானிக்கப்பட்டது:

> "80. தண்டனையளிப்பதில் நீதிசார்ந்த முடிவெடுப்பதில் அதிகமாக விட்டுப்போன துரதிருஷ்டவசமான மற்றொரு காரணி, குற்றத்திற்கு வழிகோலிய சமூக-பொருளாதார காரணிகளாகும். பொருளாதார சீர்கேடு, ஒழுக்கக்கேட்டை நியாயப்படுத்துகிறது என எக்கட்டத்திலும் நாங்கள் கருத்துரைக்கவில்லையென்றாலும், இவ்வுலகில் அத்தகைய காரணிகள் ஒரு நபரை குற்றம் புரிய வழிகோலலாம் என்பதை நிச்சயமாக அங்கீகரிக்கிறோம். 48-ஆவது சட்ட ஆணையத்தின் அறிக்கையும் இது தொடர்பாக சிந்தனைசெய்தது. ஆகவே, சமூக-பொருளாதாரக் காரணிகள் குற்றத்தை தளர்த்திவிடாது என்றாலும் அவை மட்டுப்படுத்தும் காரணியாக அதாவது குற்றத்தைச் சீர்ப்படுத்தும் திறனளிக்கும் காரணிகளாக இருக்கலாம் என நாங்கள் நம்புகிறோம். தனது பொருளாதார பின்னடைவு காரணமாக குற்றம் புரிகிற ஒரு குற்றவாளி பொரும்பாலும் திருந்திவிடுகிறார் என தவறாகக் குறிப்பிட்டுவிடலாகாது. இந்நீதிமன்றம் முந்தைய பல தருணங்களிலும் திருந்துவதற்கான அவரது திறன், மரண தண்டனை நேர்வுகளில் ஒரு மட்டுப்படுத்தும் காரணியாகிறது என தீர்மானித்துள்ளது.
>
> 81. தற்போதைய வழக்கில், குற்றவாளி மிகவும் ஏழ்மையான பின்புலம் உடையவர். மேல்முறையீட்டாளர்களின் பின்புலத்தின்பேரில், அவர்களின் கடந்தகாலம் குறித்து நாங்கள் உறுதியாக அறியாவிடினும் அவர்கள் இக்கொடூரமான குற்றங்களைப்

---

16. (2010) 3 எஸ்.சி.சி. 508

> பணத்திற்காக அறிவின்றி புரிந்துள்ளனர் என்ற ஒரு விடயம் எங்களுக்கு தெளிவாகிறது. அவர்களின் செயல்களால் நாங்கள் அதிர்ச்சியுற்றாலும், அவர்களை காலப்போக்கில் ஏன் திருத்திவிடமுடியாது என்பதற்கான காரணத்தை நாங்கள் அறியவில்லை."

குற்றவாளியின் சமூக-பொருளாதாரக் கூறுகளை, குற்றவியல் நீதி நிர்வாகத்தின் துணைகொண்டு பார்த்தால், அவை தொடர்புடையதாகக் கருதலாம், குறிப்பாக மரண தண்டனை தொடர்பாக சட்ட ஆணையம், அதன் 262-ஆவது அறிக்கையில் பின்வரும் கருத்துகளைக் கூறியிருந்தது:

> "7.1.6. நாட்டில் குற்றவியல் நீதி நிர்வாகம் கடும் நெருக்கடியில் உள்ளது என ஏராளமான குழு அறிக்கைகளும் உச்ச நீதிமன்ற தீர்ப்புரைகளும் அங்கீகரித்துள்ளன. வாய்ப்பு வளங்கள் இல்லாமை, காலாவதியான முறைகளில் புலனாய்வு செய்தல், அளவிற்கதிகமான காவற்படை, திறனற்ற அரசுத்தரப்பு மற்றும் போதாத சட்ட உதவி போன்ற சில பிரச்சினைகள் இவ்வமைப்பைச் சூழ்ந்துள்ளன. மரண தண்டனை இச்சூழமைவிற்குள் இயங்குவதால் அதே அமைப்புசார்ந்த மற்றும் முறைசார்ந்த தடைகளினால் பாதிப்படைகிறது. மரண தண்டனை வழங்குதல் இவ்வாறு தவறானதாகவும், தவறாகப் பயன்படுவதற்கு எளிதில் இலக்காகக் கூடியதாகவும் இருக்கிறது. மேலும் இவ்வமைப்பின் பொருந்தாத கருத்துகள், மாறாக செயல்படும் குற்றவியல் நீதிமுறைக்குள் தங்களது உரிமைகளுக்கு ஆதரவாக திறம்பட வாதிடுவதற்கு வழிவகையின்றி இருப்பவர்களான, சமூகரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் ஓரங்கட்டப்பட்டவர்களுக்கெதிராக சரிசமமற்றதாக செயல்படுகிறது."

20. தற்போதைய வழக்கின் பொருண்மைகளுக்கு நாம் வருவோமானால், 7-லிருந்து 10 வயதுடைய ஏதுமறியா இரு குழந்தைகள் தங்களது உயிரை இழந்துவிட்டதால் குற்றம் அல்லது குற்றச் செயல் மிருகத்தனமானது, இரக்கமற்றது மற்றும் கொடுமையானது என்பதை ஒருவர் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும், மேலும் அச்சிறுமி, மேல்முறையீட்டாளரால் மற்றும் மோகனகிருஷ்ணனால் (தற்போது இறந்துவிட்டார்) இரக்கமற்றமுறையில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டாள்

என்பதைக் காண்பிக்க உறுதியான மருத்துவ மற்றும் பிற சான்றுகளும் உள்ளன. அதன்பிறகு, குழந்தைகளுக்கு விஷம் கொடுக்கப்பட்டு, இறந்துபோவதற்கு கால்வாய்க்குள் தூக்கியெறியப்பட்டனர். தவறே செய்யாதவர்களான சிறு குழந்தைகள் அடைந்த வேதனையும், கடுந்துயரமும் பெற்றோர்கள் மற்றும் பாட்டியின் சொல்லவொண்ணாத துயரமும் அளவிடற்கரியது. மதிப்பிட இயலாதது மற்றும் என்றுமே நிலைத்துநிற்கக்கூடியவையாகும். தண்டனை கடுமையானதாகத்தான் இருக்கவேண்டும் இருப்பினும், மரண தண்டனை தீர்வளிப்பதற்கு நாம் இரண்டாவது கேள்வியை ஆராய்ந்து பதிலளிக்கவேண்டும் அதாவது மட்டுபடுத்தும் சூழ்நிலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, கடுமையான சூழ்நிலைகளைச் சமநிலைப்படுத்தி, ஆயுள் சிறைத்தண்டனை முடக்கப்பட்டுள்ளதா? என்பதை தீர்மானிக்கவேண்டும். அதற்குப்பிறகுதான் வழக்கு 'அரிதினும் அரிதான' வகையின்கீழ் வரும். அவ்வாறு செய்கையில், (மேற்கண்ட) **வி. ஸ்ரீஉறரன்** என்ற வழக்கில் உள்ள பெரும்பான்மையர் கருத்தை நாம் கணக்கிலெடுத்துக்கொண்டு, ஆயுள் சிறைத்தண்டனை அளவொவ்வாததாகவோ அல்லது போதாததாகவோ இருப்பதாகக் கருதப்படுமிடத்து தண்டனைக் குறைப்புக்கு உரிமை ஏதுமின்றி, நீதிமன்றம் ஆயுள் சிறைத்தண்டனையை, அதாவது அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 72 மற்றும் 161-இன் கீழ் செயலுறுத்தப்படலாமென்கிற அதிகாரத்திற்குட்பட்டு, தண்டனைக் குறைப்புக்கு வழியின்றி ஆயுள் முழுவதும் சிறைத்தண்டனை அனுபவிக்க உத்தரவிடலாம்.

21. (மேற்கண்ட) **முகமது மன்னன் என்கிற அப்துல் மன்னன்** என்கிற வழக்கில், அரசுத்தரப்பு சூழ்நிலைச் சான்றை முன்னிட்டு, நியாயமான சந்தேகத்திற்கப்பால் குற்றத்தை மெய்ப்பிப்பதில் வெற்றியடைந்திருக்கும் நேர்வுகளில்

மரண தண்டனை தீர்வளிக்கப்படவேண்டுமா என்பதன்பேரில் தீர்வழிச் சட்டத்திற்கு விரிவான குறிப்பீடு உள்ளது. **இராம் தியோ பிரசாத் -எதிர்- பீகார் மாநில அரசு,**[17] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை குறிப்பீடு செய்யப்பட்டது, அதில் சான்றின் தரமும், மரண தண்டனை என்ற பிரச்சினையைப் பரிசீலிப்பதற்குரிய காரணியாக இருந்தன எனக் கருத்துரைத்து, *(மேற்கண்ட)* **சந்தோஷ் குமார்** மற்றும் *(மேற்கண்ட)* **ரமேஷ் மற்றும் பலர்** என்ற வழக்குகளில் முந்தைய தீர்ப்புரைகளும் குறிப்பீடு செய்யப்பட்டது. நம்முன் எதிர்க்கப்படும் தீர்ப்புரை, **தி கலெக்டர் ஆ.ப் கஸ்டம்ஸ், மெட்ராஸ் மற்றும் பலர் -எதிர்- டி. பூர்மால்,**[18] என்ற வழக்கிலிருந்து பின்வருமாறு மேற்கோளிடப்பட்டுள்ளது:-

> *"30. .....அவற்றுள் ஒன்று, அரசுத்தரப்பு அல்லது துறை அதனுடைய வழக்கை, நிரூபிக்கத்தகுந்த அளவுக்கு துல்லியமான கணக்கீட்டுடன் நிரூபிக்கத் தேவையில்லை; மேலும், சரிநுட்பமாக இருக்கும் அனைத்தும் போலியானது, என பேராசிரியர் பிரட் நயம்பட உரைப்பதைப்போன்று அனைத்து மனித விவகாரங்களிலும் முழுமையான நிச்சயத்தன்மை என்பது ஒரு கட்டுக்கதையாகும். முழுமையான சான்று என்ற கற்பனை உலகத்தை அடையமுடியாது என்பதால், சட்டம், அதற்காக இந்த அன்றாட உலகில் சாத்தியத்தை செயல்முறையாக அமைத்துக்கொள்வதை ஏற்கிறது. அரசுத்தரப்பு சாத்தியமற்றதை மெய்ப்பிக்கவேண்டுமென சட்டம் கோரவில்லை. பகுத்தறிவுள்ள ஒரு மனிதன் பிரச்சினையிலுள்ள பொருண்மை இருப்பது குறித்து அச்சாத்தியத்தின் அடிப்படையில் நம்பலாம் என்று அத்தகையதோர் அளவுகொண்ட சாத்தியத்தை நிலைநாட்டவே சட்டம் கோருகிறது. அதனால் சட்டப்படியான சான்று தேவையான முழுநிறைவான சான்று அல்ல; அவ்வப்போது இது ஒரு பகுத்தறிவுள்ள மனிதன், வழக்கின் சாத்தியக்கூறுகளை மதிப்பிடுவதேயன்றி வேறொன்றுமில்லை."*

---

17. (2013) 7 எஸ்.சி.சி. 725
18. (1974) 2 எஸ்.சி.சி. 544

22. தற்போதைய வழக்கில் சூழ்நிலைச் சான்றின் அடிப்படையிலான வழக்குகளுக்கு பொருந்தத்தக்க கோட்பாட்டினை ஆராய்ந்து பதிலளிக்கவேண்டிய தேவையில்லையென்றாலும், நான், நீக்கப்படவேண்டிய சான்றுகளின்பேரில் சில கருத்துரைகளைக் கூற விரும்புகிறேன். இது, மேல்முறையீட்டாளரால் கொடுக்கப்படும் தன்விருப்பமான ஒப்புதலுரையின் உண்மையான முக்கியத்துவத்தையும், தனிச்சிறப்பையும் தெரிவிக்கிறது.

23. தற்போதைய வழக்கின் பொருண்மைச்சார்ந்த கருப்பொருளின்பேரில், உயர் நீதிமன்றம், கமலா பாய் (அ.சா.9), விஜய் ரங்கநாதன் (அ.சா.12), சி. மணிகண்டன் (அ.சா.13), ஜெயகுமார் (அ.சா.14) மற்றும் அப்சல் (அ.சா.16) ஆகியோரின் சான்றுரைகளை நம்பாமல் தள்ளுபடி செய்திருந்தது. (உயர் நீதிமன்றம், பலியானவர்களின் பாட்டியான கமலா பாயின் (அ.சா.9) சான்றுரையை பொருட்படுத்தாதிலும், பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளாததிலும் எனக்கு சிறிது ஆட்சேபனை இருக்கிறது. இருப்பினும் தற்போதைய தீர்ப்புரையின் பொருட்டு, அவரது சான்றுரை, எங்கள்முன் உள்ள மேல்முறையீட்டாளரான மனோகரனை நேரடியாக சம்பந்தப்படுத்தாததால், அந்த அம்சத்திற்குள் நான் சொல்ல வேண்டியதில்லை). மேல்முறையீட்டாளர்-மனோகரனையும், மோகனகிருஷ்ணனையும் (தற்சமயம் இறந்துவிட்டார்) இரண்டு குழந்தைகளுடன் 29.10.2010 அன்று மதியம் சுமார் 3.00 மணியளவில் பார்த்ததாகக் கூறிய ஆர். சௌந்தரராஜனின் (அ.சா.24) கூற்றையும் நாங்கள் ஏற்கவில்லை. ஒரு சந்தர்ப்ப சாட்சியாக இந்த அளவுக்கான ஆர். சௌந்திரராஜனின் (அ.சா.24) சான்றுரை விவாதத்திற்குரியதும், பிரச்சினைக்குரியதுமாகும். ஆர். சௌந்திரராஜன் அருகிலுள்ள கால்வாயில் பள்ளி

பை மற்றும் அதன் அருகாமையில் மற்றொரு பை ஒன்று மிதந்து வந்ததைக் கண்டதாகவும், அதை அவர் எடுத்த பின்னர், சின்னசுவாமியிடம் (அ.சா.2) பைகளை ஒப்படைத்ததாகவும், பின்னர் அவர் பள்ளி முதல்வர் அந்தோணி ராஜியிடம் (அ.சா.16) தொலைபேசியில் கூறினார் என்னும் அளவுக்கு ஆர். சௌந்திரராஜனும் (அ.சா.24) கூறியுள்ளார் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை. பின்னர் பள்ளி பைகள் எவருடையதோ, அந்த இரு குழந்தைகளையும் காணவில்லை என அந்தோணி ராஜ் (அ.சா.16) சின்னசுவாமியிடம் தெரிவித்தார். ஆர். சௌந்திரராஜனுக்கும் (அ.சா.24), மேல்முறையீட்டாளர்-மனோகரன் மற்றும் மோகனகிருஷ்ணனுக்கும் (தற்சமயம் இறந்துவிட்டார்) இடையே 29.10.2010 அன்று மதியம் சுமார் 3.00 மணியளவில் எதிர்பாராத சந்திப்பு நிகழ்ந்தது என்பதையும், மூவருக்கும் நடந்த உரையாடலில், அவர் குழந்தைகள் குருமூர்த்தி குன்றுக்கு சுற்றுலா அழைத்துச் செல்வதாக கூறியிருந்தனர் என்பதையும் ஆர். சௌந்திரராஜன் (அ.சா.24) சின்னசாமியிடமும் (அ.சா.22) கூறவில்லை, அந்தோணி ராஜியிடமும் (அ.சா.16) தெரிவிக்கவில்லை.

24. தமிழ்நாடு தடய அறிவியல் துறையின் நகர்வு பிரிவின் உதவி இயக்குநர் சரவணன் (அ.சா.43) அவர்களால் வேனில் கண்டெடுக்கப்பட்ட இளஞ்சிவப்பு ஜட்டியில் (சான்றுப்பொருள் சா.பொ.1) முடி உள்ளேயிருந்தவாறு அல்லது ஒட்டியிருந்தவாறு கண்டெடுக்கப்பட்டதா? என்பதில் எனக்கு சிறிது ஆட்சேபணை உள்ளது. அவராலும் புலனாய்வு அலுவலர் கனகசபாபதி (அ.சா.47) அவர்களாலும் தயார் செய்யப்பட்ட மகஜர் (சான்றாவணம் பி.5), ஜட்டியில் முடி ஒட்டியிருந்தவாறு கண்டெடுக்கப்பட்டதென குறிப்பாகத் தெரிவிக்கவில்லை. அதற்குமாறாக, மகஜரின் (சான்றாவணம் பி.5) 5 மற்றும் 7-ஆவது கலத்திலிருந்து தெளிவாவதைப்போன்று, இது "சேகரிக்கப்பட்ட முடி" எனக் குறிப்பிடுகிறது, அது எடுத்தியம்புவதாவது:-

"அது எவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதோ,
அது முஸ்கான் மற்றும் ரித்திக்கை கடத்த குற்றஞ்சாட்டப்பட்டவரால் பயன்படுத்தப்பட்ட கார், தடய அறிவியல் வல்லுநரால் சோதனை செய்யப்பட்ட பிறகு அந்த மாருதி வேன் டி.என். 37 பி.எ:ப்.2796-லிருந்து கொண்டுவரப்பட்டது"

"கைப்பற்றப்பட்ட உடைமையின் விவரங்கள்
கறைகளுடன் இருந்த "எஸ்.பி.டி. கிடா வியர் 75 செ.மீ." என அச்சிடப்பட்டிருந்த இளஞ்சிவப்பு ஜட்டி மற்றும் சேகரிக்கப்பட்ட முடி, ஏஞ்சல் பாம் பிரேசியர்ஸ் அட்டைப்பெட்டியில் வைத்த பின் ஒப்படைக்கப்பட்டது."

25. ஆயினும், அ.சா.43-ஆல் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் (சான்றாவணம் பி.38), ஜட்டியில் முடி ஒட்டிக்கொண்டிருந்ததாகக் காணப்பட்டது, அது பின்னர் தடயவியல் சோதனைக்காக புலனாய்வு அலுவலருக்கு (அ.சா.47) அனுப்பிவைக்கப்பட்டது. சான்றாவணம் பி.38 பதிவு செய்துள்ளதாவது:-

"அ) "எஸ்.பி.டி. கிட்ஸ் வியர்" "75 செ.மீ." என அச்சிடப்பட்ட எழுத்துக்கள் கொண்ட இளஞ்சிவப்பு நிற ஜட்டியின் உள் பகுதியில் சிறிய முடிக் கற்றைகளுடன் வெளிறிய பழுப்பு நிறத்தில் மாவு போன்ற கறைகளுடன் வாகனத்தின் பின்னிருக்கையின் கீழ் கண்டெடுக்கப்பட்டு, அடையாளங்காணப்பட்டு சேகரிக்கப்பட்டது. முடிக்கற்றைகள் காணப்பட்ட பகுதி குறியீடு செய்யப்பட்டு, விரிவான தடயவியல் ஆய்வுக்காக மிக முக்கியமான ஆதாரப்பொருளைப் பாதுகாப்பாக அனுப்பிவைக்கும்பொருட்டு செல்லோடேப் கொண்டு ஒட்டப்பட்டது."

26. கோயம்புத்தூர், மண்டல தடய அறிவியல் ஆய்வகம், துணை இயக்குநர் ராதிகா பாலசந்திரன் (அ.சா.48) சான்றுரைத்துள்ளதாவது, தடயவியல் சோதனைக்காக 5 முடிக்கற்றைகள் அனுப்பப்பட்டன. ஆயினும் இரண்டு முடிக்கற்றைகள் மட்டுமே டி.என்.ஏ. ஒப்பீட்டிற்காக, சென்னை தடய அறிவியல் துறை, டி.என்.ஏ. பிரிவு, துணை இயக்குநர் லஷ்மி பாலசுப்ரமணியன் (அ.சா.49) அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இவ்விரு முடிக்கற்றைகளும், டி.என்.ஏ. அறிக்கையின்படி, மேல்முறையீட்டாளர்-மனோகரனுடையதாகும்.

27. ராதிகா பாலசந்திரன் (அ.சா.48), தனது அறிக்கையில் (சான்றாவணம் பி.48), அந்த முடிக்கற்றைகள், மனிதனின் அந்தரங்க முடி என்று கருத்து தெரிவித்துள்ளார். ஆயினும் உயர் நீதிமன்றம் முன்பான அவரது குறுக்கு விசாரணையில் (இச்சாட்சி விசாரணை நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவில்லை மற்றும் அறிக்கை, கு.வி.மு.ச., பிரிவு 293-இன் கீழ் ஆவணத்தில் கொண்டுவரப்பட்டது), நீதிமன்ற கேள்விக்கு அளித்த பதிலில், அ.சா.48 கூறியிருந்ததாவது:

> "நீதிமன்றக் கேள்வி: [8]-ஆம் வகையில் காணப்படும் ஐந்து முடிக்கற்றையில் தாங்கள் கண்டறிந்தது என்ன?
> ப: அவையனைத்தும் கரும் பழுப்பு நிறத்தில் நான்கு நார் இழையாக சுருங்கிய வேருடனும், அவற்றில் இரண்டு, மெல்லிய திசு இழையுடனும் முடிக்கற்றைகளின் நுனிகள் சேதமடைந்து காணப்பட்டன.
>
> நீதிமன்றக் கேள்வி: அந்தரங்க முடிகள் தேய்க்கும்போது வேருடன் உதிருமா?
> ப: அந்தரங்க முடிகள் விறைப்பான நிலையில் சுருங்கியும், இயற்கையாகவே உதிருமாதலால் தேய்க்கும்போது உதிரக்கூடும்.
>
> நீதிமன்றக் கேள்வி: அந்தரங்க முடிகளை வேருடன் பிடுங்க முடியுமா?
> ப: ஆம்."

28. மோடியின் மருத்துவ சட்டவியல் மற்றும் நச்சூட்டவியல் என்ற புத்தகத்தின் 26-ஆவது பதிப்பு, 427-ஆம் பக்கத்திலுள்ள 13-ஆவது அட்டவணையில், பல்வேறு உடல் பாகங்களிலிருக்கும் மனித முடியின் பண்புகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தரங்க முடி 1-5 செ.மீ.-க்கு இடைப்பட்ட அளவில் சில சமயங்களில் சுருளாகவும், முறுக்காகவும், நீளத்திற்கேற்ற மாறுபாட்டினால் பெரியதாகவும் சுருண்டோ அல்லது நுனிபிரிந்தோ இருப்பதற்கிணையாக அகலமாகவோ, ஒழுங்கற்றோ இருக்கும். அக்குள் பகுதியிலுள்ள முடியும் 1-5 செ.மீ. அகலமும், சுருண்டும், நுனிபிரிந்தும் சிலசமயங்களில் வட்டமாகவும் இருக்கும்.

மேலும், தலை மண்டையிலிருக்கும் முடி சேதமடைந்த நுனிகளாக இருக்கும், அதேசமயத்தில் அந்தரங்க முடி சுருண்டோ அல்லது நுனிகள் பிரிந்தோ இருக்கும். அ.சா.48-இன் கூற்றுப்படி முடிக்கற்றைகளின் நுனிகள் சேதமடைந்து காணப்பட்டன.

29. மேல்முறையீட்டாளர்-மனோகரனுடைய முடி வேனில் கண்டெடுக்கப்பட்டது என்ற அரசுத்தரப்பு வழக்கை நான் ஏற்றுக்கொண்டாலும், இது மேல்முறையீட்டாளர்-மனோகரனின் அந்தரங்க முடி என்ற தடயவியல் அறிக்கை விவாதத்திற்குரியதாக இருக்கும். இறந்த சிறுமினுடைய ஜட்டியில் (சா.பொ.1) முடி ஒட்டிக்/பற்றிக் கொண்டிருந்ததா? என்பதும் விவாதிக்கத்தக்கது. மேற்சொன்ன ஆட்சேபணை இருப்பினும், அரசுத்தரப்பு வழக்கு சந்தேகத்திற்கப்பால் மெய்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதில் எனக்கு தயக்கமேதுமில்லை, மேலும் இதற்காக, நடுவர் முன்பாக, கு.வி.மு.ச., பிரிவு 164-இன் கீழ் மேல்முறையீட்டாளரால் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின்மீது சார்வுறப்பட்டது. ஒப்புதலுரைமீது சார்வுறப்படக்கூடாது என்ற வாதுரை சரியாகவே நிராகரிக்கப்பட்டுள்ளது. 2010-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ஆம் நாளன்று மேல்முறையீட்டாளரை கைதுசெய்து இருபது நாட்கள் கழித்து, 2010-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ஆம் நாளன்று பதிவுசெய்யப்பட்ட உறுதிமொழியில், மேல்முறையீட்டாளர் நேர்மையாக முன்வந்து, மோகனகிருஷ்ணனுடனான (தற்சமயம் இறந்துவிட்டார்) தனது நட்பை ஒப்புக்கொண்டு, அச்சிறுமியின் கைகளை கட்டிவிட்டு, வேனின் பின்னிருக்கையில் மோகனகிருஷ்ணனால் (தற்சமயம் இறந்துவிட்டார்) அவள் பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்டு, வன்புணர்ச்சி செய்யப்பட்டாள் என்று தெரிவித்தார். அச்சிறுவன் பதைபதைத்து, மனமுடைந்துவிடக்கூடும் என மேல்முறையீட்டாளர் உணர்ந்து, அவனை

கூட்டிச்சென்றுவிட்டார். திரும்பிவந்ததும், மேல்முறையீட்டாளரும் அந்த உதவியற்ற சிறுமியை பாலியல் வன்முறை செய்து வன்புணர்ச்சி செய்தார். பின்னர் அவர், அடுமனையிலிருந்து பால் வாங்கிக்கொண்டு வந்தார், விஷமான மாட்டுச் சாணப்பொடியைப் பாலில் கலந்து இரு குழந்தைகளிடமும் கொடுக்கப்பட்டது. இது வெளியில் தெரிந்து, பிடிபட்டுவிடுவோம் எனக் கவலையடைந்து, மேல்முறையீட்டாளரும், மோகனகிருஷ்ணனும் (தற்சமயம் இறந்துவிட்டார்) குழந்தைகளைக் கால்வாய்க்குள் தூக்கியெறிந்தனர், அதில் அவர்கள் மூழ்கி இறந்துவிட்டனர்.

30. கு.வி.மு.ச., பிரிவு 164-இன் கீழ் குற்றவியல் நடுவர் முன்பான உறுதிமொழியின்பேரில் செய்யப்பட்ட குற்றம் குறித்து குற்றஞ்சாட்டப்பட்டவரின் ஒப்புதலுரை வழக்கத்திற்கு மாறானது மற்றும் 'அரிதானது'. விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் இரண்டும் ஒப்புதலுரையைக் குறிப்பிட்டுள்ளன, ஆனால், அவை ஒரு மட்டுப்படுத்தும் காரணியான தண்டனைக் குறித்து வினா எழுப்புவதன்பேரில் அதன் தாக்கத்தினையும், விளைவினையும் பரிசீலித்திருக்கவில்லை.

31. விசாரணை நீதிமன்றம், தனது தீர்ப்புரையில் தண்டனை என்ற பிரச்சினையின்பேரில் கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளது:

> "கு.வி.மு.ச., பிரிவு 235(2)-இல் கோரப்பட்டவாறு தண்டனை குறித்து வினா எழுப்பியது தொடர்பாக தீர்வளிக்கப்படும் தண்டனைப்பற்றி எதுவும் சொல்வதற்கில்லை என குற்றஞ்சாட்டப்பட்டவர் சாதாரணமாகத் தெரிவித்தார். நீதிமன்றம் போதிய காரணங்களினால் திருப்தியடைந்தாலன்றி, சட்டத்தில் வகுத்துரைக்கப்பட்டுள்ள அதிகபட்ச தண்டனையைத் தீர்வளிப்பதற்கான சாத்தியமுள்ளது என்பதை குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் விளக்கி, திரும்பத்திரும்ப கேட்டபிறகுங்கூட, குற்றஞ்சாட்டப்பட்டவர் பதிலளிக்கவில்லை.

> இருப்பினும், குற்றஞ்சாட்டப்பட்டவருக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர், அரசுத்தரப்பால் சார்வுறப்பட்ட தீர்வறிக்கைகள் கையிலுள்ள வழக்கிற்கு எவ்வாறு பொருந்தத்தக்கதல்ல என்பதைக்கூறி, மேலும் குற்றஞ்சாட்டப்பட்டவரான மனோகரன், சுமார் 25 வயதுடையவர் என்றும், வயதான பெற்றோரும் குடும்பமும் உள்ளது என்றும், அவர்தான் "கருணை காட்டுவதற்காக" வேண்டிய முதல் குற்றவாளி என்றும்கூறி, இந்நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்து, தனது வாதத்தை முன்வைத்தார்."

மேல்முறையீட்டாளர், 2012-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29-ஆம் நாளன்று நீதிமன்றம் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்டபோது, அவருக்கெதிராக மெய்ப்பிக்கப்பட்ட குற்றம் குறித்து சொல்லப்பட்டு, அவர் பின்விளைவுகளைப் புரிந்துகொண்டாரா? எனக் கேட்டதன்பேரில், மேல்முறையீட்டாளர் எதுவும் சொல்வதற்கில்லை என்று தெரிவித்தார்.

32. (மேற்கண்ட) **முகமது மன்னன் என்கிற அப்துல் மன்னன்** என்ற வழக்கின் தீர்ப்புரை, கு.வி.மு.ச., பிரிவு 235(2)-இன் முக்கியத்துவத்தை சிறப்புறக்கூறுகிறது, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனைத்தீர்ப்பு அளிக்கப்படுமாயின், அத்தண்டனை குறித்த வினா எழுப்புவதன்பேரில் குற்றஞ்சாட்டப்பட்டவரை கேட்புகை செய்து நீதிமன்றம் பிரிவு 360-இன் வகையங்களுக்குட்பட்டு நடவடிக்கையெடுத்தபின்னர் சட்டத்திற்கிணங்க குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனை வழங்கவேண்டும் என அடிகோலிடுகிறது. இவ்வகையம், **சாந்தா சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு,**[19] என்ற வழக்கில் ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டதில், தரப்பினர்கள், மாநில அரசு மற்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர் ஆகியோருக்கு தண்டனை குறித்து சான்றாதாரம் முற்படுத்த வாய்ப்பளிக்காமல் முந்தைய வாதங்களை மட்டும் கேட்பதற்குட்படுவதன்

---

19. (1976) 4 எஸ்.சி.சி. 190

மூலம் தண்டனைக் குறித்து வினா எழுப்புவதன்பேரில் செய்யப்படும் கேட்புக்கு பயனற்ற வழக்கத்தைக் கொடுத்துவிடக்கூடாது.

33. தற்போதைய வழக்கில், காவல்துறையின் அதிகாரிகளின் கட்டளையினாலோ அல்லது மேல்முறையீட்டாளருக்கு எதிராக வழக்கை மெய்ப்பிக்க அரசுத்தரப்பை இயல்விக்க, அரசுத்தரப்பாலான தூண்டுதலினாலோ ஒப்புதலுரை அளிக்கப்படவில்லை. சரியாகச்சொன்னால், கட்டாயப்படுத்தியோ, தூண்டுதலினாலோ, அச்சுறுத்தலினாலோ அல்லது வாக்குறுதியின்பேரிலோ ஒப்புதலுரை பெறப்பட்டது என்பதால் அது ஏற்கத்தக்கதல்ல என்ற வாதுரையை நாங்கள் ஏற்கெனவே நிராகரித்துவிட்டோம். மேல்முறையீட்டாளர் 2010-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 19-ஆம் நாளன்று குற்றவியல் நடுவர் முன்பு முன்னிலையானபோது, ஆழ்ந்து சிந்தித்து யோசிப்பதற்கு ஒரு நாள் அவகாசம் கொடுக்கப்பட்டதால், 2010-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20-ஆம் நாளன்று சரியாகச் சிந்தித்து, மேல்முறையீட்டாளரால் தன்விருப்பமாக ஒப்புதலுரை அளிக்கப்பட்டது.

34. குற்றத்தை ஒப்புக்கொள்வது, ஒருவரது பாவத்தை ஏற்பதாகும். குற்றமானது ஒப்புதலுரை அளிக்கச்செய்ய எவ்வாறு துல்லியமாக இயங்குகிறது என்பது குறித்து உளவியலாளர்கள் தெளிவுப்படுத்தாவிட்டாலும், அது சுய-விரோதத்தன்மையை சரிசெய்ய முனைகிறது என்பது ஒரு சாத்தியக்கூறாகும். ஒரு நபர், குற்றம் புரிந்ததைத்தொடர்ந்து ஏற்படும் மனச்சான்றின் உறுத்தல், அக்குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கு பொதுவாகவே முக்கிய பங்காற்றுகிறது, ஒரு நபர் குற்றத்திற்கு வருந்தவில்லையென்றால், பொதுவாக அவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டாது, அது தீயசெயலாக கருதப்படுகிறது. ஒரு பிராயச்சித்த

செயலாக குற்றத்தை ஒப்புக்கொள்வதால், ஒரு நபர் மன்னிப்பை வேண்டிப்பெறலாம். எனினும், இது, சமூகத்திற்குள் பின்னோக்கி வைக்கும் முதல் அடியாகும் என மனநிலைப் பகுப்பாய்வு முன்மாதிரிகள் கருத்துரைத்தாலும், ஒப்புதலுரை அளிப்பது என்பது அவமானமான மற்றும் இழிவான அனுபவமாக இருக்கலாம். (பார்க்க: 'The value of confession and Forgiveness', Varl Jung)

35. இவ்வழக்கில், மேல்முறையீட்டாளர், குற்றத்தை முன்னரே ஒப்புக்கொள்வது சிறிய தண்டனைக்கு வழிகோலலாம் என்ற நம்பிக்கையால் உந்தப்பட்டார் என்றும், ஒப்புதலுரை கொடுப்பதற்கு அவரை தூண்டிய காரணிகளுள் அதுவும் ஒன்றாகும் என்று வாதிட்டிருக்கக்கூடும். எனினும், குற்றவியல் நடுவர் உட்பட அனைவரின் முன்னாலும் அக்குற்றச் செயல்களையும், தவறான செயல்களையும் ஒப்புக்கொள்ள மேல்முறையீட்டாளர் வெட்கப்படுவதாகவும், வேதனையடைவதாகவும், சமூகத்திலிருந்து தனிமைப்பட்டுவிட்டதாகவும் உணர்ந்தார் என்றுதான் எடுத்துக்கொள்ளமுடியும். மேல்முறையீட்டாளர் மன்னிப்புக்கோரும் பொருட்டு, தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்பது மற்ற காரணங்களுள் நம்பக்கூடியதாகும். அதாவது, நடுவர் முன்பு முன்னிலையாகி, குற்றத்தில் தனது நேரடி தொடர்பை ஒப்புக்கொண்டு, அதை விரிவாக உறுதிமொழியின்பேரில் தெரிவிப்பதற்கு அவருக்கு வேறேதேனும் காரணம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. (மேற்கண்ட) **பிஷ்னு பிரசாத் சின்உறா** என்கிற வழக்கில், நீதித்துறை நடுவர் முன்பும், கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழான வாக்குமூலத்தில் அமர்வு நீதிபதி முன்பாகவும் மேல்முறையீட்டாளரால் கொடுக்கப்பட்ட ஒப்புதலுரை குறித்து இந்நீதிமன்றம் குறிப்பிட்டு, இது தனது செயலுக்கு வருந்துவதைக் காட்டுவதாக கருத்துரைத்தது.

36. தீவிரவாத மற்றும் நாசவேலைகள் (தடுப்பு) சட்டம், *1987*-இன் கீழ் ஒரு வழக்கான **குர்தீப் சிங் என்கிற தீப் -எதிர்- மாநில அரசு (டெல்லி நிர்வாகம்),**[20]-இல் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல், குற்றத்தை மட்டுப்படுத்தும் ஒரு சூழ்நிலையாக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு, கருத்தறிவிக்கப்பட்டதாவது:-

> *"25.* முடிப்பதற்கு முன், சட்ட மன்றம், தக்கது மற்றும் முறையானது என கருதுமானால், அது பரிசீலிப்பதற்காக நாங்கள் எங்களுடைய மனச்சான்று உணர்வை பதிவுசெய்ய விரும்புகிறோம். குற்ற சட்டவியலில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவருக்கு தண்டனை என்பது தவறு செய்பவரை மட்டும் தண்டிப்பதோடன்றி, அதே குற்ற வட்டத்திற்குள் இருப்பவர்களுக்கும் அல்லது அக்குற்றத்தில் கைகோர்க்க எண்ணுபவர்களுக்கும் எச்சரிக்கை விடுப்பதாகும். இத்தண்டனை எதிர்காலத்தில் அத்தகைய குற்றத்தைப் புரியாமலிருக்க அத்தவறு செய்பவர்களை சீர்த்திருத்துவதற்காகவே ஆகும். முழுமையான உண்மையைக் கண்டறிவதற்கு அரசுத்தரப்பின் கடினமான பயணமும், நீண்ட நடைமுறையும், குற்றஞ்சாட்டப்பட்டவரை சில சமயங்களில் குற்றமேற்ற சாட்சிகளாக மாற்றுவதன் மூலம் அதை அடையமுடிகிறது. இது தண்டனைத் தீர்ப்பு குறித்த அச்சமின்றி உண்மையை உரைப்பதற்கு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு ஊக்கமளிக்கிறது. தற்போது ஒப்புதல் வாக்குமூலத்திற்கு மீண்டும் திரும்புமிடத்து, இது செய்த குற்றத்திற்கு மனம் வருந்துவதால் ஆழ்மனதிலிருந்து வருவதால், அக்குற்றஞ்சாட்டப்பட்டவர் சட்டத்தின் கீழ் தண்டனையின் விளைவுகளை ஏற்றுக்கொள்ள தயாராகவும் இருக்குமிடத்து அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு தண்டனையின் காலஅளவைக் குறைப்பதன் மூலம் சில தளர்வுகளை அளிப்பதால் சிறிது ஊக்கமளிக்கவேண்டிய இடம் இதுவே எனுமிடத்து, மேலும் வரவிருக்கும் அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரை, குற்றத்தை ஒப்புக்கொண்டு, உண்மையை கூறுவதற்கு அத்தகைய ஊக்கம் மாற்றிவிடும். இது குற்றஞ்சாட்டப்பட்டவர் மனமாற்றமடையவும், உண்மையை எட்டிவிடவும், குற்ற வழக்கை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவரவும் உதவலாம்."

---

20. (2000) 1 எஸ்.சி.சி. 498

மேற்படி பத்தி, **முகமது மக்பூல் தந்த்ரே -எதிர்- ஜம்மு காஷ்மீர் மாநில அரசு,**[21] என்ற வழக்கில் மேற்கோள் காட்டப்பட்டது, அதுவும் தீவிரவாத மற்றும் நாசவேலைகள் (தடுப்பு) சட்டம், 1987-இன் கீழான வழக்காகும், அதில், ஒப்புதலுரையைப் பரிசீலித்ததன்பேரில் 14 ஆண்டுகால தண்டனையானது ஏற்கெனவே அனுபவித்த காலத்திற்கு குறைக்கப்பட்டது.

37. மேல்முறையீட்டாளர் சுமார் இரண்டாண்டு கழித்து, பாலியல் வன்கொடுமை, வன்புணர்ச்சி மற்றும் குழந்தைகளை கால்வாய்க்குள் தள்ளியதில் அவருடைய தொடர்பு ஆகியவற்றை குறித்த அவரது ஒப்புதலுரையின் கடைசி பகுதியை மறுத்து, அதை கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழான அவரது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளப்படவேண்டி 2012-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25-ஆம் நாளிட்ட கடிதம் எழுதியிருந்தார் என்பது சரியே. இக்கடிதம், வேனில் அவர் இருந்தது உட்பட ஒப்புதலுரையின் முதல் பகுதியை ஒப்புக்கொண்டு, அதை உறுதிபட வலியுறுத்துகிறதென்றாலும், மேல்முறையீட்டாளர் அச்சிறுமியை வன்புணர்ச்சி செய்யவில்லை என்பதையும், அவர் அங்கு நின்றுகொண்டுதான் இருந்தார் என்பதையும் தெரிவிக்கிறது. அதன்பிறகு, மேல்முறையீட்டாளரை, மோகனகிருஷ்ணன் (தற்சமயம் இறந்துவிட்டார்) பாலத்திற்கு அருகே இறக்கிவிட்டுவிட்டு, குழந்தைகளுடன் அவர் வேனை ஓட்டிக்கொண்டு சென்றுவிட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நீதித்துறை நடுவரால் பதிவு செய்யப்பட்டதைப்போன்ற, கு.வி.மு.ச., பிரிவு 164-இன் கீழான மேல்முறையீட்டாளரின்

---

21. (2010) 12 எஸ்.சி.சி. 421

வாக்குமூலம் சரியல்ல, காவல்துறையினர், பதிவு செய்த படக்காட்சியை நடுவருக்கு போட்டுக்காட்டப்பட்டிருந்தது.

38. மேல்முறையீட்டாளரின் ஒப்புதலுரை நீதித்துறை நடுவரால் பதிவு செய்யப்பட்டது என்பதை ஒப்புக்கொண்டும், ஏற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் கு.வி.மு.ச., பிரிவு 313-இன் கீழான மேல்முறையீட்டாளரின் வாக்குமூலம் உட்பட அவரது பகுதி மறுப்பு நற்காரணங்களுக்காக நம்பப்படாதது சரியே. சொல்லப்பட்ட ஒப்புதலுரையிலிருந்து பின்வாங்குவதாலேயே, அது ஒரு பின்யோசனையாக இருந்தாலும் அல்லது மேல்முறையீட்டாளர் அவரது குற்றத்தை ஒப்புக்கொள்வதால் தூக்குத்தண்டனையைச் சந்திக்கலாம் என்ற அச்சத்தால் உந்தப்பட்ட எண்ணமாக இருந்தாலும், அதில் மனச்சான்றின் உறுத்தலோ அல்லது மனவேதனையோ இல்லை என கருதிவிடக்கூடாது என்றும் மன்னிப்பை பெறக்கோரி, கொடுக்கப்பட்ட முந்தைய ஒப்புதலுரை அவரது மரணத்திற்கு காரணமாகக்கூடும் என்றும் நான் கருத்துரைக்கிறேன். மனச்சான்றின் உறுத்தல், மனவேதனை மற்றும் மன்னித்தல் போன்ற உணர்வுக்கு உரிய மதிப்பும், மாண்பும் அளிக்கப்படாது என்ற நம்பிக்கையின்பொருட்டு மேலெழுந்த சந்தேக எண்ணத்தையும், சொன்னதை பின்வாங்கும் முயற்சியையும் புறந்தள்ளிவிடமுடியாது. இது தொடர்பான பலன் மேல்முறையீட்டாளருக்கு சொல்லவேண்டும்.

39. மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக குற்றத்தை மட்டுப்படுத்தும் பிற காரணிகள், அவரது இளவயது சம்பவத்தின்போது அவருக்கு 23 வயதாகியிருந்தது, மேலும், அவர் ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவர். அவருக்கு வயதான பெற்றோர்கள் உள்ளனர் மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு/தீர்ப்பின்படி அவர் முதல்முறை குற்றம் செய்த குற்றவாளியாவார். மேலும், மேல்முறையீட்டாளர்

மனோகரன் ஆரம்பத்தில் குழந்தைகளை தனியே கூட்டி வந்ததிலும், கடத்தியதிலும் ஈடுபடவில்லை. அவர் காரணகர்த்தாவாக இல்லை. மோகனகிருஷ்ணன் (தற்சமயம் இறந்துவிட்டார்) சிந்தித்து, திட்டமிட்டு தனியாளாக குழந்தைகளைக் கடத்த திட்டமிட்டு நிறைவேற்றினார். மேல்முறையீட்டாளர், பின்னர் அவருடன், அதாவது மோகனகிருஷ்ணனுடன் (தற்சமயம் இறந்துவிட்டார்) சேர்ந்துகொண்டார். பின்னர் மோகனகிருஷ்ணனிடம் (தற்சமயம் இறந்துவிட்டார்) பேய்த்தனம் குடியேறி, அவர் சிறுமியை பாலியல் வன்கொடுமையும், வன்புணர்ச்சியும் செய்தவேளையில் மேல்முறையீட்டாளர் அமைதியாக இருந்தார். பின்னர், மேல்முறையீட்டாளரும் பாலியல் வன்கொடுமை செய்து, வன்புணர்ச்சி செய்தார். அதற்குமேல், குழந்தைகளை கால்வாய்க்குள் எறிவதற்குமுன் அவர்களுக்கு விஷம் கொடுக்கப்பட்டது. புரியப்பட்ட குற்றம் கொடூரமானதும், பரிதாபகரமானதுமாகும்.

40. ஆகவே, நான், இ.த.ச., பிரிவுகள் 302, 376(2)(எ.ப்) மற்றும் (ஜி) மற்றும் 201-இன் கீழ் மேல்முறையீட்டாளரின் குற்றத்தீர்ப்பையும் மற்றும் இ.த.ச., பிரிவுகள் 376(2)(எ.ப்) மற்றும் (ஜி) மற்றும் 201-இன் கீழ் தீர்வளிக்கப்பட்ட தண்டனைகளையும் நிலைநிறுத்தி உறுதிசெய்கிறேன். இந்த அளவுக்கு மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்படுகிறது. மேற்படி விவாதத்தினைக் கருத்திற்கொண்டும், குற்றத்தைக் கடுமையாக்கும் மற்றும் மட்டுப்படுத்தும் சூழ்நிலைகளின்பேரிலும், என்னுடைய கருத்துப்படி, தற்போதைய வழக்கு 'அரிதினும் அரிதான' வழக்கு அதாவது மரண தண்டனை விதிப்பதைத் தவிர மாற்றுவழி ஏதுமில்லை என்ற வகையின் கீழ் வராது. இது தனிவகை வழக்குகளின் கீழ் வரும், அதில் மேல்முறையீட்டாளர், கு.வி.மு.ச., பிரிவுகள் 432 மற்றும் 433-இன் கீழ் தண்டனை குறைப்பு/மன்னிப்பு ஏதுமின்றி, ஆயுள் தண்டனை அதாவது, அவரது இயற்கையான மரணம் வரையில்

தண்டனை அனுபவிக்கவேண்டுமென உத்தரவிடப்படுகிறது. இந்தளவுக்கு நான் மேல்முறையீட்டை அனுமதிக்கிறேன்.

மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்ஜீவ் கன்னா

புது தில்லி,
01.08.2019.

.....

<u>உரிமைத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."